www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 149 ஜூன் 25 - ஜூலை 08, 1998. விலை ரூபா 10 . 00



Photo : Janak Mayadunne

# இரண்டாவது முனை யுத்தம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணச் செய்திகள்

## கொலை உத்தரவு மேலிடத்திலிருந்து வந்ததாம்!

'யாழ் ஐந்துசந்தியிலுள்ள எமது தோழர் ஒருவரது சகோதரி வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவர்கள் ஆயுதங்கள் சகிதம் வந்து குதித்தனர். வெளியிலே வருமாறு கூப்பிட்டு என்னை கைகளாலும், ஆயுதங்களாலும் தாக்கினர். என்னுடன் இருந்த பொன்ராசா என்ற தோழரையும் என்னையும் தாக்கிய படியே இழுத்து தமது வாகனத்தில் போட்டுக் கொண்டு தமது முகாமுக்கு கொண்டு சென்றனர்.

ஸ்ரீதர் தியேட்டரருகில் உள்ள ஒரு வீடொன்றை அவர்கள் ஜெயிலாக மாற்றியுள்ளனர். அதனுள்ளேயே போட்டு என்னை மாறி மாறி அடித்தனர். எங்களை எதற்காக அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, தலைமைப்பீடத்தின் உத்தரவு. உங்களை போடச்சொல்லி எங்களுக்கு ஓடர் வந்து விட்டது என்று சொன்னார்கள்.'

- இவ்வாறு கூறுகிறார் யாழ் ஈ.பி.டி.பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்ட சின்னையா திருச்செல்வம் என்ற இளைஞர். இவர் ஈ.பி.டி.பியிலிருந்து பிரிந்த பா.உக்களான ராமமூர்த்தி, ராமேஸ்வரன் ஆகியோரது மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர். இவருடன் சேர்ந்து கைதுசெய்யப்பட்ட கோணேசலிங்கம் சுந்தரலிங்கம் என்பவரையும் இவரையும் விடுதலை செய்யுமாறு பல இடங்களிலும் வந்த கோரிக்கையாலும், இராணுவ தளபதி சுசந்த மெண்டிஸ் அடிக்கடி கேட்டதாலும், பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டதால் பொலிஸ் விசாரித்தாலுமே தான் கொல்லப்படாமல் விடுதலை செய்யப்பட்டேன் என்று கூறுகிறார் அவர்.

மல்லாகம் நீதவான் திருநாவுக்கரசு அவர்கள் முன்னிலையில் விடுவிக்கப்பட்ட இவர்கள் இருவரும் சரிநிகருடன் தொடர்பு கொண்டு மேலும் தெரிவித்ததாவது ''ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் ஜெகனே எம்மிடம் நேரில் சொன்னார். உங்களை போடும்படி எமக்கு உத்தரவு மேலிடத்திலிருந்து வந்திருந்தது. பொலிஸ் வந்து கேட்டால் நாங்கள் சுய விருப்பத்தின் பேரில் ஈ.பி.டி.பி.யில் சேர்ந்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டும். உங்களை நாங்கள் விரும்பினால் இப்போதே போட்டுவிட்டு எங்களுக்கு தெரியாது என்று சொல்லி விடலாம்'' என்று கூறினார். ஜெகன் பேசிக்கொண்டிருக்கும் போதே அவரது மெய்ப்பாதுகாவலர் திலீபன் எங்களை ஆயுதத்தினால் தாக்கினார். ''நாங்கள் தப்பி ஓடினால் எங்களை சுட்டுவிடும்படி உத்தரவு போடப்பட்டிருந்ததாக பிறகு நான் கேள்விப்பட்டேன்'' என்றார் அவர்

இது தொடர்பாக நாம் பொலிசில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளோம். நீதவான் முன்னிலையில் எம்.பியின் செயலாளரும் எம்மை ஒப்படைத்த பின் நாங்கள் இங்கு அலுவலகத்தில் வந்து தங்கியிருக்கிறோம். இனியும் என்ன நடக்குமோ என்று எமக்கு தெரியாது.

இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்க உள்ளீர்கள் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அவர்கள் அளித்த பதில் ''எம்.பி. ஏதாவது முடிவு செய்வார் என்பதாகும்.''

ஈ.பி.டி.பி.யிலிருந்து விலகிய இவ்விரண்டு எம்.பிக்களுக்கும் ஈ.பி.டி.பி. தலைமைக்குமிடையில் பலத்த கசப்புணர்வு நிலவுவது தெரிந்ததே.

உள்ளூராட்சி அபிவிருத்தி இந்த நிலையில் நடந்து கொண்டிருக்கிறது.

**—மூர்த்தி**

## தாக்குதலும் மன்னிப்பும்!

யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. 07.06.1998 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் கைதடிச் சந்தி பெற்றோல் நிலையத்துக்கருகேயுள்ள இராணுவ முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர். சுமார் அரைமணிநேரம் இத்தாக்குதல் நீடித்தது. தாக்குதல் முடிந்தும் இராணுவம் முகாமை விட்டு வெளியேறவில்லை. புலிகள் பின்வாங்கிச் சென்றதும் வெளியே வந்த இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தமது வீரத்தைக் காட்டத் தொடங்கினர். வீடுவீடாகச் சென்ற இராணுவத்தினர் பொல்லுகளாலும், துப்பாக்கி முனைகளாலும் பொதுமக்களை தாக்கினர். நான்கு பேர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகினர். கணேஷா ஸ்டோர்சில் ரூ. 17 ஆயிரம் களவாடப்பட்டதுடன், சாராயக்கடையொன்றிலிருந்து சாராய போத்தல்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இச்சம்பவம் நடைபெற்ற மறுநாள் (08.06.98) வியாபாரிகள் யாரும் தங்கள் கடைகளைத் திறக்கவில்லை. இதனால் ஆத்திரமுற்ற படையினர் கடைகளைத் திறவுங்கள் அல்லது நாம் உடைத்துக் கடைகளைத் திறப்போம் என்று எச்சரித்ததுடன் சில கடைகள் மீது துப்பாக்கி பிரயோகமும் செய்துள்ளனர். இவைகள் எல்லாம் நடைபெற்ற பின் மறுநாள் (09.06.98) வர்த்தகர்களை அழைத்த இராணுவப் பொறுப்பதிகாரி கெப்டன் பண்டார சம்பவங்களுக்காக மன்னிப்புக் கோரியதுடன் தான் சம்பவம் நடைபெற்ற தினங்களில் முகாமில் இருக்கவில்லை என்று தெரிவித்துள்ளார். அத்துடன் புலிகளால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

## சொல்லும் செயலும்!

யாழ் நகர இராணுவத்தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ் யாழ் நகரிலுள்ள சோதனைச் சாவடிகளில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றில் போகிறவர்கள் ஏறிப்போகலாம் என அறிவித்துள்ளார். ஆனால், அண்மையில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளைக்கு அருகிலுள்ள சோதனைச் சாவடியில் மோட்டார் சைக்கிளில் வந்த அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு வயோதிபர் ஒருவர், மோட்டார் சைக்கிளை நிறுத்தாமல் சென்ற காரணத்திற்காக இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

## கிரனைட்டுடன் கள்ளர்கள்!

12.06.1998 அன்று கொடிகாமம் சந்தைப்பகுதியில் இடம்பெற்ற கிரனைட் தாக்குதலையடுத்து சந்தைக்குள்ளிருந்தவர்கள் அழைத்துவரப்பட்டு முழங்காலில் வைத்து தாக்கப்பட்டனர். 17.06.1998 ஆனைக்கோட்டையில் இடம்பெற்ற தாக்குதலையடுத்தும் அப்பகுதி மக்கள் சுற்றிவளைத்துத் தாக்கப்பட்டனர். கடந்தவாரமும் எழுதுமட்டுவான் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தை சுற்றிவளைத்த இராணுவம் அப்பகுதி இளைஞர்களை பாடசாலை ஒன்றுக்கு அழைத்துச் சென்று கடுமையாகத்தாக்கியுள்ளனர்.

கோப்பாயில் களவுகள் அதிகரித்துள்ளன. கள்ளர்கள் கிரனைட்டுடன் திரிவதாகக் கூறப்படுகிறது. இவர்கள் யார் என்பது இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

நீதிமன்றங்கள் இயங்கக் கூடாது என்று புலிகள் உத்தரவிட்டதைத் தொடர்ந்து கேட்பார் யாருமின்றி எல்லாம் களைகட்டத் தொடங்கிவிட்டன. குறிப்பாக நீலப்படம் காட்டுபவர்களுக்கு இது 'வாசி'யாகிப் போய்விட்டது.

## இராணுவத்தை வெளியேற்று! -தமிழர் பணிக்குழு

கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழுவின் ஆதரவில் கடந்த (19.06.1998) வெள்ளி மாலை கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் ஓர் எழுச்சிக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குமார் பொன்னம்பலம், சாந்தி சச்சிதானந்தம் உட்பட பல முக்கியஸ்தர்கள் அங்கு உரையாற்றினார்கள்.

மண்டபம் சனக்கூட்டத்தால் நிறைந்து வழிந்தது. உண்மையில் தமிழர்கள் எழுச்சி பெற்று விட்டார்களோ என்று ஆச்சரியப்படும்படி அவ்வளவு திரளான சனக் கூட்டம்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் கூட்ட நிகழ்ச்சிகளை வீடியோ மூலமும், பேச்சுக்களை ஓடியோ கசெட் மூலமும் பதிவு செய்து கொண்டிருந்தனர். ஆயினும், திட்டமிட்டபடி கூட்டம் நடைபெற்றது.

தமிழர்கள் சுதந்திரமாக ஒன்று கூடுவது என்பது அவ்வளவு இலகுவானதல்ல. பல்வேறு தடைகளுக்கும், சிக்கல்களுக்கும் முகங்கொடுத்தே இதைச் செய்ய முடியும் என்பதற்கு இக்கூட்டமும் நல்ல அறிகுறி.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் அவசரகாலச் சட்டம், வரவு செலவுத் திட்டம் போன்றவற்றை ஒரே மனதுடன் எதிர்த்து வாக்களிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் அக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

நான்கோ ஐந்தோ வாக்குகள் எடுத்து பாராளுமன்றம் சன்றாலும், அவர்கள் நமது பிரதிநிதிகள் தான். அவர்கள் தமிழர்களுக்கு துரோகம் செய்யும் கைங்கரியத்தை செய்யாமல் இருக்க வேண்டுமென்று ஆவேசமாக பலரும் கருத்துக் கூறினர்.

ஆனால், ஜனநாயகம் பற்றி இவ்வளவு ஆக்ரோஷமாக குரல் கொடுத்தவர்கள், சபையில் ஒருவர் (ஈ.பி.ஆர்.எல்.எப்பின் சார்பில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டவர் இவர். இவர் ஒரு பத்திரிகையாளரும் கூட.) தாம் கொண்டு வந்த கோரிக்கைகளை எதிர்த்துக் கையுயர்த்தி சில நிமிடம் கருத்துக் கூற இடம்கேட்டுவிட்டார் என்பதற்காக அவருக்கு இடம் கொடுக்காதது மட்டுமல்லாமல் ''இவர் ஆயிரத்தில் ஒருவர்' என்று அவரை துரோகியாக காட்டி வெளியேற்றியபோது அதிர்ச்சிக்குள்ளாகாமல் இருக்க முடியவில்லை.

பணிக்குழுவின் ஜனநாயகம் இதுதான் போலும். ஜனநாயகம், ஜனநாயக மறுப்பு என்பன பற்றி பேசுவது எவ்வளவு முக்கியமோ, அதைவிட மற்றவர் ஜனநாயகத்தை பிரயோகிக்கும் போது அதற்கு குந்தகம் இல்லாது நடப்பது முக்கியமானது.

பணிக்குழுவினருக்கு இது தெரியாமல் போனதுதான் வேதனை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமானால், தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாஷைகளை, உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் கோரிக்கைகளாக பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து அனைவரின் அங்கீகாரத்தையும் பணிக்குழு பெற்றுக் கொண்டது.

- வடகிழக்கில் தரித்திருக்கும் இராணுவம் உடனடியாக வெளியேற வேண்டும்.
- தமிழ் மக்கள் தனித்துவமுள்ள ஒரு தேசிய இனத்தவர் ஆவர்.
- வடகிழக்கு அவர்களின் தாயகப் பிரதேசம் ஆகும்.
- சுயநிர்ணய உரிமை அவர்களின் பாராதீனப்படுத்த முடியாத உரிமையாகும்.
- இலங்கையில் சகல இன மக்களுடனும் தமிழ் மக்கள் சமத்துவ அடிப்படையில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**- முத்தர்**

## சொன்னதைச் செய்!

யாழ்ப்பாணத்தில் தற்போது சோதனைச்சாவடிகளில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. குறிப்பாகப் பெண்கள் கடுமையாகச் சோதிக்கப்படுகின்றனர். பெண்கள் சோதனையிடப்படும் போது யாராவது ஆண்கள் வந்தால் அவர்களை போகச்சொல்லி அனுப்பிவிட்டு பெண்களை முதுகில் தடவி அனுப்பி வைக்கின்றனர் இராணுவத்தினர். அண்மையில், தட்டாத்தெருச் சந்தியில் பெண்மணி ஒருவரின் கைப்பையை இராணுவச் சிப்பாய் ஒருவர் கிழித்து எறிந்துள்ளார். குருநகர்ப் பகுதியில் நிற்கும் சிப்பாய் ஒருவருக்குக் கொஞ்சம் தமிழ் தெரியும். அவர் தனது சோதனைச் சாவடியால் போகிற வருகிற யுவதிகளிடம் நாங்கள் திறக்கச் சொன்னால் திறக்க வேண்டும். காட்டச் சொன்னால் காட்ட வேண்டும் என இரு பொருள் படக் கூறி வருகிறார்.

**எழுவான்**

## வெட்டி வேலை!

வடக்குப் புன்னாலைக் கட்டுவன், வகுப்பிளான் பகுதிகளில் முகாம் துப்பரவு செய்யும் பணிக்கு இராணுவத்தினர் பொது மக்களை அழைத்துச் சென்று துப்பரவு செய்விக்கின்றனர். இவர்கள் காலை ஆறு மணி முதல் நண்பகல் வரை வைத்து இராணுவத்தினரால் வேலை வாங்கப்படுகின்றனர். இவர்களுக்கு தேனீர் கூட வழங்கப்படுவதில்லை என வேலைக்குச் செல்லும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

**எழுவான்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டுநகர்: சந்தேகத்தில் கைதாகும் அதிகாரிகள்!

மட்டக்களப்பில் கடந்த இருவாரத்தில் நடைபெற்ற ஒரு சில முக்கிய நிகழ்வுகள் இவை: மட்டக்களப்பில் கடந்த இருவாரத்திலும் நான்கு அரசாங்க உத்தியோகஸ்தர்கள் இராணுவப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் விடுதலைப்புலிகளுக்கும் இவர்களுக்கும் தொடர்பு, அல்லது விடுதலைப் புலிகளும் இவர்களும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால்? என்ற இரு காரணங்களையும் அடிப்படையாக வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் நான்கு பேரும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் கடமை புரிந்தும் இவர்களுக்கு ஏற்பட்ட இந்த நிர்க்கதியை நினைக்கும் போது, இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் கடமையாற்றும் ஊழியர்களின் நிலைமை பற்றி அதாவது, எதிர்காலத்தில் அவர்களுக்கும் இராணுவத்தினரால் ஏற்படப்போகும் நெருக்கடி தொடர்பான பாதுகாப்பைப்பற்றி இன்றே சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. இவர்களின் கைது ஒருவகையில் இராணுவ ரீதியாக, அனைத்து அரச ஊழியர்களுக்கும் விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தலாக இருந்தாலும் கூட, இதன்மூலம் விடுதலைப் புலிகளை ஏதோ ஒரு வகையில் பலவீனப்படுத்தலாம் என்பதே இவர்களின் முற்றுமுழுதான நோக்கமாகும். இதற்கு இராணுவப் புலனாய்வின் வலைப்பின்னலின் ஒரு அங்கமான இராணுவத்துடன் சேர்ந்து செயற்படும் தமிழ்க் குழுக்களும் தமது பங்களிப்பை செய்துகொண்டுதான் இருக்கின்றன.

விடுதலைப்புலிகளை இலங்கை அரசு தடை செய்தது முதல் புலிகளுடன் தொடர்பு வைத்துள்ளவர்கள், தொடர்பை ஏற்படுத்திக்கொள்பவர்கள் அனைவரும் தண்டனைக்குரியவர்கள் என்று குறிப்பிட்டதன் பேரிலேயோ என்னவோ தெரியாது, மட்டக்களப்பில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருக்கும் அனைத்து மக்களும் இராணுவத்தினரால் தினமும் ஏதோ ஒரு வகையில் தண்டைக்குட்படுத்தப் படுகின்றார்கள். இவ்வாறு தண்டனைக்கு உட்பட்ட விறகு வியாபாரி பாலிப்போடி என்பவரை சந்தித்து உரையாடியவேளையில் தனது சோகக்கதையையும் கூறிவிட்டு ''நாங்கள் இருப்பது புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில். இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு வந்தால் அவர்களின் துப்பாக்கிச்சூடு. நாங்கள் இங்குவந்தாலோ இவர்களின் துவக்குகளில் அடி. இதுதான் எங்கள் தலைவிதி என்று கூறினார். இது தற்போது மாறி புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு அரச கடமைக்கு சென்றாலும் தண்டனைக்குரிய குற்றமாக மாறி வருகின்றதை அண்மைக்கால நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இதன் எதிரொலிகளே அண்மையில் நடைபெற்ற கைதுகளும்கூட. இம்மாதம் 15ம்திகதி கைது செய்யப்பட்ட மட்டக்களப்பு மாநகர சபை பொறியியலாளர் டி.கே. வில்சன் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு என்று சொல்வதை விட, விடுதலைப் புலிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டால், என்ற சந்தேகத்தின் பேரிலே கைது செய்யப்பட்டார் என்று சொல்லலாம். உண்மையில் விடுதலைப் புலிகளுக்கும் இவருக்கும் தொடர்புகள் இருந்ததற்கான வலுவான நியாயங்கள் எதுவும் இதுவரை இராணுவத்தினரிடம் இல்லை.

வில்சன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் பாடசாலைப் பருவம் மாத்தளையிலே ஓடியது. இந்த காலகட்டத்திலே இவரின் உற்ற நண்பனாகவும், குடும்ப உறவினர்களாகவும் இருந்தவர்தான் தற்போதைய மாவட்ட இராணுவ பொறுப்பதிகாரி ஷக்கி. அதன்பின் 83களின் பின் இவர்கள் தொழில் நிமித்தம் ஒருவரை ஒருவர் பிரிந்து சென்றுவிட்டனர். மீண்டும் 1990ம் ஆண்டு மட்டக்களப்பில் நடந்த ஒரு சுற்றிவளைப்பின் போது வில்சனை மேஜர் ஷக்கி இனம் கண்டு கொண்டார். இது அவருக்கு பெரிய தலையிடியைக் கொடுத்தது. வில்சன் மூலமாகவும் புலிகள் தன்னைப் பற்றிய முழு விபரத்தையும் பெறலாம் என்று அன்றிலிருந்து வில்சன் இரகசியமான முறையில் கண்காணிக்கப்பட்டு கொண்டுதான் இருந்திருக்கின்றார். இந்த வேளையில் தான் புலிகள் வில்சனை காசுக்காக மிரட்டிய ஒரு சம்பவத்தை தமிழ்க்குழு ஒன்றின் மூலம் அறிந்து அதை சாட்டாக வைத்து வில்சனுக்கும், புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகக்கூறி கைது செய்து இருக்கின்றார்கள். இல்லாவிட்டால் வில்சனை குடும்பநண்பர் என்ற முறையிலாவது அல்லது தனிப்பட்ட சினேகிதன் எனறாவது விடுதலை செய்திருக்கலாம். என்ன செய்வது பாதுகாப்பு முக்கியமானதென்றபடியால் இவரோடு மாநகர சபை வேலைப் பகுதியைச் சேர்ந்த பி. ராஜன் என்பவரும் புலிகளுக்கு ஆதரவு வழங்கியதாகவே கைது செய்யப்பட்டிருக்கின்றார். இதே திகதியில் வாழைச்சேனை காகிதாலை இராணுவத்தினரால் ஓட்டமாவடி பிரதேச செயலக நிருவாக உத்தியோகஸ்தர் எஸ்.சிவகுருநாதன், கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் விரிவுரையாளர் எம். வர்ணகுலசிங்கம் ஆகியோர் அவர்களது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் காகிதாலை முகாமில் விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்த வேளையில் மட்டக்களப்பின் முக்கிய அரசியல்வாதி ஒருவரின் செல்வாக்கினால் சிவகுருநாதன் 19ம்திகதி விடுதலை செய்யப்பட்டார். இவர் விடுதலை செய்யுப்பட்டாலும் மறைமுகமான முறையில் இராணுவத்தினரால் கண்காணிப்புக்குள்ளாகி வருகிறார்.

கடந்த 22.06.98 காலை 9.00 மணியளவில் வாழைச்சேனை விபுலானந்தா வீதியில் உள்ள வீட்டில் இராணுவத்தினர் கைக்குண்டும் வீசிவிட்டு துப்பாக்கி பிரயோகமும் செய்துவிட்டு சென்றிருக்கின்றனர். இந்நடவடிக்கையை செய்தது இராணுவத்தினரா என்ற கேள்வி எழுந்தாலும் இதனைக்கண்ட பொது மக்கள் சாட்சியங்களாக இருக்கின்றனர். இராணுவத்தினரின் செயற்பாடு, சிவகுருநாதனின் விடுதலையில் அக்கறைக் கொண்ட அந்த அரசியல் வாதிக்கு இராணுவரீதியாக இருக்கும் மறைமுகமான அச்சுறுத்தலை விடுக்கும் ஒரு நிகழ்வாகவே உள்ளது. இல்லையேல் சிவகுருநாதனை கொலை செய்வதற்கு இராணுவத்தினரிடையே மறைமுகமான எண்ணம் ஒன்று இருந்து வருகின்றது என்பதன் முதற்கட்ட நடவடிக்கையே இது என இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். சிவகுருநாதனுக்கு நடந்த இந்நிலைமை மீண்டும் ஒரு அதிகாரிக்கு ஏற்படாமல் இருக்கவேண்டுமானால் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் முன்வருவார்களா.

—சடாயு

## ஆணைக்குழுவில் அவநம்பிக்கை?

1994 பொதுத்தேர்தலில் பொ.ஐ.மு. ஆட்சிபீடம் ஏற பிரதான நம்பிக்கை தரும் வாக்குறுதியாகவிருந்தது இலஞ்ச, ஊழல் தொடர்பான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதாகும். எனினும் பொ.ஐ.மு, ஆணைக்குழு அமைப்பதில் தன் வாக்குறுதியை செவ்வனே நிறைவேற்றிய போதிலும், அதன் ஆயுட்காலத்தை 3 1/2 வருடங்களோடு முடித்துக் கொள்ள அரும்பாடுபடுகின்றதென்பது உண்மை.

தமது அரசாங்கம், அமைச்சரவை நிர்வாகப்பீடம் அனைத்தும் நேர்மை கொண்டதாக விளங்க வேண்டும், ஊழல் இலஞ்சம் புரிபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட, மக்களின் பெரும் நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்பட்ட இவ் ஆணைக்குழு தற்போது அரசாங்கத்திற்கு சிக்கல்களையும், எதிர்க்கட்சிக்கு தமது அழுத்தங்களை பிரயோகிக்கும் வாய்ப்பையும் வழங்கி வருகிறது. விளைவு, இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு உள்ளாகிய ஆணைக்குழுவின் தலைவர், ஆணையாளரை பாராளுமன்ற உறுப்பினர்கள் 80பேரின் கைச்யெழுத்துடன் பதவி விலக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது.

இவ்விடயம் பொ.ஐ.முவின் நடவடிக்கைகளை தெட்டத்தெளிவாக அறிந்தோருக்கு ஆச்சரியமளிக்காத போதிலும், ஐ.தே.க. வட்டாரத்தில் இது சிக்கலை தோற்றுவித்துள்ளதென்றே தெரிய வருகின்றது. எயார் லங்கா கொடுக்கல் வாங்கல் மூலமும், மங்கள சமரவீரவின் 'கிரடிட் கார்ட்' விடயம் மூலமும் அரசாங்கத்தை சிக்கலுக்குள்ளாக்கலாம் என எண்ணியிருந்த ஐ.தே.க. பெருத்த ஏமாற்றத்துக்கு உள்ளானது என்பது என்னவோ உண்மை தான்.

இதற்கு சிறந்த சான்று எதிர்க்கட்சித்தலைவர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதமாகும். அக்கடிதத்தில் கீழ்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

''ஜனாதிபதியும், அமைச்சரவையும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் சந்தர்ப்பத்தில் ஊழல் மற்றும் இலஞ்ச ஆணைக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு கூறுவது அடிப்படை மூல தர்மத்தை மீறுவது போன்றதாகும். ஜனாதிபதியும், அரசும் ஆணைக்குழு தொடர்பாக எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளின் மூலமும் அவர்களது அதிகாரத்தை துஷ்பிரயோகப் படுத்துகின்றனர்.''

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்பாக ஜனாதிபதி, எதிர்க்கட்சி தலைவருக்கு அனுப்பிய கடிதத்திற்குப் பதிலாக ரணில் விக்கிரமசிங்ஹ அவர்கள் மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கிய கடிதத்தை எழுதியுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் பின்வரும் விடயங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

1. 1997 ஜனவரியில் மரணமெய்திய சிவாசெல்லையாவில் இடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்காமை.
2. நெலும் கமகே அவர்களை நீக்கியபின் அவருக்கு பதிலாக எவரையும் நியமகக்காமை.
3. ஆணைக்குழுவின் உதவி அதிகாரிகள் அனைவரையும் நீக்கியமை.

எனினும், லஞ்ச ஊழல் ஆணைக்குழு மூன்றரை வருடங்களாக செயற்பட்டு வந்தபோதிலும், உருப்படியாக ஒரு காரியத்தை செய்யவில்லையெனவும் கூட 1997 டிசம்பர் 11ம் திகதி வரை இவ் ஆணைக்குழு 12கோடி 50 லட்ச ரூபாய்களை விழுங்கியுள்ளதெனவும், ஜனாதிபதி குற்றம்சாட்டியுள்ளார்.

நெலும் கமகே விவகாரம், பிரபல அமைச்சருக்கெதிரான குற்றச்சாட்டினை விசாரணை செய்யும் போதே சூடு பிடித்ததென்பது பரவலான கருத்தாகும்.

எவ்வாறாயினும், லஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்பான பொ.ஐ.மு அரசாங்கத்தின் அக்கறை கரிசனை, என்பன கேள்விக்குரியதாகவே விளங்குகிறதெனலாம்.

குறிப்பாக இலங்கை வங்கியைச் சேர்ந்த உயர் பெண் அதிகாரி ஒருவருக்கெதிரான குற்றச்சாட்டு, ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு வேட்டு வைத்தது. அது தொடர்பான கணணி கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அறிக்கை அரசுக்கு வழங்கப்பட்டபோதும் அது கவனிப்புக்குள்ளாகவில்லை. ஆணைக்குழுவின் ஒரு உறுப்பினர் இதனால் கலவரமடைந்து இராஜினாமாச் செய்தார். இறுதியில் நெலும் கமகே மேல் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அவர் ஜனாதிபதியின் கோரிக்கையின் பேரில் இராஜினாமாச் செய்தார். பின்னர் விசாரணை மேற்கொள்ளவென விருந்த 84 பொலிஸ் அதிகாரிகள் விலத்தப்பட்டனர். இதனால் விசாரணைகளை செயற்படுத்தும் செயற்குழு இல்லாமல் செய்யப்பட்டது. இவ்வாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு செயலிழக்கப் பல காரணங்கள் காணப்பட்டன.

இச்செயலிழப்புகளுக்கு பின்புலமாக இருக்கும் விடயங்கள் எவ்வாறாயினும் தற்போதுள்ள நிலைமையானது மேலும் ஊழல் லஞ்சங்கள் மலிந்த ஆட்சிக்கு வழிசெய்யவே உதவும்.

எவ்வாறாயினும் அப்பழுக்கற்ற நீதியான அரசியலை நடாத்த விரும்பும் சந்திரிகா அவர்கள், அரசியல் வாதிகளின் அப்பழுக்கற்ற தன்மையை நிரூபிக்கும் இவ் ஆணைக்குழு தொடர்பாக அவநம்பிக்கை கொண்டிருப்பதேன் என்பது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

தர்ஷி

## கைக்குவர முன்னர் நெய்க்கு விலை பேசலாமா?

ஏறத்தாழ ஒன்றரை வருடகாலமாக இழுபறி நிலையிலிருந்த திருகோணமலைச் சந்தை விவகாரம் ஒரு நல்ல முடிவுக்கு வந்து விடுவதற்குரிய அறிகுறிகள் தெரிவது போல் தோற்றமளித்தாலும், விஷயமறிந்தவர்கள் ''இது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று'' என்றுதான் இப்போதும் கூறுகிறார்கள். தினசரிப் பத்திரிகைகளில் இந்தச் செய்தி ஆர்வத்துடன் பிரசுரமாகியிருக்கின்ற போதிலும் கைக்கு வர முன்னம் நெய்க்கு எவ்வாறு விலைபேச முடியும் என்பதே இவர்கள் கேள்வியாக இருக்கிறது.

இந்தப்புதிய சந்தையானது 27.02.1997ல் அடிக்கல் இடப்பட்ட அன்றே இனவெறிச் சகதிக்குள் பெரும்பான்மையோரால் இழுத்து வீழ்த்தப்பட்டது. தேர்தலில் நின்று தோற்றுப் போன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் தயானந்த ஜயவீர என்பவர் தன்னை ஒரு சிங்கள வீரனாகக் காட்டிக்கொள்ளத் தேர்ந்தெடுத்த இடமாக இந்தச் சந்தை அமைந்தது.

ஜயவீர முதலாளிகளுக்கு முண்டு கொடுக்க, முதலாளிகள் வியாபாரிகளைத் தூண்டிவிட, சகல சிங்கள இனவெறியர்களுக்கம் சிறந்த ஆடுகளம் ஒன்று அமைத்துக்கொடுக்கப்பட்டது. ''சந்தைகளுக்குச் சொந்தக்காரர்கள் சிங்களவர்களே'' என்ற சூத்திரம் முன்வைக்கப்பட இந்த உரிமையைப் பாதுகாப்பது தேசியக் கடமை எனப் பலர் கருத, புத்தபிக்குகளின் சத்தியாக்கிரகம், வியாபாரிகளின் ஊர்வலம், மோசமான கோஷங்கள், சிங்களப் பா.உவின் தலையீடு எனப்பிரச்சினை பூதாகரமாக வளர்க்கப்பட, காவலுக்கு வந்த பொலிசாரும், இராணுவத்தினரும் தருணம் பார்த்து அரசியல் வழிகாட்டல்கள் செய்யப்போய் விஷயம் எங்கோ போய் விட்டது.

சந்தையொன்று அமைப்பதும், திறப்பதும் நகர சபையின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட விடயம். இதில் வெளியாரின் இனவாதத்தலையீடுகள் அர்த்தமற்றவை என்ற அடிப்படை விடயத்தைக்கூட அரசுக்கும் அரச படைத்தலைமைக்கும் உணர்த்த நகரசபைத் தலைவர் பெ. சூரியமூர்த்தி செய்த எத்தனங்கள் ''பதினெட்டு மாதப் பாடநெறி''யாகி விட்ட நிலையில் ஜனாதிபதிச் செயலக உதவிச் செயலர் கே.எச்.டி.கே. சமரக்கோனால் நகரசபைத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்திலேயே நல்ல அறிகுறியொன்று தெரிய ஆரம்பித்துள்ளது.

புதிய சந்தையைத் திறக்க வேண்டியதன் தேவையையும், நியாயத்தையும் வலியுறுத்தி நகரசபைத் தலைவரால் மே. 26ல் திருகோணமலை படைத்துறைத் தலைமைக்கு நீண்ட கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதன் பிரதி ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டது.

ஜுன் 2ம்திகதியிட்ட ஜனாதிபதிச் செயலகக் கடிதம் பதினாறு நாட்கள் பயணம் செய்து 18.0. 06ல் பெ. சூரியமூர்த்திக்குக் கிடைத்துள்ளது. அதில், உங்கள் கடிதம் கிடைத்தது. தங்கள் கடிதம் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு கிழக்கு மாகாணத் தலைமைச் செயலாளருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது என்ற கருத்துக் கொண்ட ஆங்கில வாசகங்கள் காணப்பட்டன.

தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவது என்பதை வைத்துக் கொண்டுதான் தினசரிப்பத்திரிகைகள் சந்தோசமாக எழுதியுள்ளன தேவை

→12

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இடதுசாரிக் கூட்டணி: ABOUT TURN! LEFT RIGHT LEFT...?



'இடதுசாரி இயக்கங்களின் ஐக்கியத்துக்குத் முதற் தடையாக இனப்பிரச்சினை அமைந்துவிடக் கூடாது. எனவே முதலில் நிபந்தனையற்ற கூட்டினை உருவாக்கிக் கொள்வோம். அதே வேளை இன்றைய பிரதான பிரச்சினையாக ஆகியிருக்கிற இனப் பிரச்சினை குறித்து தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்துவோம்."

இப்படி கடந்த யூன் 22 அன்று கொழும்புப் பொது நூலக மண்டபத்தில் "இடதுசாரிகள் ஏன் ஐக்கியப்பட வேண்டும்" என்ற தலைப்பில் நடந்த கூட்டத்தில் நவசமசமாஜக்கட்சியின் தலைவரான விக்கிரமபாகு கருணாரத்ன ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

ஜே.வி.பி.யின் ஏற்பாட்டில் நவ சமசமாஜக்கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, தியெச மார்க்சிய கல்வி வட்டம், மற்றும் ஜே.வி.பி. ஆகியவை இணைந்து இக் கூட்டத்தை நடத்தியிருந்தன.

இந்தப் புதிய கூட்டணி குறித்து முன்னைய சரிநிகரில் விரிவான கட்டுரையும் வெளியானது.

இந்தப் புதிய கூட்டணி இன்று தென்னிலங்கையில் (குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில்) பரவலான எதிர்பார்ப்பினை உருவாக்கியுள்ளமையை காணக் கூடியதாக இருக்கிறது.

## புதிய முன்னணின் தோற்றத்தின் பின்னணி

இன்றைய புதிய முன்னணியை தோற்றுவிப்பதற்கு ஜே.வி.பி.யே சகல முயற்சிகளையும் செய்தமை பல இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆச்சரியத்தை அளித்தன. காரணம், அதுவரை தனித்து நின்று கொண்டு ஏனைய இடதுசாரிக் கட்சிகளை கண்டித்தும், விமர்சித்தும், எதிர்த்தும் அவற்றிலிருந்து அந்நியப்பட்டும் இருந்து வந்த ஜே.வி.பி.யுடன் அது வரை காலம் ஏனைய இடதுசாரி சக்திகள் பல பேச்சுவார்த்தை நடத்த முயற்சி செய்த சந்தர்ப்பத்திலெல்லாம் அவை தோல்வியிலேயே முடிந்தன. ஆனால் சமீப காலமாக ஜே.வி.பி.யின் தந்திரோபாயங்களில் சில மாற்றங்கள் பல நிகழ்ந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் அம்மாற்றம் ஒரு சந்தர்ப்பவாதத்துக்கானதா அல்லது இதயசுத்தியுடன் கூடியதா என்பதில் இன்னமும் பல இடதுசாரி சக்திகளிடம் சந்தேகம் நிலவுவதாகத் தெரிகிறது.

இந்த மாற்றம் கடந்த பெப்ரவரி மாதமளவில் ஜனாதிபதி சந்திரிகா, மற்றும் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆகியோர் ஜே.வி.பி.யை மிரட்டும் வகையில் செய்திருந்த உரைகளைத் தொடர்ந்து ஜே.வி.பி மீண்டும் வேட்டையாடப்படுவதற்கான அரச பயங்கரவாதச் சூழல் உருவாகி வருவதை ஜே.வி.பி. அடையாளம் கண்டது.

## ஜே.வி.பி.யின் தீர்மானம்

இதனைத் தொடர்ந்து மார்ச் மாதம் 2ஆம் திகதியன்று ஜே.வி.பி.யின் அரசியல் குழு கூடி நாட்டில் தற்போது நிலவுகின்ற சூழல் குறித்து விவாதித்தது. அரசாங்கத்தின் மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து ஜே.வி.பி.யினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், அதன் வளர்ச்சி என்பன எதிர்கால தேர்தல் அரசியலிலும் அரசாங்கத்துக்குப் பெரும் சவாலாக இருந்து வருவதனால் அதனை அடக்குவதற்கான முஸ்தீபுகளாகவே ஜனாதிபதியின் உரைகள் அனைத்தையும் இனங்கண்டது ஜே.வி.பி. அதன் நிமித்தம் அன்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு தான் இடதுசாரி சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைக்கக்கூடிய வகையில் நிபந்தனையற்ற, நெகிழ்ச்சிவாய்ந்த பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது என்பது. ஆனால் இதில் ஒரு விடயத்தில் முக்கியமாக கவனமாக இருந்தார்கள். அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் இடதுசாரிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எந்த நிபந்தனையும் இருக்கத் தேவையில்லை. ஆனால் கூட்டணியில் அங்கம் வகிப்பதாயிருந்தால் அரசாங்கத்திலிருந்து விலகவேண்டியது அவசியமெனவும் தெரிவிக்கின்றனர். (அதன் நிமித்தம் வாசு நவ நாணயக்காரவோடும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றனர்.)

## ந.ச.ச.க.வுடன் பேச்சுவார்த்தை

ஜே.வி.பி. இது விடயமாக முதலில் நவ சமசமாஜக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்திய போது நவ சமசமாஜக் கட்சி முகம் கொடுத்த பிரச்சினை என்னவெனில், ஏற்கெனவே புதிய ஜனநாயகக் கட்சி, சோஷலிச மக்கள் கட்சி, "தியெச" மார்க்சிய கல்வி வட்டம், இலங்கை ஆசிரியர் சங்கம், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், அரசாங்க லிகிதர் சேவை சங்கம் என்பவற்றுடன் இணைந்து ஒரு இடதுசாரிக் கூட்டணியொன்றை உருவாக்கி இருந்தது. இதனை உருவாக்குவதற்கு இரண்டு வருடங்களுக்கும் மேலாக பல சுற்றுக்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். (இதற்கு "புதிய இடதுசாரி முன்னணி" (New Left Front) என பெயர் சூட்டப்பட்டுள்ள இதனை பதிவு செய்வதற்காக இன்றும் (யூன் 23) தேர்தல் ஆணையாளரை சந்திக்கப் போனதாக தெரிய வருகிறது. இந்த முன்னணியின் தலைமைக் குழுவில் கலாநிதி.விக்கிரமபாகு கருணாரத்ன, எஸ்.கே.செந்தில்வேல், சிறிதுங்க ஜயசூரிய, அப்துல் மசூர், ஆகியோரும் இதன் பொருளாளராக ஈ.தம்பையாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனுடன் இணைவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வந்த தேசிய ஜனநாயக இயக்கம் எனும் அமைப்பு யூன் 13ஆம் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் வைத்து அங்கீகரிக்கப்பட்டதுடன் அதன் தலைவரும் இந்த முன்னணியின் தலைமைக் குழுவுக்குள் அடக்கப்பட்டனர்.) இக்கூட்டணியில் ஜே.வி.பியை இணைத்துக் கொள்ள எடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அதனுடன் இணைவதில் ஜே.வி.பி. அக்கறை காட்டவில்லை. ஆனால் இன்று ஜே.வி.பி.யே முன்வந்து ஒரு கூட்டணியை அமைக்கக் கோரினாலும் கூட ஏன் புதிய இடதுசாரி முன்னணியுடன் வந்து ஜே.வி.பி. இணைய முடியாது? புதிதாக இன்னொரு கூட்டணி ஏன்? என்பன போன்ற கேளிவிகளுக்கு ந.ச.ச.க. முகம் கொடுத்தது.

ஜே.வி.பி.யின் பிரதிநிதிகளாக விமல் வீரவங்ச மற்றும் குணதிலக்க போன்றோர் ந.ச.ச.க. வின் காரியாலயத்துக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்திய போது இது குறித்து விளக்குகையில் இது கொள்கை ரீதியில் சகலவற்றிலும் உடன்பாடு கண்ட ஒரு கூட்டணியாக கட்டாயமாக இருக்க வேண்டுமென்பதில்லை. உடன்பட்டு செயற்படக்கூடிய விடயங்கள் அனைத்திலும் சேர்ந்து இயங்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் பேச்சினை தொடக்கியிருந்தனர். இடதுசாரி சக்திகள் அனைத்தோடும் எதுவித நிபந்தனையுமின்றி நாம் பேசலாம் என்றிருக்கின்றனர். ந.ச.ச.க. வினர் இதனை வரவேற்றனர். அதே வேளை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள முன்னணியானது அரசியல் கொள்கை ரீதியான உடன்பாடுகள் பலவற்றைக் கண்ட ஒன்று. ஆனால் ஜே.வி.பி.யுடனான கூட்டானது சில விடயங்களில் மாத்திரம் இணைந்து செயற்படுவதற்கானது. எதிர்காலத்தில் வெற்றிகரமாக முன்னேற முடிந்தால் இதனை விட பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கலாம் என விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிக்கின்றார்.

## தமிழ் இடதுசாரிகளா?

இதே வேளை சில தமிழ் இடதுசாரி சக்திகளுடனும் பேசலாமென்று ந.ச.ச.க.வினர் தெரிவித்திருக்கின்றனர். இடதுசாரிகளில் தமிழ், சிங்கள இடதுசாரிகள் என்றிருக்க முடியாது என ஜே.வி.பி.யினர் கூறியதை தாங்கள் ஏற்கவில்லை என்றும் வரலாற்றுப் போக்கின் காரணமாக தவிர்க்க இயலாமல் தென்னிலங்கை இடதுசாரி சக்திகள் சிங்கள இடதுசாரிக் கட்சிகளாக ஆனதன் விளைவாக "தமிழ் இடதுசாரி சக்திகள்" தோன்றியமை தவிர்க்க இயலாததாக ஆனதென தமது தரப்பில் குறிப்பிடப்பட்டதாக ந.ச.ச.க.வைச் சேர்ந்த ஒரு மத்திய குழு உறுப்பினரொருவர் சரிநிகருக்குத் தெரிவித்தார்.

## புதிய ஜனநாயகக் கட்சி

இதேவேளை புதிய ஜனநாயகக் கட்சியுடன் 22ஆம் திகதி பொதுக் கூட்டத்திற்கு முன்னர் இதனை பேசி முடிக்க தமது தரப்பில் முயற்சி செய்யப்பட்டதெனவும் அது முடியாமல் போனதெனவும், தொடர்ந்தும் முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் ஜே.வி.பி.யின் தரப்பில் சரிநிகருக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் புதிய ஜனநாயகக் கட்சியினர் பத்திரிகைகளில் வெளியிட்டு வரும் கருத்துக்களின் படி இக்கூட்டணியில் இணைவதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள் தடையாக இருப்பதாக தெரிவித்து வருகின்றனர். ஒன்று ஜே.வி.பி.யின் இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாடு, மற்றது அதன் ஜனநாயகம் குறித்த விடயம். இதில் எழுகிற பிரச்சினை என்னவெனில், 1994 பொதுத் தேர்தலின் போது பொ.ஐ.மு. ஆட்சிக்கமர்வதற்கு இதே பு.ஜ.க.வினர் துணை நின்றனர், அதற்காக பிரச்சாரம் செய்தனர். ஒரு வலதுசாரி முதலாளித்துவ சக்தியிடம் அன்று எதிர்பார்த்த "இனப்பிரச்சினை குறித்த ஆரோக்கியமும்", "ஜனநாயகமும்" இன்று கிடைத்து விட்டதோ என்னவோ பு.ஜ.க.வினர் தான் கூற வேண்டும்.

இது வரை காலம் மரபார்ந்த இடதுசாரிக் கட்சிகள் 1963இலிருந்து பல முறை இப்படியான இடதுசாரிக் ஐக்கிய முன்னணிகளை கட்டியிருக்கிற போதும் அவையெல்லாமே சந்தர்ப்பவாதக் கூட்டுகளாகவும், பாராளுமன்றத் தேர்தலுக்கான கூட்டாகவும், ஆதிக்க வலதுசாரி முதலாளித்துவ சக்திகளுடன் கைகோர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பவாத கூட்டணிகளாகவும் தான் இருந்திருக்கின்றன. இந்த முதலாளித்துவ சக்திகளை எதிர்த்து வலிமையான ஒரு இடதுசாரி ஐக்கிய முன்னணிக்கான சந்தர்ப்பம் வராமல் தடுத்ததில் இந்த ஆதிக்க சக்திகளுக்கு பெரும் பங்குண்டு. இந்த பள்ளிப்பாடத்தை 1994 ஆம் ஆண்டு பல இடதுசாரிக் கட்சிகள் அறியவில்லை என்று கூறிவிடமுடியாது. அப்படி அவை அறியாவிட்டால் அவர்களின் அரசியல் முதிர்ச்சியின்மையையே வெளிக்காட்டும். லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, ந.ச.ச.க. (வாசு அணி), போன்றோர் இன்று ஒட்டுமொத்தமாக சுயரூபம் அம்பலப்பட்டுப்போய், நிர்வாணக் காட்சிதரும் அரசாங்கத்தின் பங்குதாரர்கள், பாதுகாவலர்கள். அப்படிப்பட்ட வலதுசாரிகளுடன் கூட்டு சேர எவ்வித தயக்கமும் காட்டாத இந்த சக்திகள் இடதுசாரி அணியொன்றோடு இணைவதற்கு தடையெனக் கூறும் காரணங்கள் வேடிக்கையானது. நகைப்புக்குரியது.

## முக்கிய தடையாக தேசிய இனப்பிரச்சினை

இன்றைய நிலையில் இனப்பிரச்சினை குறித்த விடயம் இக்கூட்டணியினர் மத்தியில் முக்கிய சலசலப்பை உண்டு பண்ணுகின்ற விடயமாக உள்ளது. கடந்த வாரம் விக்கிரமபாகு, மற்றும் ஜே.வி.பி.யின் விமல் வீரவங்ச ஆகியோருடன் இக்கூட்டணி குறித்து எம்.டி.வி. தொலைக்காட்சி சேவை கலந்துரையாடலொன்றை நடத்தியது. அக்கலந்துரையாடலில் "இனப்பிரச்சினை குறித்து இரு வேறு நிலைப்பாடுகளைக் கொண்டும், அதன் காரணமாக பரஸ்பரம் தாக்கியும் வந்த நீங்கள் இப்போது இணைந்து கொண்டது எப்படி எவ்வாறு? என்ற கேள்விக்கு பதிலளித்த விக்கிரமபாகு "அடிப்படையில் நாங்கள் இரு சாராரும் தமிழ் மக்களின் பிரச்சினையை ஏற்றுக் கொள்கிறோம். தமிழ் மக்கள் மீதான இன்றைய யுத்தத்தை எதிர்க்கிறோம். ஆனால் இதற்கான தீர்வு என்று வரும் போது எங்கள் இரு கட்சிகளுக்கிடையிலும் வழிமுறைகள் வித்தியாசமானது. நாங்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறோம். ஜே.வி.பி. தூர இலக்கைக் கொண்ட சோஷலிசத்தின் கீழ் தீர்க்கப்பட வேண்டும் என்கிறது." என்றார்.

"தியெச" மார்க்சிய கல்வி வட்டத்தைச் சேர்ந்த வசந்த திசாநாயக்க 22ஆம் திகதி கூட்டத்தில் பேசிய உரை துண்டுப்பிரசுரமாகவும் வெளியிடப்பட்டிருந்தது. அதில் அவர் "இன்று நாங்கள் யுத்தத்துக்கு, தனியார்மயத்துக்கு, மக்கள் மீதான அடக்குமுறைக்கு, தொழிலாளர்கள் மீதான அடக்கு முறைக்கு எதிராக நாங்கள் அணி திரள்கின்றோம். வரலாற்றில் இடதுசாரி ஐக்கிய முன்னணி கட்டப்படுவது இது தான் முதற் தடவையென்பதல்ல. ஆனால் பல சந்தர்ப்பங்களில் தமது பிரதான கொள்கைகளை கைவிட்டு அமைக்கப்பட்டமையை நாங்கள் காண்கிறோம் உதாரணத்திற்கு லங்கா சமசமாஜக் கட்சி, கொம்யூனிஸ்ட் கட்சி என்பவை 1963 ஆம் ஆண்டு ஐக்கிய முன்னணி கட்டுவதற்காக மொழி விடயத்தில் அத்தனை காலம் காத்து வந்த கொள்கையை கூட பிலிப் குணவர்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியுடன் கூட்டு சேர்ந்த போது விட்டுக் கொடுத்தது. இதன் காரணமாக தமிழ் மக்கள் இடதுசாரி இயக்கங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் தகர்ந்து போயின. பெரும்பாலானோரின் எதிர்ப்பார்ப்பு என்பதால் அரசியல் கொள்கைகளை விட்டுக்கொடுத்துத் தான் இப்படியொரு கூட்டணி அமைய வேண்டுமானால் அப்படியொன்று தேவையில்லை. ஆனால், குறைந்தபட்ச உடன்பாடுகளுடன் இணைவது ஒன்றும் சிரமமான காரியமல்ல. ஆனால், கண்டிப்பாக தட்டிக்கழிக்க முடியாத பிரச்சினையினை நிராகரிக்க முடியாது. எனவே ஐக்கியப்படுவதற்கு இதனை தடையாக ஆக்காத அதே நேரம் தட்டிக்கழித்து பின்போடுவதற்கும் முடியாத ஒன்றாக இனப்பிரச்சினையைக் கருதுகிறோம்...." என்கிறார்.

## சந்தர்ப்பவாத கூட்டுதானா?

எவ்வாறிருந்த போதும் பலர் மத்தியிலும் நிலவுகின்ற கருத்தைப் போலவே ஜே.வி.பி.யின் இன்றைய முயற்சிக்கான முக்கிய காரணமாக அடக்குமுறையை எதிர்த்து நிற்கக் கூடிய வலிமையான அணியினை உருவாக்குவதே இதன் முக்கிய உடனடி நோக்கமாகக் கருத முடிகிறது. (அண்மைய தனியார் தொலைத்தொடர்புகள் தகர்ப்பு, மின்மாற்றிகள் தகர்ப்பு என்பன குறித்த ஜே.வி.பி.மீதான பழிசுமத்தல்கள் கவனிக்கத்தக்கது.) தனித்து நின்றால் அழித்தொழிப்பது அரசுக்கு ஒன்றும் சிரமமான காரியமில்லை. 1971இலும் சரி, 1987-89 காலப்பகுதியிலும் சரி கொடூரகரமான அடக்குமுறைகளின் போது அரசாங்கத்துடன் தோள் நின்று ஒத்துழைப்பு வழங்கிய சக்திகளும் இடதுசாரி சக்திகள் தான். அப்போது கண்ட முக்கிய படிப்பினையே தனிமைப்பட்டுப் போனமையின் விளைவு. எனவே இது வரை கண்டித்தும், விமர்சித்தும் வந்த இடதுசாரி சக்திகளை அரவணைத்ததானது ஒரு பக்கத்தில் தந்திரோபாய நடவடிக்கையாகவும் கருத இடமுண்டு. அதுவே சந்தர்ப்பவாத நலன் சார்ந்ததாக இருக்குமா என்ற சந்தேகம் பல இடதுசாரி சக்திகள் மத்தியில் நிலவுகின்றது.

அதேவேளை குறைந்தபட்சம் தென்னிலங்கை மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை எதிர்த்து நிற்கக் கூடிய ஒரு வலிமையான இடதுசாரி கூட்டணியாக இதனை மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளையும், நாட்டின் தேசிய பிரச்சினையாக வடிவமெடுத்திருக்கின்ற தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு தங்களாலான குறைந்தபட்ச நடவடிக்கைகளைத் தாமும் மேற்கொள்ளுமாயிருந்தால் அதுவே பெரிய விடயம் என்று பரவலாக பேசப்படுவதைக் காணமுடிகிறது.

**-ஜென்னி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# கதிர்காமபிரானின் தியத்தலோப தேசம் !

'கீதை காட்டிய வழியில் செயற்பட வேண்டும்'

தியத்தலாவ இராணுவ முகாமில் இராணுவப்பயிற்சி முடிந்து வெளியேறும் இராணுவத்தினரை கௌரவிக்கும் முகமாக நடந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்ட அமைச்சர் கதிர்காமர் அவர்கள் வழங்கிய அறிவுரை இது.

'கடமைக்காக ஒருவர் அழைக்கப்படும் போது' அதற்கு பதிலளிப்பதைவிட சிறந்ததோர் கடமை ஒரு இராணுவ வீரனுக்கு இருக்கமுடியாது' என்று அவர் பேசியதாக ஏரிக்கரை பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' என்ற அடிப்படையினைக் கொண்ட, பாரதப்போரிலே குருஷேத்திரத்தில் தயங்கி நின்ற அருச்சுனனுக்கு கண்ணபரமாத்மா போதித்ததாக கூறப்படும் பகவத் கீதையை கதிர்காமர் இலங்கை அரசாங்கத்தின் படைவீரர்களுக்கு வழிகாட்டும் தத்துவமாகப்போதித்து விட்டு வந்திருக்கின்றார். போர்க்களத்திலே நிற்கும் போர்வீரன் ஒருவன் தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளை செய்வதை விடுத்து வேறு விடயங்களில் மனதை அலைக்களிக்கக்கூடாதென்பது கீதையில் கூறப்பட்ட உண்மை.

குருஷேத்திரத்தில் பாண்டவர் பக்கத்தில் நின்று எதிரே நின்ற கௌரவர் சேனையைப் பார்க்கும் அருச்சுனனுக்கு மனம் கலங்குகிறது. எதிரே அவரது உறவுகள் நிற்பதைக் காண்கிறான். தனது சொந்த இரத்தங்களுக்கு எதிராக தான் போரிட நேர்ந்த நிலையை எண்ணி மனம் துவள்கிறான். யுத்தம் செய்ய மறுத்து விடுகிறான்.

தேர்ச்சாரதியாக இருந்த கண்ணபிரான் அவனுக்கு கீதோபதேசம் செய்கிறார். தர்மத்தைக் காப்பதற்கான யுத்தத்தில் இதுபோன்ற உணர்ச்சிகட்கு இடமில்லை. என்கிறது அவர் போதனை. யுத்தம் தவிர்க்க முடியாததாகிவிட்டது. இது உன் கடமை, கடமையை முடிப்பதே சத்திரியனின் தர்மம் என்று அவர் போதிக்கிறார்.

அருச்சுனன் போர்க்களத்திற்கு வருவதற்கு முன்னால் ஒரு நீண்ட வரலாறு இருந்தது. அன்றைய தருமப்படி அவர்களுக்கு சொந்தமான அதிகாரம் நயவஞ்சமாக பறிக்கப்பட்டது. அவர்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள். நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர். ஆட்சியதிகாரத்தை மீளப்பெறுவதற்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கால எல்லை முடிந்தும் அதிகாரம் மீள வழங்கப்படவில்லை. அவர்கள் ஐந்து நாடுகேட்டு, ஐந்து ஊர் கேட்டும் கிடைக்காது போகவே, இறுதியில் ஐந்து குடில் கேட்டு தூதுவிட்டனர். அனைத்தும் மறுக்கப்பட்டது.

சமாதானத்தின் மூலமாக இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான சகல வாய்ப்புகளும் மூடப்பட்டன. ஏதாவது தேவையென்றால், யுத்தமூலமே பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர்களுக்குப் பதில் கூறப்பட்டது.

ஆக, யுத்தம் வேறு வழியில்லாத ஒன்றாக பாண்டவர்கள் மீது திணிக்கப்பட்டது. அந்த யுத்தத்தில் ஈடுபடுவது அருச்சுனனின் அத்தியாவசிய கடமையாயிற்று.

இந்த நிலையில் தான் பாரதப்போர் மூண்டதாக மகாபாரதம் கூறுகிறது. இவ்விடயத்தில் தான் கலங்கி நின்ற அர்ச்சுனனுக்கு கீதோபதேசம் செய்யப்பட்டதாக அது சொல்கிறது.

ஆனால் கதிர்காமரின் கீதோபதேசம் நடந்திருக்கும் இடம் என்ன? அவரது கீதோபதேசத்தை கேட்டவர்களது கடமைதான் என்ன?

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றை கூர்ந்து நோக்குபவர்கள் யாரும், தமிழ் மக்களது அரசியல் உரிமைக்கான போராட்டத்தில் நியாயம் எந்தப்பக்கம் என்பதைப் புரிந்து கொண்டிருப்பார்கள். பாண்டவர்களுக்கும் கௌரவர்க்கும் பொருத்தமான பகுதியினர் யார் என்பதையும் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக தமது அனைத்து அரசியல் உரிமைகளையும் இழந்து தனிநாடு கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டதும் ஆயுதம் ஏந்தும் நிலை உருவானதும் புதிய விடயம் அல்ல. ஆனால், நமது புதிய கண்ண பரமாத்மாவுக்கு இந்த வரலாறு முக்கியமானதல்ல.

கௌரவர் சேனைக்கு கீதோபதேசம் செய்யும் புதிய கண்ண பரமாத்மா அவர்.

அவர் 'கடமைக்காக அழைக்கப்படும்' வீரர்களை அதைச்செய்ய வருமாறு கோர கீதையைத்தூக்கிக்கொண்டு தியத்தலாவைக்குப் போயிருக்கின்றார்.

அவர் சொல்லும் இந்தக் கடமைதான் என்ன?

வடக்கு கிழக்கில் புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்வது எதிரியை அழித்தொழிப்பது தமது நண்பர்களைப் பாதுகாப்பது என்று அவரது உபதேசம் நீண்டு கொண்டே போகிறது.

உலகின் வேறெந்த நாட்டுப்படைகளுக்கும் சற்றும் சளைக்காதவர்கள் இலங்கை இராணுவத்தின் படைவீரர்கள்; வடக்கில் தமிழ் மக்களுடன் அன்னியோனியமாகப் பழகுகிறார்கள் என்றெல்லாம் புகழாரம் வேறு சூட்டிவிட்டிருக்கிறார் அவர்.

வடக்கு கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் தாம், ஆண்டு அனுபவித்த நிலம் குடியேற்றம் என்ற பெயரால் இலங்கை அரசாங்கங்களால் பறித்தெடுக்கப்படுவதைக் கண்டுகொள்ளாமல் இருந்திருந்தால்,

அவர்களது இளம் சந்ததியினரின் கல்வி, தொழில் வாய்ப்பு மற்றும் அரசியல் உரிமைகள் என்பன கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்தெடுக்கப்பட்ட போதெல்லாம் மௌனமாக இருந்திருந்தால்,

அடுத்தடுத்து நடந்த இனக்கலவரங்களால் அவர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக விரட்டப்பட்ட போதும் மௌனம் காத்திருந்தால்,

அமைதி வழியில், இங்கு அங்கீகரிக்கப்பட்ட ஜனநாயக வரம்புகட்கு உட்பட்ட வழியில் தமது போராட்டங்களை அவர்கள் நடாத்திய போதெல்லாம் அவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட காடைத்தனங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு மௌனமாக இருந்திருப்பார்களானால்,

தமது உரிமைகட்காக ஆயுதம் தூக்காமல் இருந்திருப்பார்களானால்,

அதாவது சுயகௌரவம் அற்ற, ஒரு மூன்றாம் நாலாம் தரப் பிரஜையாக இருந்த நாட்டில் வாழ அவர்கள் தயாராக இருந்திருப்பார்கள் என்றால்,

இந்த யுத்தம் மூண்டிருக்காது; இத்தனை உயிர்களையும் சொந்தழிவுகளையும் தாங்கி நடுத்தெருவில் நாய்களாக அலைய வேண்டியிருந்திருக்காது. 'நாமமது தமிழரெனக்' கொண்டு அவர்கள் நலமே வாழ்ந்திருக்கக் கூடும்.

அப்படி ஒரு நிலைமை இருந்திருக்குமானால், 'யானை மாலை போட்டதாலே ஆளவந்த' கதிர்காமர் போன்ற புதிய கண்ண பரமாத்மாக்கள் தோன்றியிருக்க வாய்ப்பும் ஏற்ப்பட்டிருக்காது.

ஆனால், இவையெல்லாம் நடக்கவில்லை.

தமிழ் மக்கள் தம்மை ஒரு தனித்துவமான தேசிய இனமாக கருதினர். தமது சுதந்திரம், தமது பிறப்புரிமை என்று கருதினர். தாம் வாழ்ந்துவந்த இந்த நாட்டில் தமக்கும் ஏனைய இனங்களுக்குரிய சகல உருமைகளும் இருப்பதாகக் கருதினர். அடக்கி ஒடுக்கப்பட்ட சுயமதிப்பற்ற ஒரு மூன்றாம், நாலாம் பிரஜையாக இருப்பதைவிட தமது உரிமைகட்காக போராடுவது மேல் என்று முடிவு செய்தார்கள்.

இதுதான் அவர்கள் செய்த மாபெரும் தவறு!

ஆனால், இந்தத் தவறை அவர்கள் விரும்பியே செய்தார்கள். அதன் விளைவுகளைத் தாங்கியபடியே அதனைச் செய்தார்கள். செய்து வருகிறார்கள்.

விடுதலைப் புலிகள இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்ற ஒரு அணி. அதன் சரிபிழைகளுக்காப்பால் அதன் பாத்திரம் அது தான் என்பதை அரசாங்கம் கூட மறுப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், கதிர்காமருக்கு, இந்தப் புலிகளை எதிர்த்து யுத்தம் செய்ய வேண்டும் என்பதற்காக அரசியல் வரலாறும் மறந்துவிட்டது. மகாபாரதக் கதையும் மறந்து விட்டது. புலிகள்தான் எதிரிகள்; தமிழ் மக்கள் அல்ல என்று அவர் அவர்களுக்கு உபதேசித்திருக்கிறார்.

தமிழ் மக்கள் எதிரிகள் அல்லர் என்றால்,அவர்களும் இந்த நாட்டின் சம அந்தஸ்துள்ள பிரஜைகள் தான் என்றால், இன்று வடக்கு கிழக்கில் நடக்கும் யுத்தத்திற்கான தேவைதான் என்ன? இந்த யுத்தத்தால் கொல்லப்படுவர்களும், பெருமளவு பாதிக்கப்படுபவர்களும் யார்? ஏன் புலிகள் என்ற ஒரு இயக்கம் தமிழர்கள் மத்தியிலிருந்து மட்டும் தோற்றம் பெற்றது? இன்றுவரை ஒரு வருடகாலமாக கடும்போர் புரிந்தும் வெல்ல முடியாத ஒரு அணியாக அது எப்படி மக்களிடமிருந்து அன்னியப்பட்டு வாழ முடிகிறது.

கதிர்காமரிடம் இதற்கான பதில்கள் இல்லை. ஏனென்றால், அவருக்கே தெரியும், தெற்கிலே உருவாக்கப்படுகிற ஒவ்வொரு புதிய படைவீரனும் புலிகளுக்கு எதிராக அல்ல வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் உரிமைப்போரை நசுக்குவதற்காக உருவாக்கப்படுகின்றான் என்பதை அவர் அறிவார்.

அல்லாவிட்டால், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் எப்போதோ வழங்கப்பட்டிருக்கும் என்பதையும் அவர் அறிவார்.

ஆக, அவர் கடமையைச் செய்ய படைவீரர்களை அழைக்கிறார்.

கீதையின் வழியில்

அந்தக்கடமை, என்ன என்பதை படைவீரன் முடிவு செய்வதில்லை. அவன் வழங்கப்படும் உத்தரவை நிறைவேற்றுபவன்.

வடக்கு கிழக்கில் போய் யுத்தம் செய் என்பதுதான் அவனுக்கு வழங்கப்படுகிற உத்தரவு.

அதுதான் அவனது கடமை, ஆனால், அந்தக் கடமை எந்தக்கடமையின் பகுதி என்பதை அவன் அறியான். ஏனென்றால்,. அதை தீர்மானிப்பது கதிர்காமரும் அவரது அரசும்.

போர்க்களத்தில் நின்ற அர்ச்சுனனது கடமை கௌரவரை வெல்வது. ஆனால், கண்ணனுக்கு ஒரு கடமை இருந்தது. அந்தக்கடமையை அவன் அர்ச்சுனன் மூலம் செய்வித்தான்.

'தர்மம் நலிவுற்று அதர்மம் அதிகாரம் செய்யும் காலம் வரும்போது' அவன் அதை அழிக்கப் பிறப்பெடுக்கிறான். அது அவன் கடமை.

கதிர்காமரின் கடமை கண்ணனின் கடமை. சந்திரிகா அரசாங்கத்தின், தமிழ் மக்களது அரசியலுரிமையைக் கருவறுக்கும் கடமை.

அதற்கு அவர் வழங்கிய உபதேசம் தான் தியத்தலாவை உபதேசம்.

''ஓடிப்போகாதே! - யுத்தம் புரி! அததான் உன் கடமை''

- இது கதிர்காமரின் புதிய உபதேசம்.

''எதற்காக என்பது உனக்கு முக்கியமல்ல.... கடமையை செய். பலனை எதிர்பாராதே....''

www.tamilarangam.net



# விளங்கிக் கொள்ளப்பட்டவையும் புரிந்துகொள்ளப்படாதவைகளும்!







தென்கிழக்கு பிராந்திய விவகாரம் இன்று விளங்கிக் கொள்ளப்பட்ட அடிப்படையில்; அதற்கு அப்பாலும் உள்ள உண்மைகள், நியாயங்கள், அரசியல் கருத்தியல்களை புறக் கணித்துவிட்டு, ஒரு விவாதத்துக் குரிய கோரிக்கையாக அது இன்று விசுவரூபம் எடுத்துள்ளது.

உண்மையில் தென்கிழக்கு பிராந்தியம் தொடர்பாக அடிப் படையான சில கேள்விகளுக்கு நாம் விடை காணல் அவசியமா கும் - முதலில் இத்தென்கிழக்கு மாகாண யோசனை யாரால் முன்வைக்கப்பட்டது? இது முஸ்லிம் மக்களை பிரதிநிதித்து வப்படுத்தும் ஒரு அரசியல் இயக்கத்தினால் முன்வைக்க ப்பட்டிருந்ததா? ஏன் தென்கிழக்கு பிராந்தியம் தொடர்பாக தென் கிழக்குக்கு வெளியே உள்ள முஸ்லிம்கள் அச்சப்படுகின்றனர்? ஏன் தமிழ் அரசியல் தலைமைகள் இத்தென்கிழக்கு யோசனையை ஆதரிக்கவில்லை? (கூட்டணி நீங்கலாக)

இக்கேள்விகளுக்கான பதில்க ளுடன் இன்று வடக்கு கிழக்கில் இனத்தனித்துவத்துடன் தங்களை ஒரு தேசமாக (Nation) ஸ்தாபித்துக் கொண்டுள்ள முஸ்லிம்களின் இன்றைய வாழ்வையும், கடந்த கால வாழ்வின் மீதான இழப்புகளையும், படுகொலை களையும் கண்ணீரையும் இரண் டறக் கலந்தே பார்க்க வேண்டியு ள்ளது.

***தென்கிழக்கு பிராந்திய யோசனை யாரால் முன் வைக்கப்பட்டது?***

தென்கிழக்கு பிராந்திய யோசனை யானது 1995 ஒகஸ்ட் மாதம் சந்திரிகா அரசினால் முன்வைக்கப் பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையில் உள்ள ஒரு பிராந்திய அலகாகும். இக்கோரி க்கையானது அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களையும், நிலங்களை யும் பாதுகாத்துக்கொள்வதற்காக சிங்களவர்களின் நலன்களிலிருந்து முன்வைக்கப்பட்ட ஒரு யோசனை தான். தென்கிழக்கு மாகாண யோசனை இத்தீர்வுத்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்படும் பட்சத்தில் மாத்திரம்தான் சாத்தியமான தாகும். ஆனால், இன்று சந்திரிகா வினால் முன்வைக்கப்பட்ட ஒகஸ்ட் 1995 தீர்வு யோசனை இன்று கிடப்பில் போடப்பட்டு விட்டது. ஆனாலும் அடிப் படையில் தென்கிழக்கு தொடர் பான யோசனையில் இந்த நாட்டில் - இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இனங்களிடையே அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுகின்றபோது இந்த நாட்டில் மூன்று இனங்களும் அதிகாரங்களை பங்கிட்டுக் கொள்வதனை உறுதிப்படுத்தும் அடிப்படையில் இலங்கையில் சாத்தியமான ஒரு முஸ்லிம் பெரும்பான்மை பிராந்திய அலகாக அது முன்வைக்கப் படதன் அடிப்படையில் முஸ்லிம் புத்திஜீவிகள், முஸ்லிம் அரசியல் கட்சிகள் இவ் யோசனையை வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் குறைந்த பட்ச அரசியல் கோரிக்கையாகப் பார்க்கின்றனர்.

***இக்கோரிக்கை முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அரசியல் இயக்கத்தினால்*** →

# ஸ்ரீ.ல.மு.கா: சுட்டு விரலை நீட்டும் மக்கள்!



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அண்மையில் கொழும்பில் நடாத்திய 15வது தேசிய மாநாட்டை மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் பகிஷ்கரித்தமையானது, அண்மைக் கால முஸ்லிம் அரசியலில் குறிப்பிடத் தக்க நிகழ்வாகும். பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முன் வைத்த தீர்வுப்பொதிக்கு, கட்சி முன்வைத் துள்ள தென் கிழக்கு மாகாண அலகு கோரிக்கையை எதிர்த்தும், கட்சி அதனைக் கைவிட்டு முன்னர் வலியு றுத்தி வந்த தனி மாகாணக்கோரிக் கையை முன்மொழியும்படி கேட்டும் இப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் பல முஸ்லிம் கிராமங்களில் மக்கள் ஒட்டுமொத்த மாக கடைகளை அடைத்தும் கறுப்புக் கொடிகளைத் தொங்க விட்டும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார் கள்.

முதற்தடவையாக ஒரு மாவட்ட மக்கள் கட்சியின் தீர்மானத்துக்கெதி ரான தமது எதிர்ப்பை ஏகோபித்த முறையில் வெளிப்படுத்தியிருப்பதா னது ஒரு ஆபத்தான அறிகுறியென்றே கருத வேண்டியுள்ளது.

ஸ்ரீ.மு. காங்கிரசின் தோற்றப்பாடு த்ற்செயலான நிகழ்வு - அது வட கிழக்கு முஸ்லிம்களின் இருப்புக்கு ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மையின் ஆரம்ப கட்டத்திலேயே நிகழ்ந்துள் ளது. தமது எதிர்கால இருப்பு, பாதுகாப்பு, தேசியத்தன்மை என்ப வற்றுக்கெதிராக சிங்கள, தமிழ் பேரினவாதங்களின் அச்சுறுத்தல் களை எதிர்கொள்வதற்கு நிறுவனம யப்பட்டதொரு அரசியற் பலம் அவசியம் என்பதை முஸ்லிம்கள் எண்பதுகளில் உணரத்தலைப்பட்டார் கள். அத்துடன், ஸ்ரீ.ல.மு.கா. ஆரம்ப காலப்பகுதியில் பிரச்சாரப் படுத்திய தனி மாகாண சபை எனும் தாயகக்கோட்பாடானது வடகிழக்கு முஸ்லிம் மக்களின் 'எதிர்காலம் பற்றியதான நம்பிக்கையையும், கனவு களையும், வளர்த்து வந்துள்ளது. மேலும், கட்சி அரசியலில் முஸ்லிம் காங்கிரஸ் ஒரு உறுதியான பற்றுகோல் என முற்று முழுதாக நம்பியதால், அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை மற்றும் வடமாகாண முஸ்லிம்கள் தமது பெறுமதியான வாக்குகளை அள்ளி இறைத்து, கட்சிக்கு பலம் சேர்த்து வந்துள்ளார்கள்.

இதன் மூலம் இம்மக்கள், கட்சியிடம் எதிர்பார்த்தது 'அரசியல் விடுத லையேயன்றி, அபிவிருத்திப் பம் மாத்துக்களல்ல'. வடகிழக்கிலுள்ள முஸ்லிம் கிராமங்களை ஒன்றிணைத்த நிருவாக அலகு, முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும், ஐக்கியத்தையும் ஓங்கச்செய்யும் பாதுகாப்பு வலயமாக அமைதல் வேண்டும். இவை நெருக் கடி மிக்கதான எண்பதுகளிலும், தொண்ணூறுகளிலும் மக்களிடம் முகிழ்த்த தெரிவுகள்.

இலங்கை முஸ்லிம் அரசியலில் அபிவிருத்தி என்பது பயணத்தை சீர்படுத்தும் பாதையாக அமைய வேண்டுமே தவிர, பயணமாக அமைந்து விடக்கூடாது என்பது இன்றைய யதார்த்த நிலை.

இந்த யதார்த்தங்களை மறந்து ஸ்ரீ.ல. மு.காங்கிரசும், அதன் தலைமைத் துவமும் தாம் இதுகால வரையும் மக்களை ஆற்றுப்படுத்தி வந்த தனி மாகாண சபை எனும் தாயகக் கோட்பாட்டை திடீரென கைகழுவி, தென்கிழக்கு மாகாணக் கோரிக் கையை முன்வைத்திருப்பதானது, வடகிழக்கிலுள்ள அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிரதேச முஸ்லிம்களை அதிருப்திப் படுத்தியுள்ளது.

இது பற்றிய தெளிவோ, நியாயங் களோ, வாதப் பிரதிவாதங்களோ மக்கள் முன் கொண்டு செல்லாது, கட்சி ஒரு தலைப்பட்சமாக பிரகட னப்படுத்தியுள்ள தென்கிழக்கு அலகு, இப்பிரதேச மக்களின் கருத்துரிமைக்கு விடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தல் என்றும் பலர் 'சீரியசாக'க் கவலைப் படுகிறார்கள். இக்கவலையினதும், அதிருப்தியினதும் வெளிப்பாடு தான் மட்டு - மாவட்ட முஸ்லிம்களின் பகிஷ்கரிப்பு நடவடிக்கையாகும்.

அரசியலாளர்கள் முன்வைக்கும் எந்தத்தீர்வும் மக்களின் அங்கீகாரத் திற்குட்படுத்தப்பட வேண்டும் என் பது நவீன அரசியல் அணுகுமுறை யாகும். (இந்நடைமுறைக்கு அண்மை யில், ஐரிஸ் குடியரசில் நடாத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு நல்லதோர் முன்னுதாரணமாகும்.)

தென்கிழக்கு தொடர்பான நியாயங் கள் தார்மீகத்துக்கு அப்பாற்பட்டவை. 'காயம் பட்ட இடத்துக்கே மருந்திட வேண்டும்' எனும் தலைமைக்கு, எது காயம் பட்ட இடம் என்பதில் தெளிவில்லை. மேலும், 'தென்கிழக்கு அலகு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு முன்வைத்த அரசியல் தீர்வு. அது எம்முடைய கருத்தல்ல' என்றும் நழுவுகிறார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணி முன் வைத்த தீர்வை ஏற்றுக்கொள்வதா னால், நமக்கெதற்கு தனிக்கட்சி? உண்மையில், அம்பாறைத் தொகு தியை தாரைவார்த்து விட்டதற்கு கிடைத்த பரிசுதான் தென்கிழக்கு. 'தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை கொச்சைப்படுத்தி, தமிழ் முஸ்லிம் ஐக்கியத்தை சிதைக்கும் துரோகத் துக்காகவா நாம் கட்சியை மலையாக நம்பிவந்தோம்' என்கிற பல புத்தி ஜீவிகளின் கவ்லையும் புறந்தள்ளப் பட்டு விட்டது.

மேற்கூறிய நொண்டிச் சாட்டுக்கள், கட்சியிலுள்ளவர்களின் தொழிலுக்கு தவலாம். முஸ்லிம் தேசத்துக்குதவப் போவதில்லை.

கட்சி தனது தேசிய முகத்தை இழந் திருப்பதை - கட்சியிலுள்ள பிரதேச வாதிகள் முஸ்லிம் தேசத்துக்கு கொள்ளி வைத்திருப்பதை - விதை யிட்டு, நீரிட்டு வளர்த்து, அறுவடை செய்கிற காலகட்டத்தில் மரம் தம்மை வஞ்சித்திருப்பதை முதற்தடவையாக மட்டு - மாவட்ட முஸ்லிம்கள், தலைமையிடம் தமது சுட்டு விரலை நீட்டி தெரிவித்திருக்கிறார்கள்.

இதுவரை கட்சியில் தன்னிடம் கேள்வி கேட்டவர் யாராயிருந்தாலும், எந்தப் பதவியில் இருந்தாலும் தலைவர் அவர்களை 'அட்ரஸ்' இல்லாம லாக்கியிருக்கிறார்.

இப்போது தனி நபர்களல்ல. ஒரு மக்கள் சக்தி தலைமையைப் பார்த்து கேள்வி எழுப்பியுள்ளது. இந்நாட்டில் கட்சியின் இரண்டாவது வாக்கு வங்கி - கட்சியின் 'பிறந்தகம்' என்ற பெரு மைக்குரிய மட்டக்களப்பு, கட்சியின் மீதான தனது நம்பகத்தன்மையை கேள்விக்குட்படுத்தியுள்ளது.

தலைமை என்ன செய்யப்போகிறது?

***-ஸதக்கா-***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### முன்வைக்கப்பட்டிருந்ததா?

முஸ்லிம் மக்களை இன்று வடக்கு கிழக்கில் அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் காங்கிரஸ் இக்கோரிக்கையை முன்வைக்கவில்லை. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும், முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை முன் வைத்த பழைய முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி தலைமையும், இன்றும் வடக்கு கிழக்கில் நிலத் தொடர்பில்லாததும் அதிகாரங்கள் தொடர்புடையதுமான ஒரு முஸ்லிம் மாகாணத்தைத் தான் இன்றுகூட தங்களது கோரிக்கையாக முதன்மைப்படுத்தி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உத்தியோகபூர்வ வெளியீடான ''தென்கிழக்குப் பிராந்தியம் மூன்று சமூகங்களினதும், ஒற்றுமைக்கான முன் மாதிரிப்பூமி'' என்ற புத்தகத்திலும் கூட முஸ்லிம் காங்கிரசுடைய அடிப்படைக் கோரிக்கை பொத்துவில் தொடக்கம், முசலி வரையான முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச செயலகங்களை நிலத்தொடர்பற்ற வகையில் அதிகாரத்தினூடாக இணைத்த தனிமாகாணமே என கூறப்பட்டுள்ளது.

உடனடியாக இக்கோரிக்கை சாத்தியப்படாத சூழலின் அழுத்தம் காரணமாய் - அடிப்படையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படுகின்றபோது முஸ்லிம்களின் இன அடையாளம் நிராரிக்கப்பட்டு விடக்கூடாது என்பதுடன் முஸ்லிம்கள் இந்த நாட்டில் சிங்களவர்கள், தமிழர்களின் பெரும்பான்மை ஆட்சி அதிகாரத்தின் கீழ் நாடெங்கும் வாழ நிர்ப்பந்திக்கப்படும் ஒரு சூழலை

நிலையான வரலாறாக எழுதப் படப்போவதை திருத்தி முஸ்லிம்களுக்கும் அதிகாரங்கள் என்பதை உறுதி செய்யவேண்டிய யதார்த்த நிலவரம் காரணமாய் தென்கிழக்கு யோசனையை குறைந்த பட்ச யோசனையாக இன்றைய சூழலின் யதார்த்தத்தின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக் கப்பட்டு இருக்கலாம்.

வடக்கு கிழக்கில் - ஏன் 1915 சிங்களவர்களால் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்புட்ட கலவரம் [தொடக்கம்] இன்றைய கலகெதர, வெலிகம, திக்வெல்ல கலவரங்கள் வரை சந்தித்த துயரங்களின் ஊடே இந்த நாட்டு முஸ்லிம்கள் தங்களது இன அடையாளத்தை சிங்களவர்களுடனும், தமிழர்களுடனும் கலந்து விடுங்கள் என்ற மேலாதிக்க மனோபாவ ஆதிக்கக் கோரிக்கையை அரசியல் கருத்தில் உள்ள எந்த முஸ்லிமும் எந்த முஸ்லிம் புத்திஜீவியும் முஸ்லிம்களின் அரசியல் நலனில் தீவிர கோட்பாடுடைய அரசியல் ஸ்தாபனமும் ஏற்றுக்கொள்ளமாட்டாது!

### தென்கிழக்கு பிராந்தியம் தொடர்பாக ஏன் தென்கிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம்கள் அச்சப்படுகின்றனர்?

அச்சங்களும், மேலோட்டமான சந்தேகங்களும் சாதாரண மக்களிடம் ஏற்படுவது இயல்பு. அதுவும் தென்கிழக்கு தொடர்பான பயமுறுத்தல்களை எதிர்ச்சக்திகள் தீவிரமாக கட்டவிழ்த்து விட்டிருக்கும் இன்றைய சூழலில் - முஸ்லிம்களை இனச் சுத்திக்கரிப்பு செய்து, கொன்றொழித்த ஆதிக்கக் கரங்களும் சிக்குண்டிருக்கும் நிராயுதபாணியான முஸ்லிம்கள் இது தொடர்பாக அச்சம் கொள்வது தவிர்க்க முடியாதது தான். ஆனால், யதார்த்தத்தில் தென்கிழக்கு யோசனை தொடர்பாய் தென்கிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம் புத்திஜீவிகள் இவ் யோசனை தொடர்பாய் சாதகமான தன்மைகளையே கொண்டிருக்கின்றனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசினர் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை, திருமலை மாவட்டத்தில் கிண்ணியா, மூதூர், குச்சவெளி போன்ற முஸ்லிம் பிரதேசங்களில் இவ் யோசனையை தொடர்பாக சாதக, பாதக அம்சங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்லாதது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்த மிகப்பெரிய தவறாகும்.

**விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் மிதவாத அரசியல் தலைமைகள் வரை முஸ்லிம்களுக்கு முன்வைத்துள்ள தீர்வு என்ன? ஈழமும் வடக்கு கிழக்கு இணைந்த மாநிலமும் தான் முஸ்லிம்களுக்கான தீர்வு என்றால் கடந்த காலம் என்ன கனவுகளின் உலகமாகவிருந்ததா? இல்லையே. அது நிஜத்தின் உலகமாகவிருந்தது. அதில் முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டார்கள். படுகொலை செய்யப்பட்டார்கள். அடக்கப்பட்டார்கள், கப்பம் வரி கட்ட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவ் அமைப்புக்குள் முஸ்லிம்களுக்கு தீர்வு நீதி இல்லையென்றேல் - முஸ்லிம்களுக்கான தீர்வு எது?**

எதிர்ப்பிரச்சாரங்கள் புனையப்பட்டு தவறான கட்டுறுவாக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கம் போது- அத்தவறான கட்டுறுவாக்கத்தை உடைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் இம்மாவட்டங்களில் தங்களது அடிப்படையான பிரச்சாரங்களை முடக்கி விடாதது மிகப்பெரிய பலவீனமே - இதன் மூலம் ஒட்டுமொத்தமாக எதிர்ச் சக்திகள் தங்களது திறந்த விவாதத்தை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு வசதியாகவிருந்தது.

மட்டக்களப்பு, திருமலை முஸ்லிம்கள் தென்கிழக்கு மாகாணத்தை எதிர்க்கிறார்கள் என்பதை முஸ்லிம் தேச அரசியல் விரோதிகள் தங்களுக்கு சாதகமான பிரச்சாரத் தந்திரத்துடன் அதிக விளம்பரம் கொடுத்து பகிரங்கப்படுத்தி வருகின்றனர். ஆனால், அவர்கள் இது தொடர்பாய் வெளி உலகத்திற்கு காட்ட விரும்புவது மட்டக்களப்பு, திருமலை, வன்னி, மாவட்ட முஸ்லிம்களின் ஒரு பக்கத்தைத் தான்.

### மட்டக்களப்பு, திருமலை வன்னி முஸ்லிம்களின் கோரிக்கை என்ன?

அடிப்படையான முஸ்லிம் மாகாணக் கோரிக்கைதான் இம்மாவட்ட மக்களின் கோரிக்கை ஆகும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை தென்கிழக்கு மாகாணக்கோரிக்கையை கைவிட்டு விட்டு தங்களையும் உள்ளடக்கிய தனி முஸ்லிம் [மாகாண] கோரிக்கையை முன்வைத்து போராட மட்டக்களப்பு, திருமலை, வன்னி முஸ்லிம்கள் முஸ்லிம் காங்கிரசை வற்புறுத்துகின்றனர். இதுவே யதார்த்த நிலையாகும். இதனை ஏன் இத்தீவிர எதிர்ப் பிரச்சாரவாதிகள் மறைத்து - மட்டக்களப்பு, திருமலை, வன்னி மாவட்ட மக்களின் ஒரு பக்கத்தை மட்டும் காட்ட முனைகின்றனர். இதுதான் இவர்களின் முஸ்லிம் தேசத்தை குழித்தோண்டிப் புதைப்பதற்கான அரசியல் ராஜதந்திரமாகும்.

### தமிழ் அரசியல் தலைமைகள் ஏன் தென்கிழக்கு கோரிக்கையை ஆதரிக்கவில்லை?

ஈழத்தை அல்லது வடக்கு கிழக்கு இணைந்த மாநிலத்தை இத்தனை வருடகாலம் பெருமளவு நிணமும் குருதியும், உயிரழிவும் பொருளாதார சீரழிவும் கண்டுவிட்ட பின் பௌத்த பேரினவாதம் ஏன் ஏற்றுக்கொள்ள வில்லை என்ற கேள்விக்கு எவ்விதத்திலும் மேற்கூறப்பட்ட எனது கேள்வியும் குறைந்ததில்லை. ' அதற்கான பதில்தான் இதற்கும்.

விடுதலைப் புலிகள் உட்பட தமிழ் மிதவாத அரசியல் தலைமைகள் வரை முஸ்லிம்களுக்கு முன்வைத்துள்ள தீர்வு என்ன? ஈழமும் வடக்கு கிழக்கு இணைந்த மாநிலமும் தான் முஸ்லிம்களுக்கான தீர்வு என்றால் கடந்த காலம் என்ன கனவுகளின் உலகமாகவிருந்ததா? இல்லையே. அது நிஜத்தின் உலகமாகவிருந்தது. அதில் முஸ்லிம்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டார்கள். படுகொலை செய்யப்பட்டார்கள். அடக்கப்பட்டார்கள், கப்பம் வரி கட்ட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவ் அமைப்புக்குள் முஸ்லிம்களுக்கு தீர்வு நீதி இல்லையென்றேல் - முஸ்லிம்களுக்கான தீர்வு எது?

இதுவரை முஸ்லிம்களின் இன, மத கலாசார பண்பாட்டு வாழ்வியல் அடையாளங்களை தனித்துவமாக பாதுகாக்கக் கூடிய எத்தீர்வையாவது தமிழர் தலைமை முன்வைத்திருக்கிறதா? இல்லையே, அப்படியானால் முஸ்லிம் அரசியல் தலைமை முன்வைத்த மாகாணக்கோரிக்கையை தமிழர் தலைமை ஏற்றுக்கொள்கிறதா? இல்லை என்பதுதான் பதில். ''இல்லை'' என்ற ஒன்றை நம்பி முஸ்லிம்கள் எப்படி சோரம் போக முடியும்?

அம்பாறையில் தமிழர்களை முஸ்லிம்கள் ஆதிக்கம் செய்யப் போவதாக தம்பட்டம் அடிப்பவர்கள் கிழக்கில் 33%மாகவும், வடக்கில் 5% மாகவும் வாழும் முஸ்லிம்களை ஆதிக்கம் செய்தே தீருவோம் என மார்தட்டி நிற்பதை காணும் சூழல் தான் இன்னும் இன்னும் பேரினவாதம்'' தொடர்பாக ஆதிக்க சிந்தனைகள் - சிங்களவர்களிடம் மட்டுமல்ல- தமிழர்களிடமும் ஆழப்பதிந்தே நிற்பது உறுதியாகத் தெரிவருகிறது.

முஸ்லிம்கள் தமிழர்களை ஆதிக்கம் செய்யக்கூடாது, தமிழர்கள் முஸ்லிம்களை ஆதிக்கம் செய்யக் கூடாது என்ற ''அனைவருக்கும் பொதுவான'' சிந்தனை உள்ள ஒவ்வொரு வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களும், முஸ்லிம்களும் நியாயமாக வரவேண்டிய தீர்வு வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் மாநிலம் - தனி முஸ்லிம் மாநிலம் - என்ற இரண்டு அடிப்படைத் தீர்வுகளும் தான்.

## விபச்சாரம் என்றால் என்ன?

''நீ ஒரு வேசியின் மகன் என்று நான் கூறினால் நீ கோபப்படுவாயா?'' - நான் எனது நண்பனைப் பார்த்துக் கேட்டேன்.

''இல்லை, உன்னைக் கட்டிக்கொஞ்சி சந்தோசப்படுவன்'' என்று முகத்தை இறுக்கிக் கொண்டு கூறிய நண்பன், ''இந்த் மாதிரி விழல் கேள்விகள் கேட்டு என்னிடம் அறையைக் கிறையை வாங்கிக்கொள்ளாத'' என்றான் ஒரு வித ஆத்திரத்தோடு,

''ஆத்திரப்படாதே, எனக்கும் என் அம்மாவின் தூய்மையைப்பற்றிப் பேச முடியாது. அப்படித்தான் ஒவ்வொருவருக்கும்! எல்லாருக்கும் தம் தாய்மார் அப்பழுக்கற்றவர்கள் என்ற நினைப்புத்தான். ஆனால், எனது பிரச்சினை அதுவல்ல'' - நான் விளக்க முற்பட்டேன்.

''உனது பிரச்சினை என்ன?'' அவன்.

''ஏன் பெண்கள் கற்பென்ற ஒன்றைப்பேண வேணும்? ஏன் அவர்கள் அதற்கு எதிர்மாறாக இயங்கக் கூடாது?'' -நான்.

''அது நமது ஒழுக்கத்திற்கு எதிரானது. அப்படி அவர்கள் இயங்கினால் நமது ஒழுக்கங்கள் கெட்டுப்போம். அதன் வழிவரும் பண்பாடு கெட்டுப்போம்'' அவன்.

''இந்த ஒழுக்கமும் பண்பாடும் நாம் ஏற்படுத்தியது தானே? இது ஆண்கள் ஏற்படுத்திய பண்பாடாக இருக்க வேணும். அதனால்தான் பெண்களிடம் எதிர்பார்க்கும் ஒழுக்கத்தை ஆண்களிடம் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் நான் சொல்லவருவது இதையல்ல.'' - நான்

''நீ சொல்ல வருவது எதை?'' அவன் கேட்டான்.

''உனக்குத் தெரியுமா, நாங்கள் பெண்களிடம் எதிர்பார்க்கும் கற்பை புறக்கணித்து தன் மனைவியையே தன்னை நாடிவந்த சிவனடியார்களுக்கு இன்பமளிக்கப் பணித்த நாயனாரைப்பற்றி?' -நான்

''ஓம் தெரியும்.''

''அப்படியானால், இந்த நாயனார் கற்பைவிட மேலானதாகக் கொண்ட ஒழுக்கம் எது என்று நினைக்கிறாய்?''

''அவர் தனது துறவொழுக்கத்தின் மேன்மையைக் காட்டினார்.'' அவன் விளக்கினான்.

''அப்போ துறவொழுக்கம், எல்லா ஏனைய ஒழுக்கங்களையும் விட மேலானதா?'' - நான் கேட்டேன்.

''நீ என்ன நினைக்கிறாய்?'' அவன் என்னைத் திருப்பிக் கேட்டான்.

''ஓம், என்னைப் பொறுத்தவரை துறவுதான் எல்லாவற்றையும் விடமேலான ஒழுக்கம். காரணம் அதன் அடுத்த பக்கம் பொதுமை. உண்மையான பொதுவுடமையின் மலர்ச்சி இங்கு தான் ஆரம்பிக்கிறது. இந்த மன ஒழுக்கம் இல்லாதவரையும் எத்தனை பெருந்தத்துவக்கோட்பாடுகள் போட்டாலும் பொதுவுடமை மலரப்பேவதில்லை.'' - நான் கூறினேன்.

''இதற்கும் ஏனைய ஒழுக்கக் கோட்பாடுகளுக்கும் உள்ள தொடர்பு என்ன?''

அவன் மிகப் பொருத்தமாகவே கேட்டான் .

''ஏனைய ஒழுக்கக்கோட்பாடுகளும், இதனோடுதான் சம்பந்தப்படுகின்றன.'' -நான்.

''எப்படி?'' -அவன்.

துறவுக்கு எதிரானது சுயநலம். மனிதன் தான் துறக்க விரும்பாதவற்றில் மிகச் சுயநலமிக்கவனாக இருக்கிறான். அந்தச் சுயநலத்திலிருந்தே அனைத்து தீயவையும் உயிர்பெற்று விழித்துச் செயல்படுகின்றன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, காமம், கோபம், குரோதம், கொடுங்கோன்மை என்று அனைத்தும் இதிலிருந்தே கருக்கொள்கின்றன.'' - நான் விளக்கினேன்.

''இந்த இடத்தில் விபச்சாரத்தை எப்படிப் பார்ப்பாய்?'' - நண்பன் நமது ஆரம்ப விஷயத்திற்கு திரும்பவும் வந்தான்.

''வறுமையின் காரணத்தினால் தன் உடலை விற்பவளை இன்றைய சமூகம் விபச்சாரி என்கிறது. ஆனால், அவள் விபச்சாரி அல்ல. இந்தச் சமூகம் உண்மையான பொதுமைக் (சோஷலிஸ) கோட்பாடுகளைக் கடைப்பிடித்திருந்தால் அவள் அந்நிலைக்குள்ளாகியிருக்கமாட்டாள். உண்மையில், இன்றைய சீரழிந்த சுரண்டல் சமூகத்தின் பக்கவிளைவே அவள். இந்நிலையில் விபச்சாரம் என்பது வேறு மட்டங்களில்தான் முழுமூச்சோடு இயங்குகிறது'' - நான்.

''நீ எதைச் சொல்கிறாய்?'' -அவன் விளக்கங்கோரினான்.

''இந்த உளுத்துப்போன சமூகத்துக்கு எதிராகப் போர்க்குணம் கொள்ளாது தனது சொந்த நலன்களைப் பார்ப்பதற்காக தன் எழுத்தின் மூலம் இச்சமூகத்திற்கு முண்டு கொடுப்பவன் தன் எழுத்தை விபச்சாரம் செய்கிறான். தன் நலம் பேண இச்சமூகத்துக்கு தன் அறிவை முண்டு கொடுக்கும் புத்திஜீவி தன் அறிவை விபச்சாரம் செய்கிறான். இச்சமூகத்துக்கு தன் உழைப்பின் மூலம் முண்டு கொடுக்கும் தொழிலாளி தன் தொழிலை விபச்சாரம் செய்கிறான். தமது சமூகத்தின் விடுதலைக்காக ஓர் சமூகம் போராடிக்கொண்டிருக்கும் போது , அச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தம்மை அடக்கியாளும் அரசுக்கு முண்டு கொடுப்பதன் மூலம் தமது முழுவாழ்க்கையையே விபச்சாரம் செய்கின்றனர். இத்தகைய பல மட்ட விபச்சாரங்கள் மூலம், கைவிடப்பட்ட நிலையில் தன் உடலை விற்கவேண்டிய நிலைக்கு வந்த பெண் விபச்சாரியல்ல. இந்தச்சமூகத்தால் கைவிடப்பட்ட கண்ணகி'' - நான் விளக்கினேன்.

''அப்போ உடல் ரீதியான விபச்சாரம் இங்கு நடைபெற வில்லையா?'' - அவன் விடுவதாய் இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உணர்வுகளால் இணைக்கப்பட்ட உறவு!

-சுந்தரலிங்கம்

அண்மையில் ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.கவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் இந்தியப்பிரதமர் வாஜ்பாயை சந்தித்து, இலங்கையின் இனப்பிரச்சினைத் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகமாகக்கொள்ளப்பட வேண்டும் என்றும், தமிழர் தாயகத்தில் இருந்து இராணுவம் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும் என்றும், வடக்கு - கிழக்கு நிலைமைகளை நேரடியாகப் பார்த்து வர இந்தியப்பாராளுமன்ற உறுப்பினர்களின் தூதுக் குழு ஒன்று அனுப்பப்படவேண்டும் என்றும் அக்கோரிக்கைகள் குறிப்பிடுகின்றன.

வழக்கம் போலவே தமிழ் மக்களும், தமிழ்க்கட்சிகளும் அ.தி.மு.க. கூட்டணியின் இவ்முன்னெடுப்பை ஆரவாரமாக வரவேற்றுள்ளன. மறுபக்கத்தில் சிங்களக் கட்சிகளும், சிங்களப்பத்திரிகைகளும் காரசாரமாக இவற்றைக் கண்டித்துள்ளன. ம.தி.மு.க. தலைவர் வை.கோ., மேலும் ஒரு படி சென்று இலங்கைத் தமிழ் மக்கள் மீது கூடிய அக்கறைக்கொண்ட இந்தியத் தேசியக் கட்சி பாரதீய ஜனதா தான் என பி.பி.சி. மூலம் அதற்கு பாராட்டுப் பத்திரமும் வழங்கியுள்ளார்.

உண்மையில், இது விடயத்தில் இந்தியா எவ்வாறு நடந்து கொள்ளும் என்பதை இந்திய அரசுருவாக்கத்தையும், அதன் அடிப்படையில், இந்திய ஆளும் சக்திகள் இலங்கை இனப்பிரச்சினையை எவ்வாறு நோக்குகின்றன என்பதையும் வரலாற்று வெளிச்சத்தில் ஆராய்கின்ற போதே கண்டுகொள்ள முடியும்.

இந்திய அரசு உருவாக்கம் என்பது பார்ப்பனீய சித்தாந்தத்தினால் மேலாதிக்கம் செலுத்தப்படுகின்ற, இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்ற ஒரு அரசுருவாக்கமாகும். இவ் அரசுருவாக்க சிந்தனையினாலேயே இந்திய அரசு தனது நாட்டிற்குள் பல்வேறு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டங்களையும் நசுக்கி வருகிறது. அசாம், காஷ்மீர், பஞ்சாப், வடகிழக்கு மாநிலங்கள் என்பவற்றின் சுயநிர்ணய உரிமைப்போராட்டங்கள் இவ்வாறே ஈவிரக்கமற்று நசுக்கப்படுகின்றன.

இலங்கையில் தமிழ் மக்களின் தனிநாட்டுப் போராட்டம், இந்திய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் ஊக்குவிக்கும் வல்லமை கொண்டது. இதனால், தமிழ் மக்களின் போராட்டத்தை இந்திய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் போராட்டமாகவே இந்திய ஆளும் சக்திகள் கருதி வருகின்றன. தமிழ் மக்களின் போராட்டத்தின் ஒவ்வொரு கட்ட வளர்ச்சியும் இந்தியாவிற்கு தனது மடியில் கைவைக்கும் உணர்வையே தோற்றுவித்து வருகின்றது. எனவே, இலங்கையில் தமிழர்களுக்கென ஒரு தனிநாடு உருவாவதை இந்தியா ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை.

ஆனால், மறுபக்கத்தில் இந்தியாவின் பாதுகாப்பை பேணுவதற்காகவும், தென்னாசியாவில் பிராந்திய வல்லரசுத் தன்மையை தக்கவைத்துக்கொள்வதற்காகவும், இலங்கையை தனது ஆதிக்க எல்லைக்குள் வைத்திருக்க வேண்டிய கட்டாயமும் இந்தியாவுக்கு இருக்கின்றது. குறிப்பாக அமெரிக்காவின் ஊடுருவலை இலங்கைக்குள் தடுக்க வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு உள்ளது. இதனால், ஏதோ இந்தியாவும் அமெரிக்காவும் பகைமைக்கொண்ட நாடுகள் என்பது அர்த்தமல்ல. பனிப்போரின் முடிவைத் தொடர்ந்தும், இந்திரா காந்தியின் மறைவைத் தொடர்ந்தும் இந்திய - அமெரிக்க உறவுகள் பலமடைந்து வருகின்றதென்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் இந்த உறவுகள், தனது பிராந்திய வல்லரசுத் தன்மையைக் குலைக்கக்கூடாது என்பதினாலேயே இலங்கைக்குள் அமெரிக்க ஊடுருவலை இந்தியா விரும்பவில்லை. இதை விட தன்னுடன் எதிர்ப்புத் தன்மைக் கொண்ட தனது அயல் நாடுகளான சீனாவுடனும், பாகிஸ்தானுடனும், இலங்கை அதிகளவு உறவு கொள்வதையும் இந்தியா விரும்பவில்லை.

எனவே, தனது தேவையின் அடிப்படையில் இலங்கையை ஆதிக்கத்திற்குள் வைத்திருப்பதற்கு இனப்பிரச்சினையை பயன்படுத்த வேண்டிய



கட்டாயமும் இந்தியாவுக்கு இருக்கிறது.

இதைவிட, இலங்கைத் தமிழர்களுடன், இனரீதியாக உறவுகளைக் கொண்ட தமிழ் மக்கள் தமிழகத்தில் வாழ்வதும், இலங்கையில் சிங்கள மக்களிலும் பார்க்க தமிழ் மக்களே இந்திய சார்பு நிலையை அதிகம் கொண்டிருப்பதும், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறைக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்த நிலையை உருவாக்கியுள்ளது. எனினும், முன்னைய தேவைகளோடு ஒப்பிடும்போது, இது இரண்டாம் தர தன்மையையே பெற்றுள்ளது.

இந்நிலையில் இந்திய ஒருமைப்பாட்டிற்கு பாதிப்பு வராத வகையிலும் இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தக்கூடிய வகையிலும் இனப்பிரச்சினையை அணுகுவதே இந்தியாவின் நிலைப்பாடாக உள்ளது.

இந்நிலைப்பாட்டை வென்றெடுப்பதற்காக தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை விலையாகக் கொடுப்பதற்கும், அது ஒரு போதும் பின் நிற்பதில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தம் அந்த வகையில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அது முழுக்க முழுக்க இந்திய ஆதிக்க நலனை அடிப்படையாகக்கொண்டே உருவாக்கப்பட்டது. தமிழர்களுடைய நலன் மருந்துக்குக் கூட அங்கு பேணப்படவில்லை. இதேபோல் தான், 1964ல் மலையக மக்களின் நலன்களை விலையாகக் கொடுத்து சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்தியா தன்னுடைய நலனில் இருந்து இலங்கையில் தலையிடுவது சரியாக இருக்கலாம். ஆனால், அதற்கு தமிழ் மக்களின் நலன்களை விலையாகக் கேட்பதை எவ்வாறு அனுமதிக்க முடியும் என தமிழ் மக்கள் கேட்கின்றனர் அவ்வாறு அனுமதிக்க முடியாது என்பதன் எதிரொலியாகவே புலிகள் - இந்திய படை யுத்தத்தையும், ராஜிவ் கொலையையும் அரசியல் விமர்சகர்கள் பார்க்கின்றனர்.

இன்றைய பாரதீய ஜனதா கட்சியாளர்களும், இந்திய அரசுருவாக்கத்திற்கு உட்பட்டவர்களானபடியால், இப்போக்கிலிருந்து விடுபடப் போவதில்லை. பா.ஜ. கட்சியினர் இந்திய அரசுருவாக்கத்தினை மிகவும் பலமாக பேணுபவர்கள் என்ற வகையில் இப்போக்கினை மேலும் வலிமையாக்கவே விரும்புவர். எனினும், ஏற்கெனவே பெற்ற பாடங்களினால், பிரச்சினையில் தலையிடுவதில் கொஞ்சம் அவதானமாகவே நடந்து கொள்வர்.

> "இந்திய சமஷ்டி முறை, ஒரு அரைகுறை சமஷ்டி முறை. அம்முறை முற்றிலும் பேரினமயத்திற்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு பொருத்தமான தீர்வாக ஒரு போதும் அமையப் போவதில்லை. இதனால் போரினால் சிதைந்து போயிருக்கும் தமிழர் தாயகத்தை கட்டியெழுப்பமுடியாது. இலங்கை என்ற ஒரு நாட்டிற்குள் தீர்வுகாணப்பட வேண்டுமானால், இரண்டு வழிமுறைகளே உண்டு. அதில் ஒன்று, பூரண சமஷ்டி ஆட்சி முறை. அமெரிக்காவில் இருப்பது போன்று சமத்துவமாக இணைக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி முறை. இலங்கையில் அவ்வாறான முறையை அறிமுகப்படுத்த வேண்டுமானால் இரண்டு இனங்களுக்கும் சமத்துவமாக அதிகாரம் பங்கிடப்பட்டு அவை இணைக்கப்பட வேண்டும். இங்கு பிரதேசங்களுக்கு அல்ல அதிகாரம் இனங்களுக்கே அதிகாரம் என்ற கோட்பாடு பின்பற்றப் படல் வேண்டும். மத்திய அரசு இனங்களின் கூட்டரசாக இருத்தல் வேண்டும்."

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என வரும்போது இந்திய அரசு, இந்திய சமஷ்டி முறைக்கு மேலான ஒரு தீர்வை இலங்கையில் அனுமதிக்கப் போவதில்லை. இதனை முன்னர் ஒரு தடவை ராஜிவ் காந்தியே தமிழ் கட்சிகளுக்கு கூறியிருந்தார். "இந்திய மாநில முறைக்கு மேலாக நீங்கள் எதுவும் கேட்கக்கூடாது" என தமிழ்க் கட்சிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

இந்திய சமஷ்டி முறை, ஒரு அரைகுறை சமஷ்டி முறை. அம்முறை முற்றிலும் பேரினமயத்திற்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்களுக்கு ஒரு பொருத்தமான தீர்வாக ஒரு போதும் அமையப் போவதில்லை. இதனால் போரினால் சிதைந்து போயிருக்கும் தமிழர் தாயகத்தை கட்டியெழுப்பமுடியாது. இலங்கை என்ற ஒரு நாட்டிற்குள் தீர்வுகாணப்பட வேண்டுமானால், இரண்டு வழிமுறைகளே உண்டு. அதில் ஒன்று, பூரண சமஷ்டி ஆட்சி முறை. அமெரிக்காவில் இருப்பது போன்று சமத்துவமாக இணைக்கப்பட்ட சமஷ்டி ஆட்சி முறை. இலங்கையில் அவ்வாறான முறையை அறிமுகப்படுத்த வேண்டுமானால் இரண்டு இனங்களுக்கும் சமத்துவமாக அதிகாரம் பங்கிடப்பட்டு அவை இணைக்கப்பட வேண்டும். இங்கு பிரதேசங்களுக்கு அல்ல அதிகாரம் இனங்களுக்கே அதிகாரம் என்ற கோட்பாடு பின்பற்றப் படல் வேண்டும். மத்திய அரசு இனங்களின் கூட்டரசாக இருத்தல் வேண்டும்.

இரண்டாவது, நாடுகளின் கூட்டாட்சி முறை, இரண்டும் தனிநாடுகளாக இருந்து பொது விடயங்களில் கூட்டாக இருந்து செயற்படும் முறை இதுவாகும். இன்றைய நிலையில் இதுவே கூடிய பொருத்தமுடையதாகும். சிங்கள அரசியல் ஆய்வாளரான கலாநிதி உயங்கொட "இனப்பிரச்சினைக்கு நாடுகளின் கூட்டாட்சியே சிறந்த தீர்வாக இருக்கும்" எனக்கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு தீர்வுகளுக்கும் இந்தியா உடன்படப் போவதில்லை. இதற்கு உடன்பட்டால் தனது சொந்த நாட்டிலும் அதனை அங்கீகரிக்க வேண்டி ஏற்படும். பார்ப்பனீய ஆதிக்க நிலைக்கு அது தடையாக இருக்கும். ஆதலால், அங்கு இதனை அங்கீகரிக்கப்போவதில்லை. சொந்த நாட்டில் அங்கீகரிக்க முடியாத ஒன்றை இன்னொரு நாட்டில் அங்கீகரி என்று கோரும் திராணி இந்தியாவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் இந்தியா இலங்கை இனப்பிரச்சினையில் தலையிடாது இருப்பதே தமிழ் மக்களுக்கும் நல்லது. இந்தியாவுக்கும் நல்லது. தமிழக அரசியல்வாதிகளுக்கு இலங்கை தமிழ் மக்களில் உண்மையில் அதிக கரிசணை இருக்குமானால், இந்திய அரசை நேரடியாக தலையிட வேண்டும் என்று கேட்பதை விட வெளியில் நின்று கொண்டு தமிழர்களது போராட்டத்தையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கும்படி கோருவதே சரியானதாக இருக்கும். இதன் அடிப்படையில் சர்வதேச ரீதியாக தமிழர்களின் போராட்டத்திற்கு ஒரு ஆதரவு பின்புலம் உருவாவதற்கு உதவவும் வேண்டும்.

இதைவிட தமிழ் மக்கள் தொடர்பான மனிதாபிமான உதவிகளை இந்தியா செய்ய முடியும். வடக்கு - கிழக்கில் அவ்வாறான பணிகளில் உதவுவதோடு தமிழக அகதிகள் விடயத்திலும் அவ்வாறு உதவலாம். தமிழகத்தில்; அகதிகள் முகாமுக்குள் வைத்து சித்திரவதை செய்யப்படாமல் அவர்களின் புனர்வாழ்வுக்கு உதவ வேண்டும். தமிழ் அகதிகளின் பிள்ளைகள் தமிழகத்தில் கல்வியினை மேற்கொள்வதற்கான சகல வழிகளையும் செய்யலாம்.

இவ்வாறான செயல்களை இந்தியா செய்வதையும், தமிழக அரசியல்வாதிகள் இதையிட்டு இந்திய அரசை வற்புறுத்துவதையுமே இலங்கைத் தமிழர்கள் விரும்புகின்றனர்.

ஏற்கெனவே ஒரு தடவை தலையிட்டதன் மூலம் பல விலைகளை இருதரப்பும் கொடுத்துள்ளது. தமிழ்த்தரப்பு மூவாயிரத்திற்கும், மேற்பட்ட மனித உயிர்களையும், கோடிக்கணக்கான சொத்துக்களையும் இந்திய ஆக்கிரமிப்புப்படைக்கு விலையாக கொடுத்துள்ளது. இந்திய தரப்பு ராஜீவ் காந்தியை விலையாகக்கொடுத்துள்ளது. இந்தியா ராஜிவ் கொலை சந்தேகநபர்களுக்கு மரண தண்டனை விதித்துள்ளதன் மூலம் தனது பழியினைத் தீர்த்துக்கொள்ள முயன்றாலும் அதோடு மாத்திரம் இந்தியா நின்று விடும் என்பதற்கில்லை. தமிழ் மக்கள் தனது உயிரிழப்பிற்கும், சொத்து இழப்பிற்கும் எந்த நீதிமன்றத்தில் தான் பழி தீர்த்துக்கொள்ள முடியும்.

இதற்குப்பின்னரும் கூட, தமிழ் மக்கள், இந்திய மக்களுடனும், தமிழக மக்களுடனும், தொடர்ந்து நட்புறவாகவே இருக்க விரும்புகின்றனர். ஏனெனில், இவ் உறவுகள் பல்வேறு துயரங்களுக்கு அப்பாலும், உணர்வுகளால் இணைக்கப்பட்டவையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மொழிமய அடையாளம், சிறுபான்மை இன மனோநிலை மற்றும் தேசிய ஒற்றுமை !

கலாநிதி : சுனில் காரிய(க்)கரவன,
(சிரேஷ்ட விரிவுரையாளர், களனிப் பல்கலைக் கழகம்)
தமிழில் : சி. செ. ராஜா.

*சுதந்திரம் கிடைத்து ஐம்பது வருடங்கள் கடந்து இருந்தாலும், இன்னும் நாம் அடிமை மனப்பாங்கிலிருந்து முழுமையாக விடுபடவில்லை. எம்முடையது, எம்முடையவர்கள் எனும் மதிப்பீட்டு மனநிலை இன்னும் எம்மிடையே ஆதிக்கத்தில் உள்ளது. எமது நாட்டினது சிறுபான்மை இனப்பிரிவுகளை அற்ப சொற்பமாகக் கவனிக்கும் மனோநிலை இவ் அடிமை மனநிலையின் தீமை பயக்கும் அழிவுச் சின்னமாகும்.*




Photo : Janak Mayadunne

தேசிய ஒற்றுமையை எவ்வாறு ஏற்படுத்துவது என்ற கேள்விக்குத் தீர்வைக் காண்பதே எம் முன்னாலுள்ள முக்கிய சவாலாகும். அரசியல், பொருளாதாரம், கல்வி போன்ற அனைத்துப் பிரிவுகளதும் அபிவிருத்தியின் முதல் அடிப்படை தேசிய ஒற்றுமையின் மீதே தீர்மானிக்கப் படுகிறது. ஆனபடியால் தேசிய ஒற்றுமை இல்லாது போகக் காரணம் என்ன? அதனை உறுதியாக மீண்டும் அண்மிப்பது எவ்வாறு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அனைத்துப் பிரஜைகளதும் பொறுப்பும், கடமையும் மட்டுமன்றி அவர்களது வாழ்வுக்குக் கட்டாய மானதொன்றாகவும் இன்று உருமாறி யுள்ளது.

இது தொடர்பாகப் பல்வேறு தொடர்புசாதனங்களும் இதுவரை செய்துள்ள பல்வேறு விளக்கங்கள் பிரச்சினைகளின் யதார்த்தத்தை விளங்கப்படுத்துவதைவிடப் பல்வேறு தவறான கருத்துகட்கு துணை போவதாகவே அமைந்து ள்ளன. இதற்குக் காரணம், ஏதாவது ஒரு அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டுமே இவ்வாறான பிரச்சினைகளைப் பார்த்துப் பழகிப் போயுள்ளமையேயாகும்.

இன்றைய தேசிய ஒற்றுமையின்மையின் மூல காரணம் பெரும்பான்மை இனத்துக்கும், சிறுபான்மை இனங்களுக்குமிடையே நிலவும் பரஸ்பர அவ நம்பிக்கையேயாகும். நீண்டகால ஏமாற்றங்களின் விளைவாக வந்த இவ் அவநம்பிக்கை, தமது பரஸ்பர அடையாளங்களை ஏற்றுக் கொள்வது தொடர்பான அவநம்பிக்கை ஆகும்.

இது, ஓர் இனத்திற்கு இன்னொரு இனம் மீது எழுந்த மிக ஆழமான குரோதத்தாலோ அன்றிப் பொறாமையாலோ எழுந்ததல்ல. மாறாக, பரஸ்பர அடையாளத்தை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் ஏற்பட்ட அவநம்பிக்கையேயாகும். இதனை மொழி குறித்த தகவல்களின் தெளிவாக உறுதிப்படுத்த முடியும். ஒரு தரப்பிடம் மற்றைய தரப்புத் தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள அவநம்பிக்கையின் வடிவத்தை அறிந்து கொள்வதினூடாகச் சந்தேகத்தையும், பயத்தையும் விலக்க முடியும். அதனூடாக பரஸ்பர அன்பையும், கௌரவத்தையும் ஏற்படுத்திக் கொள்ளமுடியும். இது தேசிய ஒற்றுமையையும் அபிவிருத்தியையும் தோற்றுவிக்கப்பெறும் தூண்டுதலாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இப் பிரச்சினை தொடர்பாக இன்று சிலர் கேட்கும் கேள்வி 'முரண்பாடு யாது?' என்பதாகும். ஒரு இனத்துக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட முரண்பாடுகள் என்று எதுவும் இருக்க முடியாதெனவும், எனவே, அனைத்து இனங்களுக்கும் பொதுவான பிரச்சினைகளை ஒரு இனத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட முரண்பாடுகளாக காட்டுவது பெரும்பான்மைக்குச் செய்யும் அநியாயம் எனவும் அவர்கள் சிந்திக்கிறார்கள். இன்னும் சில கருத்தியலாளர்கள், கடந்த காலத்தில் சிறுபான்மை இனங்கள் தொடர்பாக மொழி, கல்வி மற்றும் நிர்வாகம் சம்பந்தப்பட்ட சிற்சில அநியாயங்கள் இருந்ததாகவும் புதிய அரசியலமைப்புத் திருத்தங்கள் போன்றவற்றால் அவற்றுக்கு இப்போது தீர்வு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ்வாறான ஏனைய முரண்பாடுகளுக்காகவும் ஒற்றையாட்சி அரசொன்றினுள் தீர்வைக் காண முடியுமென்றும் தெரிவிக்கின்றனர்.

யதார்த்தத்திற்கு முகங்கொடுக்க விரும்பும் எவருக்கும் இங்கே காணக்கூடிய முக்கியமான ஒரு விடயம் யாதெனில், முரண்பாடு யாது எனக்கேட்கும் இக்கேள்வியே, சிறுபான்மைப் பிரிவுகளைப் பாதித்துள்ள முக்கிய முரண்பாடாக ஆகியுள்ளமையாகும். வைத்தியரிடம் செல்லும் நோயாளி ஒருவரிடம் அவருக்குப் பீடித்துள்ள நோய் என்னவெனக் கேட்டால் அந்நோயின் பெயரைக் கூறக் கூடிய நோயாளிகள் எத்தனை பேர் உள்ளனர்? மறுபுறம் நோய் அறிகுறிகள் தெரிந்திருந்தும், அதை விளங்கப்படுத்த முடியாத நிலையில் ஒருவர் இருக்கும்போது, எதுவித சோதனையும் இன்றி அவருக்கு நோய் ஏதும் இல்லையென கூறும் குரூரமான வைத்தியர் ஒருவர் மீது எந்த நோயாளிதான் நம்பிக்கை வைப்பார்? நோயாளி ஒருவரால் நோய் அறிகுறிகளை மட்டுமே கூற முடியும். எனவே முரண்பாடு என்ன என வினவுவதைவிட முரண்பாட்டின் தன்மை என்ன எனக் கேட்பது நேர்மையான கேள்வியாகும்.

ஜேக்ஸ் டெரிடா (Jacques Derrida) என்ற பிரான்சிய தத்துவஞானி, சிறுபான்மை இனப் பிரச்சினையைப் பெரும்பான்மைத் தொலைநோக்கில் மட்டும் பார்க்க முடியாது என்று கூறுகிறார். இதனால் சிறுபான்மை இனப் பிரச்சினைகளின் தீர்வோ அன்றி முடிவோ நிலையானதாக இருக்க வேண்டுமானால் அவை சிறுபான்மை மனநிலையினூடாகவும் நோக்கப்பட வேண்டியுள்ளது.

இங்கு மிகச் சிக்கல் வாய்ந்த முரண்பாடாக நாம் காண்பது, அவ் அவ் இனங்களில் தீவிரவாதப் பிரிவுகள் இருப்பதோ, அல்லது அவர்களின் உணர்ச்சிகளை தூண்டும் விதத்திலான செயற்பாடுகளோ அல்லது மாறாக, நடுநிலைக் கருத்துடைய பெரும்பான்மை மக்கள் மற்றும் சிறுபான்மை மக்கள் ஆகிய இரு பிரிவினருமே சிறுபான்மை மனநிலையில் நின்று அந்நோய் நிலைமை பற்றி அறிந்திராமை தான்.

தீவிரவாதிகள் எந்த நாட்டினதும் சமூகமொன்றில் இருக்கலாம். நடுநிலைக் கருத்துடையோரின் செயற்திறன் அல்லது செயலின்மையின் மீதுதான் தீவிரவாதிகளின் அளவும், அதிகாரமும் தீர்மானிக்கப்படும். தத்துவவாதி ஒருவர் கூறியதுபோல உலகில் அநேக தவறுகள் நடைபெறுவதற்குக் காரணம், தவறைச் செய்யும் சிறுபான்மையினர் அல்ல, அவற்றைக் கண்டு கொண்டு இயங்காதுள்ள பெரும்பான்மையே இதற்கு காரணமாகும். இதனாலெழும் சந்தேகத்தின் இலாபத்தை தீவிரவாதிகள் அனுபவிப்பார்கள்!

அவ்வாறெனில் சந்தேகம் யாது? பெரும்பான்மை மக்கள் இச்சந்தேகத்தினூடாக வழிநடத்தப்பட்டுக் கொண்டிருப்பது எவ்வாறு? அச்சந்தேகம் ஒரு தரப்பானதா அல்லது இரு தரப்பானதா? ஆகிய விடயங்களை அலசிப்பார்ப்பதானது இம்முரண்பாட்டின் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள வழியமைக்கக் கூடும்.

பெரும்பான்மை இலங்கைச் சிங்களவர்கள் தீவிரவர்திகள் அல்லர். எல்லாத் தேர்தல்களிலுமே தீவிரவாத அரசியல் கட்சிகள் பெறும் படு தோல்விகளுமே இதற்கு மிகச்சிறந்த சான்றாகும். அவ்வாறெனில் சிறுபான்மை இனப்பிரிவுகள் சுயாட்சிக்காகச் செய்யும் கோரிக்கைகள் மீது சந்தேக மனதுடன் பார்ப்பதற்குப் பெரும்பான்மை இனம் பழகிப்போயுள்ளது ஏன்? அதற்குக் காரணமாக நாம் காண்பது பெரும்பான்மை இனத்தினுள் உள்ள சிறுபான்மை மனோநிலையே ஆகும். சிங்கள மக்கள் தமது இனத்தை ஒப்பிட்டுப் பார்க்கப் பழகியுள்ளது 18% ஆன இலங்கைத் தமிழ் மக்களுடன் அல்லாமல் தென் இந்தியா, மலேஷியா, பிஜி தீவுகள், சிங்கப்பூர், பர்மா, இந்தோனேஷியா, மொறிஷியஸ் தீவு ஆகிய அகில உலகிலும் பரவியுள்ள தமிழ் மக்களுடனேயே ஆகும்.

இதன் காரணமாகச் சிங்களவர்களின் கண்களின் முன் தமிழர்கள் எனப்படுவோர் சிறுபான்மை இனப்பிரிவு ஒன்றல்ல என்றும்; இலங்கையை மட்டுமே தமது தாயகமாகக் கொண்ட சிங்களவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து ஒரு பெரும்பான்மை இனப்பிரிவு ஆகும்.

மறுபுறத்திலோ இலங்கைத் தமிழ் மக்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இன அடையாளச் சிக்கலொன்றுக்கு முகங்கொடுத்துள்ள பிரிவாக உள்ளனர். மொழி, கலாசார ரீதியில் இதனை நிரூபிக்க முடியும். இலங்கையின் பிரஜைகளான தமிழர் என எம்மால் அறியப்படும் இனக்குழு, தாம் இலங்கையர்கள் என அடையாளப்படுத்தப்படும் தமிழர் பிரிவாகும். யாழ்ப்பாணம், நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம், திருகோணமலை, வன்னிப் பிரதேசங்களில் பரந்து வாழும் இவர்கள் இலங்கையில் பரம்பரையாக வாழ்ந்து வரும் தமிழ் பேசுபவர்களாவர்.

இவர்கள் தாம், பாரம்பரியமாக இலங்கையர் எனப்பெருமையோடு தம்மை அடையாளப்படுத்துவோர் ஆவர். தமது பிரிவைச் சேராத தமிழ் பேசுகின்ற, குடிபெயர்ந்து வந்தவர்களை அடையாளப் படுத்துவதற்காக அவர்கள் பாவிக்கும் சொல் 'கள்ளத் தோணி' ஆகும். கள்ளத்தோணி என்பது கள்ளத் தோணி ஒன்றில் ஓடிவந்த வெளியாள் என்ற கருத்து உள்ள தமிழ்ச் சொல்லாகும். அதனை இப்போது சில சிங்களவர்கள், தமிழர்களைப் பொதுவாக அடையாளப்படுத்துவதற்காக பாவித்துக் கொண்டாலும், உண்மையிலேயே அது முதல் முதலாகத் தமிழர்களினாலேயே, தம் மத்தியில் வெளியார் ஆன குடிபெயர்ந்து வந்து போகும் தமிழ்ப்பிரிவுகளை அடையாளப் படுத்தும் முகமாக பாவிக்கப்பட்ட சொல்லாகும். இதனூடாக இலங்கைத் தமிழ் மக்களின் சிறுபான்மை மனோநிலை பெரிதும் தெளிவாகிறது.

இதனாலேயே இவ் இரு தரப்புமே தத்தமது இன அடையாளங்களை சிறுபான்மை இன மனோநிலையில் அணுகுவதே சிங்கள, தமிழ்ப் பிரச்சினையைச் சிக்கலாக்கும் முக்கிய விடயமாகியுள்ளது.

பரஸ்பர நம்பிக்கையீனத்தின் பிரதான அடிப்படையும் அதுவேயாகும். இச்சிறுபான்மை இன மனோநிலையை உக்கிரமடையச் செய்யக் காரணமான காரணியான மொழி, கலாசாரம் மற்றும் சமய அடையாளங்களைப் பாதுகாப்பது தொடர்பான அச்சத்தை, அந்த அறிகுறிகளை உண்மையிலேயே அறிந்து கொள்வதினூடாகவே அறிந்து கொள்ள முடியும்.

மொழி போன்றவை மனதின் கண்ணாடி என நோம் சொம்ஸ்கி என்ற பிரசித்திபெற்ற அமெரிக்க அறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளார். கலாசாரத்தின் முக்கியவாயில் மொழியே ஆகும். அநேக மனித விஞ்ஞானிகளும், சமூக விஞ்ஞானிகளும் மொழி என்பது ஏதாவது ஒரு மக்கள் சமூகம் ஒன்று தொடர்பான புதுமையான கண்ணாடி என ஏற்றுக்கொள்கிறார்கள். மொழியைப் பகுப்பாய்வதினூடாக அம்மக்கள் சமூகத்தினுடைய சிந்தனை, உலக நோக்கு, நம்பிக்கை, விசுவாசம் ஆகியன வெளிப்படுவதைப்புரிந்து கொள்ள முடியாது போல அம்மக்கள் சமூகத்தின் எண்ணங்கள் பிரார்த்தனைகள், மனோபாவம், எதிர்பார்ப்பு ஆகிய முக்கிய கலாசாரத் தகவல்கள் பலவற்றையும் வெளிப்படுத்தவும் முடியும்.

சிங்கள மொழி இந்து - ஆரிய மொழியாக இருந்தாலும் ஏனைய இந்து - ஆரிய மொழிகளிலிருந்து சிங்கள மொழியை வேறுபடுத்தும் அம்சங்கள் பல உள்ளன. ඞ,ඳ,ඬ,ඹ போன்ற நாசி ஒலி (Semi Nasal) எழுத்துக்கள் இருப்பது அவ்வாறான அம்சமொன்றாகும். வேறு எந்த இந்து - ஆரிய மொழியிலும் இல்லாத இவ்வாறான அம்சங்களினால் சிங்கள மொழிக்கேயுரிய பாரம்பரியமான ஒலி நிலை தீர்மானிக்கப்படுகிறது. இது மிக எளிதான உதாரணமாகும்.

சொற் பதங்கள், அடிகள், வசன அர்த்த தீர்மானங்கள் தொடர்பான தகவல்கள் அனைத்தும் ஒன்றாகிச் சிங்கள மொழியின் அடையாளப் படுத்தலைத் தீர்மானிக்கின்றன. அதனைப் பேசும் மொழிச் சமூகம் அவர்களின் கலாசார சிந்தனை முறை விசுவாசம், நம்பிக்கை அனைத்துமே அவ் அடையாளப் படுத்தலின் முக்கிய உறுப்பு இலட்சணங்களாகும்.

தமிழ் மொழி தொடர்பாகவும் இந்நிலைமையில் எதுவித மாற்றமும் இல்லை. விஷேடமாக இலங்கைத் தமிழ், ஏனைய திராவிட மொழிகளைப்போலவே ஏனைய தமிழ் உப மொழிகளிலிருந்தும் வேறுபட்டு வளர்ச்சியடைந்துள்ளது. இலங்கைத் தமிழுக்கு பாரம்பரியமான வேறு எதுவித தமிழ் உபமொழியொன்றிலும் காணக் கிடைக்காத ஒலிகள் பல உள்ளன.

ஒலி என்பது மொழியொன்றின் வரைபு மாத்திரமேயாகும். ஒலிக்

→20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சாஃப்டா : வல்லாதிக்க நாடுகளுக்கு ஒரு சவால் ?

தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு என அழைக்கப்படும் அதாவது பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஏழு நாடுகளின் ஒன்றிணைவில் உருவான சார்க் அமைப்பு நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், 1993 ஏப்ரல் மாதத்தில் SAPTA (South Asian Preferential Trade Agreement) செயற்பட ஆரம்பித்தது. இவ் ஒப்பந்தம் 1993 நவம்பர் 7ம்திகதி இவ் அனைத்து நாடுகளினால் ஏற்று கைச்சாத்திடப்பட்டதுடன், 1993 டிசம்பர் மாதத்திலிருந்து செயற்பட ஆரம்பித்தது.

### சப்டாவின் உச்சத்திற்கு செல்லல்

இவ் ஒப்பந்தத்திலிருந்து மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்தல் தற்போது சார்க் நாடுகளின் நோக்கமாகியுள்ளது. தெற்காசிய பிராந்தியத்தை சுதந்திர வர்த்தகப் பிரதேசமாக்கும் தன்மை மெதுவாக தோன்றி வருகின்றது. அது தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் (South Asian Free Trade Area- SAFTA) எனக் கூறப்படுகின்றது. இதன் கருத்து விசேட தன்மைகளின் கீழ் (உதாரணம்; பாதுகாப்பு காரணங்கள்) தவிர பிற அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிராந்தியத்தினுள், தேச எல்லைகளூடு மேற்கொள்ளப்படும் பொருள் மற்றும் சேவை பரிமாற்றத்தின் போது ஏற்படும் தீர்வை வரி மற்றும் தீர்வைவரியற்ற தடைகள் நீக்கப்பட்டு விடும் என்பதாகும்.

கி.பி.2001ல் செயற்பட ஆரம்பிக்கும் இது, உலகத்தின் பிரதான வர்த்தகக் கூட்டு (உதாரணம்; EU, ASEAN, NAFTA போன்ற)க்களுக்கு தெற்கு ஆசியாவின் மாற்றாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

சப்டா தெற்காசியாவில் மட்டும் வர்த்தகத் தடைகளை நீக்க செயற்படாது

வெளி[illegible]டன் கொடுக்கல் வாங்கல்களில் [illegible]படும் [illegible]பாது முன்னணி அமைப்பாக செய[illegible] படும் வழியை சமைத்துக் கொள்[illegible]தலும் இடம் பெறும்.

இவ்வாறான விடயங்களை மேற்கொள்வது கடினமானதாகும். பிராந்தியத்தினுள், நாடுகளின் இயல்புகள் மற்றும் மனித வளங்களை மிகவும் உத்தமமாக பிரயோசனத்திற்கெடுப்பதன் மூலம் அங்கத்துவ நாடுகளின் தொழிநுட்ப, வர்த்தக மற்றும் நிதி நிலைமைகளை பலப்படுத்துவதைத் தவிர, அங்கத்துவ நாடுகள் - குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையுடனான மிகவும் பலம் வாய்ந்த அரசியல் ஸ்திரத்தன்மையையும், ஒன்றிணைப்பையும் வளர்த்தெடுத்தல் இதன் நோக்காகும்.

சார்க் பிராந்தியத்தின் சனத்தொகை சுமார் 130 கோடி. இங்கு அதிகளவான இயற்கை வளங்களும், உற்பத்தி வசதிகளும் உண்டு. இதனால் இது பிற பிராந்திய வர்த்தக அமைப்புகளுக்கு உண்மையான மாற்றாக அமையும். மேலும், விசேடமாக குறிப்பிட வேண்டிய விடயம், பிற கூட்டமைப்புகளுடன் ஒப்பிடும் போது சப்டா, மிக குறுகிய காலத்ததில் யதார்த்தமாகியுள்ளதாகும்.

### ஏழை நாடுகளுக்கு ஆதரவு தேவை

தெற்காசியாவில் பங்களாதேஷ், மாலைதீவு, நேபாளம் மற்றும் பூட்டான் என்பன குறை அபிவிருத்தி நாடுகள் (Least Developed Countries) என கருதப்படுகின்றது. அந்நிலைமையிலிருந்து மீண்டுவரத் தேவையான சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்க வேண்டுமென விசேட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கையில் தொழிநுட்ப நலன்கள், பெருமளவான வரித்தடைகள், கப்பலேற்றம் போன்ற விசேட நலன்களை வழங்குதல், தொழிநுட்ப மற்றும் விவசாய செயற்திட்டங்களை ஆரம்பித்தல் நடாத்திச் செல்லுதல், ஏற்றுமதி வர்த்தகத்திற்கு உதவுதல் மற்றும் பயிற்சிகளில் ஈடுபடுத்தல் என்பன அடங்கும். பாதுகாப்பு நடவடிக்கைகளும், மிகுதிகளை செலுத்தும் நடவடிக்கைள் தொடர்பான செயற்பாடுகள் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அங்கத்துவ நாடுகள் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளுக்குள்ளாவதை தடுக்கமுடியும். உதாரணமாக, ஏற்றுமதியின் போது, நட்டம் ஏற்படும் நிலைமை தோன்றினால், திட்ட நலன்களை ஒரு தலைப்பட்சமாக பெற்றுக் கொள்ள, சிக்களுக்குள்ளான நாட்டுக்கு சந்தர்ப்பம் ஏற்படும்.

இவை அனைத்தும் சப்டாவின் அடிப்படை கொள்கைகளுக்கு இணங்கியதாகும். அவ் அடிப்படை கொள்கை, அங்கத்துவ நாடுகளின் பொருளாதார மற்றும் தொழிநுட்ப அபிவிருத்தி, வெளிப்புற வர்த்தக முறை, வர்த்தக மற்றும் தீர்வை வரி கொள்கை போன்ற விடயங்களை உள்ளிட்டு ஒப்பந்தமிட்ட நாடுகளுக்கு சமமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

### பிராந்தியத்தில் வர்த்தகம் 3% மட்டுமே

எவ்வாறாயினும், சார்க் பிராந்தியத்தினுள் உள்ளார்ந்த வர்த்தகம் அதன் முழு வர்த்தகத்தின் 3%, 4% மட்டுமே. இதனைபிற வர்த்தகக் கூட்டு அமைப்புகளுடன் ஒப்பிட்டு பார்க்க முடியாதளவுக்கு குறைவானதாகும். வட அமெரிக்க சுதந்திர வர்த்தக பிராந்தியத்தில் (NAFTA) பங்காளி நாடுகளுக்கிடையில் உள்ளார்ந்த வர்த்தகம் மொத்த வர்த்தகத்தில் 65% வதுடன், EU வில் அது 50%மாகும். இதற்கு காரணம் SAFTA ஆரம்ப நிலையில் இருப்பதாகும்.இந்தியா மற்றும் பாகிஸ்தான் கொண்டுள்ள விரோதமும் இதற்கு தடையாக விளங்குகின்றது. உதாரணமாக, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான தேயிலை வர்த்தகத்தை எடு[illegible]துக்கொள்ளலாம். இவ் வர்த்தகம் மூன்றாவது நாட்டுடன் செய்யப்பட்டதொன்றாகும். கடந்த வருட முதல் பகுதி தொடக்கம் அவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் தற்போது அக் கொடுக்கல் வாங்கல்கள் நேரடியாக மேற்கொள்ளப் படுகின்றது.

### வர்த்தக சமமின்மைக்கு தீர்வு!

வர்த்தக சமமின்மை நெருக்கடியை தீர்ப்பதற்காக இந்தியாவும், பாகிஸ்தானும் நேரடியாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். தற்போது பிராந்தியத்தின் பிரதான ஏற்றுமதி நாடாக இந்தியா விளங்குகின்றது. பிராந்தியத்தின் 70%மான ஏற்றுமதி நடவடிக்கைகள் இந்தியாவினால் மேற்கொள்ளப்படுகின்றது. பிராந்தியத்தின் பிரதான இறக்குமதி நாடுகள் இலங்கையும் பங்களாதேசும் ஆகும். இவ்விரு நாடுகளும் ஒன்றிணைந்து இறுக்குமதியில் 70%ஐ கொண்டிருக்கின்றன. இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றைத் தவிர பிராந்தியத்தின் பிற நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் மிக குறைவாகவே நடைபெறுகின்றது.

இச்சமநிலையற்ற தன்மையை சமப்படுத்த இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை மிக அதிகளவான வரிக் குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறப் படுகின்றது.

தென்னாசியப் பிராந்தியத்திற்குள் நடைமுறையிலுள்ள வர்த்தக ஒப்பந்தமாக சாப்டா (SAPTA- South Asian Preferential Trade Agreement) திகழ்கின்றது. இதனை மேலும் பலப்படுத்தி (SAFTA-South Asian Free Trade Area) சா:ப்டாவாக ஆக்குவதற்கான முயற்சிகளை சார்க் அமைப்பு செய்து வருகின்றது. இது 2001 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது. ஐரோப்பிய சங்கம் (EU), ஆசியான் அமைப்பு, வட அமெரிக்க சுதந்திர வர்த்தக வலையம்,(NAFTA) போன்றவை மூன்றாம் உலக நாடுகளின் மீதான தமது பொருளாதார மேலாதிக்கத்தை பிரயோகிக்கின்ற அமைப்பாக இயங்கி வருகின்றன. இதற்கு மாற்றான ஒரு அமைப்பாக சா:ப்டாவை பலர் கருதுகின்ற போதும், அது மேற்படி வல்லாதிக்க நாடுகள் மேலும் பிராந்திய நாடுகளை சுரண்டுவதற்கு திறந்து விடப்படும் ஒரு திட்டமாகவும் பலர் மத்தியில் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இக்கட்டுரை சா:ப்டா குறித்து யுக்தியபத்திரிகையில் வெளியான கட்டுரை.

தமிழில் : ரத்னா



### ஒவ்வொரு நாடுகளுக்குமான உற்பத்தி பட்டியல்

சப்டா ஒப்பந்தத்தின் கீழ் வர்த்தக ஒருங்கிணைப்புக்கான முதல் சுற்று அதன் உள்ளார்ந்த அரசாங்க குழுவின் ஆறாவது மாநாட்டில் இடம் பெற்றது. இது 1995ல் இடம்பெற்றது. இங்கு நாடுகள் இரு பகுதிகளாக மற்றும் பல பகுதிகளாக இறக்குமதி வரி, எல்லைக்கட்டணம் போன்ற தீர்வைகளுக்கு மேலாக தீர்வற்ற கடவுச்சீட்டு கட்டணம் போன்ற தடைகளை நீக்க சம்மதித்தனர். 1995 மே மாதம் இடம்பெறற சார்க் அமைச்சர்களின் மாநாட்டின் போது ஒவ்வொரு நாடுகளுக்கும் பலன் கிடைக்கும் உற்பத்திகளின் தேசிய உப அட்டவணை (National Schedules) தயாரிக்கப்பட்டது.

1995ல் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய உப அட்டவணைகளின் படி 226 பொருள் வகைகள் தொடர்பான நலன்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அவ் அவ் நாடுகளின் பொருட் பட்டியல் இவ்வாறானதாகும். இந்தியா 106, பாகிஸ்தான் 35, இலங்கை 31, மாலைதீவு 17, நேபாளம் 14, பங்களாதேஷ்12, பூட்டான் 11 பொருள் வகைகளில் விவசாய உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட பழங்கள், மற்றும் டின்மீன், இரசாயண பொருட்கள், தளபாடம், உலோக உற்பத்திகள், மோட்டார் சைக்கிள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள் என்பன அடங்கும்.

தேசிய விற்பனைச் சந்தையில் இறக்குமதி பொருட்கள் தொடர்பாக குறைவான வரி விகிதங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களுக்காக, 20% தொட்க்கம், 10% வ்ரையிலும் மாசி தொடர்பாக 10% தொடக்கம் 5% வரையிலும் வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

### உள்நாட்டு உற்பத்திக்கு தீங்கு

எவ்வாறாயினும், இவ்வாறு கிடைக்கும் வரிச் சலுகைகளினால் தேசிய உற்பத்தி மோசமடையும் நிலையை கவனத்தில் கொள்ள வேண்டும். விவசாய அமைச்சும், வர்த்தக அமைச்சும் பிரச்சினைக்குள்ளாவது இதனாலாகும். விவசாய உற்பத்திகளில் ஈடுபடுவோர் உச்சநிலையை பெற முயற்சிப்பர். வர்த்தகத்துறையில் ஈடுபடுவோர் குறைவரியில் அதிக பொருட்களை பெற்று, விற்பனை செய்ய முயற்சிப்பர். இலங்கை ஒவ்வொரு நாடுகளிலிருந்தும் கொள்வனவு செய்ய ஒப்பந்தம் செய்து கொண்ட பொருட்களில் விவசாய உற்பத்திகளும் அடங்கும்.

இவ்வாறு முதலாவது சுற்று 1995 தொடக்கம் 1997 வரை செயற்பட்டதுடன், இரண்டாவது சுற்று 19.97ல் ஆரம்பித்து அதில் மேற்கூறப்பட்ட 226 பொருட்களை தவிர மேலும், 1871 பொருட்களுக்கு வரிச்சலுகை பெற்றுக்கொடுக்கப்பட்டது. இந்தியா 902, பாகிஸ்தான் 363, நேபாளம் 233, பங்களாதேஷ் 226, இலங்கை 95, பூட்டான் 47, மாலைதீவு 5 என்ற வகையிலாகும்.

சப்டாவின் கீழ் 1997ல் இலங்கையின் முழு இறக்குமதி அமெரிக்க டொலர் 14,66ஆக இருந்ததுடன் ஏற்றுமதி 12.63 ஆகும். பிரதான ஏற்றுமதி பொருட்கள் சாதிக்காய், ஏலம், தேங்காய், தேங்காய்ப்பால், பாக்கு, பிஸ்கட் என்பனவாகும். பிரதான இறக்குமதி பொருட்கள் சைக்கிள், மாசி, கிளச் பிளேட்ஸ், மற்றும் காபன் பிளெக் என்பனவாகும்.

இவ்வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை மேற்படி பலன்களையே அனுபவித்து வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## Some Thoughts on Mediation



Dr. Jayadeva Uyangoda - University of Colombo

Is international mediation the ... appropriate course of action in ... in Sri Lanka's ...

senger is earnestly trying to arrange appointments with politicians, the 'secret message' might enter Colombo's political grapevine in no time and even ...

a viable settlement to the ethnic question will require a radical re-structuring of the Sri Lankan state. That, of course, will need a consensus be- ... politi-

# மத்தியஸ்தம்: சில சிந்தனைகள்

### கலாநிதி ஜயதேவ உயங்கொட

இலங்கைப் பிரச்சினையின் இன்றைய சூழ்நிலையில் சர்வதேச மத்தியஸ்தம் என்பது ஒரு பொருத்தப்பாடான நடவடிக்கையாக கொள்ளப்படலாமா? 'மத்தியஸ்தம்' என்ற சொல், அந்தச் சொல்லின் மூலமாக வெளிப்படுத்தப்படும் சிக்கல் நிறைந்த சிந்தனைகளை போதுமானளவுக்கு வெளிப்படுத்தும் தன்மையைக் கொண்டுள்ளதா? என்ற கேள்விகள் தொடர்பாக சில பிரதிபலிப்புக்களை வெளியிடுவது சிலவேளைகளில் பயனுள்ளதாக அமையக் கூடும்.

பொதுவான அர்த்தத்தில், மத்தியஸ்தம் என்பது பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருக்கும் இருதரப்பாருக்கிடையில் பரஸ்பரம் ஒத்துக் கொள்ளக் கூடிய ஒரு உடன்பாட்டுக்கு வருவதற்காக ஒரு மூன்றாவது தரப்பு தீவிரமாக பங்கெடுத்துக் கொள்ளலைக் குறிக்கிறது எனலாம். மூன்றாம் உலக நாடுகளின் பல்வேறு பிரச்சினைகளில் மத்தியஸ்தம் முயற்சிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சிலவற்றில் சிறப்பாக வெற்றியும் கிடைத்திருக்கிறது. வேறு சிலவற்றில் வெற்றி கிட்டாமலும் போயிருக்கிறது. பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக வெளிவந்துள்ள பெருந்தொகையான இலக்கியங்களில், அரசுகளுக்கிடையிலான பிரச்சினைகள் மற்றும் உள்நாட்டு சிவில் யுத்தங்கள் தொடர்பான மத்தியஸ்தங்களின் போது எழும் சிக்கல்கள் குறித்த வளமிக்க அறிவுச் செல்வங்களை இப்போது பெறக் கூடியதாக உள்ளது.

மத்தியஸ்தம் வெற்றிபெறுவதற்கான முன்நிபந்தனைகளில் ஒன்று, 'பிரச்சினைக்குரிய இருதரப்பாரும், பரஸ்பர விட்டுக்கொடுப்புகளினூடாக தமது சிக்கல்களை முடிவுக்கு கொண்டுவர தயாராக இருப்பதாகும்' என்று இந்த இலக்கியங்கள் கூறுகின்றன. இந்த நிபந்தனை பூர்த்திசெய்யப்படும் நிலைமை இல்லாவிடில், ஒரு மத்தியஸ்தரால் பெரிதாக எதையும் சாதித்துவிட முடியாது. ஆட்சி அதிகாரத்தினை மையமாகக் கொண்ட இராணுவ ரீதியான சண்டை நிலவும் ஒரு சூழலில், சம்பந்தப்பட்ட இரு தரப்பாரும் மூன்றாம் தரப்பு செயற்படுவதற்கான ஒரு இடைவெளியை உருவாக்காவிட்டால், மத்தியஸ்தருடைய பாத்திரமானது மிகவும் சிரமமான ஒன்றாகவே இருக்கும்.

இலங்கையில் நிலவும் சிக்கலிலுள்ள சில தனித்துவமான தன்மைகள், பிரச்சினையை தீர்ப்பதற்கான செயற்பாட்டினை கடினமாக்கிவிட்டுள்ளன. உதாரணமாக யுத்தத்தில் ஈடுபடும் போது புலிகளோ, அரசாங்கமோ எத்தகைய அரசியல் தொடர்பையும் கொண்டிருப்பதாக தெரியவில்லை. இருதரப்பாருக்கும் இடையில் அவநம்பிக்கை பலமாக வளர்ந்துவிட்டிருக்கிறது. இது எந்தளவு தூரம் வளர்ந்து விட்டிருக்கிறதென்றால், புலிகளிடமிருந்து இரகசிய அரசியல் செய்தியொன்றைக் கொண்டு யாராவது கொழும்புக்கு வந்திருப்பதாக கூறினாலும் கூட, இங்குள்ள அரசியல்வாதிகள் அதை முக்கியமான விடயமாக கருதுவதில்லை. பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு நடந்துள்ளது. வந்திருக்கும் தூதுவர் அரசியல்வாதிகளை சந்திக்க ஆவலாக முயன்று கொண்டிருக்கும் போதே, அந்த இரகசியச் செய்தி கொழும்பின் அரசியல் வட்டாரங்களுக்குள் கசிந்து பத்திரிகைகளுக்கு போய்விடுகிறது!

புலிகள் தாம் கருத்தில் எடுக்கக் கூடிய சமரசத்திற்கு வருவதற்காக அடிப்படைகள் என்ன என்பதை இதுவரை அறிவிக்காமல் இருப்பதானது அரசியற் செயற்பாட்டை மேலும் சிக்கலுக்குள்ளாக்கி வருகிறது. தனி நாடு என்பது ஒரு சமரசப் பேச்சுவார்த்தைக்கான ஒரு விடயமாக இருக்க முடியாது. அப்படியானால், அதற்கு மாற்றாக அவர்கள் ஆராய விரும்பக் கூடிய தீர்வு என்ன? கொழும்பிலுள்ள எந்த அரசியல்வாதியோ அல்லது உத்தியோகத்தரோ ஏன் புலிகளின் அனுதாபிகளோ கூட இதற்கான பதிலை அறிய மாட்டார்கள். எனவே, மத்தியஸ்தம் ஒன்று நடைபெறுவதாக இருந்தாற்கூட அது, அரசியற் தெரிவுகள் சிந்திக்கப்பட்டு, கலந்துரையாடப்பபட்டு, விவாதிக்கப்படுகின்ற ஒரு நீண்ட கடுமையான முயற்சியாகவே இருக்கும்.

மத்தியஸ்தம் தொடர்பான ஜனரஞ்சகமான கருத்துக்கள், சிக்கலுக்கான தீர்வுகள் இலகுவாக கிடைத்து விடுமென்பது போல வெளிப்படுத்தப்படுகின்றன. முடிவேயில்லாது தொடரும் இலங்கையின் பிரச்சினை காரணமாக அத்தகைய எதிர்பார்ப்புக்கள் எழுவது இயல்பானதே. ஆனால், இலங்கையின் பிரச்சினையில் உள்ளடங்கியுள்ள சிக்கல்களை வைத்துப் பார்க்கும்போது, ஒரு ஸ்திரமான மத்தியஸ்த முயற்சி கூட உடனடி விளைவுகளை தந்துவிட முடியாது என்பதையே காட்டுகின்றன. எனவே, மத்தியஸ்தமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு படியாக மட்டும் - தீர்வை நோக்கிய ஒரு படியாக மட்டுமே காணப்பட வேண்டும்.

மத்தியஸ்தத்திற்கான இன்னொரு முக்கியமான அடிப்படையிலும் கூட இன்றைய இலங்கை பலவீனமாக உள்ளது. அதாவது, புலிகளுடனான பேச்சுவார்த்தை முயற்சிக்கான ஒரு சாத்தியமான முடிவில் ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் இடையில் ஒரு உடன்பாடு இல்லை. ஆளும் கட்சி புலிகளுடனான ஒரு உடன்பாட்டுக்கு வருவது கிடக்கட்டும் குறைந்தபட்சம் ஒரு புதிய பேச்சுவார்த்தை தொடரைத் தானும் தனிப்பட்ட முறையில் தொடங்க அதற்கு முடியாதுள்ளது. இராணுவத் தீர்வைத் தவிர்ந்த வேறெந்தத் தீர்வையும் விரும்பாத சிங்களத் தேசியவாதிகள் மத்தியிலுள்ள கடும்போக்காளர்களின் எதிர்ப்பின் காரணமாக எந்தவொரு அணியும் தனிப்பட்ட முறையில் பிரச்சினைக்கான ஒரு தீர்வு முயற்சியில் இறங்க முடியாதுள்ளது. ஆனால், இனத்துவப் பிரச்சினைக்கான ஒரு நிலைத்து நிற்கக் கூடிய தீர்வானது இலங்கை அரச கட்டமைப்பில் தீவிரமாற்றங்களை கோருவதாக உள்ளது. உண்மையில் அதற்கு இரு சிங்கள அரசியல் உருவாக்கங்களான ஆளும் ஐக்கிய முன்னணி மற்றும் ஐ.தே.கவுக்கிடையிலான உடன்பாடு அவசியமானதாகும். அண்மையில் நடந்து முடிந்த அயர்லாந்து சமாதான ஒப்பந்தமானது பிரித்தானிய மற்றும் அயர்லாந்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளினதும் உடன்பாட்டின் மேல் உருவான ஒன்றாகும். கொன்சர்வேட்டிவ் கட்சியும், தொழிற்சங்கட்சியும் ஏனைய பிரச்சினைகளில் தமக்கிடையில் வேறுபாடுகளைக் கொண்டிருந்த போதும், அயர்லாந்துப் பேச்சுவார்த்தைச் செயற்பாட்டினைப் பொறுத்த மட்டில் வேறுபட்டு நிற்கவில்லை. உண்மையில் டொனி பிளேயர், ஜோன் மேஜர் தொடக்கி வைத்ததைத் தொடர்ந்து செய்தார்.

இலங்கையில், இன்று மிக அவசியமாகத் தேவைப்படுபவை இரண்டு விடயங்கள்; பொஐ.மு. மற்றும், ஐ.தே.கவுக்கிடையில் இனப் பிரச்சினைத்தீர்வு தொடர்பான ஒரு உரையாடல் செய்யப்படலும், அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையில் அரசியல் ரீதியான தொடர்பாலுக்கு ஒரு வழிமுறையை உருவாக்கிக் கொள்வதும், யுத்த வேளைகளின் போது புலிகளும் அரசாங்கமும் ஒன்றுடன் ஒன்று இராணுவ ரீதியாக மட்டுமே பேசிக்கொள்ள விரும்புவதாகத் தெரிகிறது. உண்மையில் அரசாங்கத்திற்கும், ஐ.தே.கவுக்கும் இடையில் அரசியல் ரீதியான உரையாடல் நடைபெறாத ஒறு புறமும் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான தொடர்பாடல் நடைபெறாதது இன்னொரு புறமுமாக, இலங்கையின் பிரச்சினைத் தீர்க்கப்படுதலை கடினமானதாக்கியுள்ளன. அதே வேளை, புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஒரு அரசியல் பேச்சுவார்த்தை நடைபெற ஒரு யுத்த தவிர்ப்பு உடன்பாடோ யுத்த நிறுத்தமோ முக்கிய முன்நிபந்தனையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்ட முரண்பாடுகள் பலவற்றில், சம்பந்தப்பட்டவர்கள் யுத்தம் செய்துகொண்டே பேச்சுவார்த்தையும் நடாத்தியிருக்கிறார்கள். இலங்கையின் சொந்த அனுபவத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தங்கள் அரசியல் சட்டபூர்வத்தன்மையை இழந்து வந்திருக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு விரைவான ஒரு தீர்வைநோக்கி செல்வதற்குரிய சர்வதேச மத்தியஸ்தம் வேண்டும் என்பது இலங்கை பிரச்சினையின் இன்றைய சூழ்நிலையில் சற்று அதிகப்பட்சமான ஒரு நம்பிக்கையுடன் கூடிய எதிர்ப்பார்ப்பாகும். ஒரு பயனுள்ள தெரிவு அரசுக்கும், ஐ.தே.கவுக்கும், புலிகளுக்கும் இடையில் ஒரு அரசியல் உரையாடலை சாதிக்கப்படக் கூடிய குறைந்த பட்ச குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்துவதற்கான சர்வதேச உதவிைப் பெற்றுக் கொள்வதாகும். இத்தகைய ஒரு உரையாடல் உடன்பாட்டுக்கு வரக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதற்கான பங்களிப்புக்களை வழங்குவதற்கு அதிகபட்ச சாத்தியப்பாடுகள் இருக்கின்றன.

**நன்றி: மேர்ஜ் செய்திமடல்**
**ஜுன் 1998**

# சண்டே லீடர்: தாக்குதலின் பின்னணி என்ன?

கடந்த புதன்கிழமை (17.06.1998) சண்டே லீடர் ஆங்கில வாராந்திரியின் ஆசிரியர் லசந்த விக்கிரமசிங்ஹவின் வீடு இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கிலக்காகியிருக்கிறது. சூடான அரசியல் செய்திகளையும், உள்விவகாரங்களையும் புட்டுப் புட்டு வைக்கும் சண்டே லீடரின் ஆசிரியர் குண்டர்களால் இலக்கு வைக்கப்பட்டது இது இரண்டாவது தடவையாகும். முதன்முறை இவர் தாக்கப்பட்டபோது தகவல் சுதந்திரம் பற்றி அதிகம் பேசிய அரசாங்கம் எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இம்முறையும் அரசு - பத்திரிகைத் தணிக்கையை அமுல்படுத்திக் கொண்டிருக்கிற இவ்வேளையிலும் - தாக்குத்ல் நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களை விரைவில் கைது செய்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு முன்னைய பாணியில் பணித்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் ஏதோ ஒரு அரசியல் கட்சியின் அல்லது பிரமுகரின் குண்டர்களால் இடம்பெற்றிருக்கலாம் என்பது இலகுவில் ஊகிக்கக் கூடிய ஒன்றாக இருப்பினும் குற்றவாளிகள் எவ்வாறு இனங்காணப் படுவார்கள் என்பது கேள்விக்குரிய விடயம் தான். இக்பால் அத்தாஸ் தாக்கப்பட்டபோது அவரைத் தாக்கியவர்கள் பலர் என்பதை இலகுவில் இனங்காணும் சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் லசந்தவின் விடயத்தில் அவ்வாறல்ல. பத்திரிகை ஆசிரியர் என்ற வகையில் பத்திரிகையின் முற்றுமுழுதான செய்திகளுக்கும் பொறுப்பேற்க வேண்டியவர் லசந்த. இக்பால் அத்தாஸ் இராணுவ பத்தி எழுத்தாளர் மட்டுமே. அவர் எந்த அரசியல் கட்சி சார்ந்தும் இனங் காணப்படவில்லை. லசந்த ஐ.தே.க. காரர் என்றும், ரணிலின் உறவுக்காரர் என்றும் இனங் காணப்பட்டார். இவரது பத்திக்கு மட்டுமல்லாமல், பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் பத்திரிகையில் வரும் முழுச் செய்திகளுக்கும் பொறுப்பானவர் என்ற முறையில் அவர் அதில் வரும் எந்த விடயத்திற்காகவும் தாக்கப்படலாம் என்ற நிலை இருக்கிறது. அரசாங்கம் குறித்து தீவிர விமர்சனம் செய்துவரும் இவரது பத்திரிகை, அரசாங்கத் தரப்பினரின் ஆத்திரத்தை பெருமளவுக்கு தூண்டியுள்ளது என்பது வெளிப்படை. இவர் மீதான இத்தாக்குதலுக்கு காரணமாக அரசு தரப்பின் மீதே குற்றங்கள் சுமத்தப்படுகின்றன.

எனினும், இத்தாக்குதல் சம்பவம் அரசதரப்பு உட்பட்ட சகலரதும் பலத்த கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. 'தொடர்புத்துறைக்கு எதிரான இவ்வாறான பயங்கரவாதச் செயல்களை நாம் அனுமதிக்க முடியாது' என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார். 'பத்திரிகையாளர்கள் நல்லதையோ கூடாததையோ எழுதலாம். ஆனால், அவர்கள் தாக்கப்படக் கூடாது' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே தொடர்பூடகத்துறை சம்பந்தப்பட்டு 'நல்ல பெயரில்லாத பொ.ஐ.மு. அரசாங்கத்தில் தற்போது தணிக்கையும் அமுல்படுத்தப்பட்ட நிலையில் இவ்வாறு பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடாத்தப்படுவது மேலும் மேலும் அவநம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டு செல்கிறது.




தணிக்கை தொடர்பான அதிருப்தியை வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் வெளிப் படுத்தியிருக்கிறார்கள் என்பதும் - இங்கு குறிப்பிடத்தக்கது.

இதுபோக, சண்டே லீடருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்போவதாக அமைச்சர் மங்கள சமரவீரவும் அச்சுறுத்தல் விடுத்துள்ளார். எனினும், இது தொடர்பான நோட்டீஸ் தமக்கு இன்னும் வரவில்லை என்றும், அப்படி வந்தால் அதை சட்டரீதியில் எதிர்கொள்ள தாம் தயாராக இருப்பதாகவும் சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

எப்படியிருப்பினும், பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களை, அடக்கு முறைகளை - அவை எத்தரப்பில் இருந்து வந்தாலும் - சரிநிகர் கண்டிப்பதோடு இதற்கெதிரான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களை வலியுறுத்திக் கோருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாம் வகுப்புவாதக் கட்சியில் இருக்க மாட்டோம்!

கடந்த 17 வருட ஆட்சியில் (1977 - 94) ஐ.தே.கட்சி தமிழ்மக்களிடம் அம்பலப் படுத்தப்பட்டது என்பது உண்மைதான். ஆனால், 1994ன் பின்னர் ஐ.தே.கட்சியினரையும் மிஞ்சிய சந்திரிகா ஆட்சியினரின் சாதனைகள் பற்பல. 17 வருட ஆட்சியில் சாதித்தவைகளை பட்டியல் போடுவதை விட இந்த நான்கு வருட ஆட்சியின் பட்டியல் கனதியானது.

செய்திச் சுதந்திரம், சுதந்திர தொடர்பூடகம் என்பனவற்றை வலியுறுத்தி ஆட்சிக்கு வந்த பொ.ஐ.மு. அரசாங்கம் செய்தித்தணிக்கை, கருத்துச் சுதந்திர மறுப்பு போன்றவற்றை கொண்டு வரவும் தயங்கவில்லை.

இன்று ஐ.தே.க. எதிர்க்கட்சியாக இருந்து அடுத்த தேர்தலை குறிவைத்து தனது காய்களை, நிகழ்ச்சி நிரல்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

இது ஒரு புறமிருக்க, வரலாற்றைப் பின்னோக்கி நகர்த்தும் போது ஐ.தே.கட்சின் சில பக்கங்கள்...

1946இல் ஐ.தே.க. உருவாக்குவதற்கான தீர்மானம் வந்தபோது அதைப் பிரேரித்தவர் எஸ். நடேசன் ஆவார்.

19.1.1956ல் ஐ.தே.க செயற்குழுக் கூட்டம் நடந்தது. அப்போது ஐ.தே.கட்சியைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகள் எஸ். நடேசன், வி.குமார சுவாமி ஆகியோரும் தமிழும் உத்தியோக மொழியாக வேண்டுமென்ற பிரேரணையை கொண்டு வந்தனர். ஆனால், இப் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

18.2.1956ல் ஐ.தே.கட்சியின் களனி மாநாட்டில் 'சிங்களம் மட்டும்' அரச கருமமொழியாயிருக்க வேண்டுமென்ற முடிவை கட்சி எடுத்தது. இதற்கான பிரேரணையை டி.பி.டபிள்யூ. கன்னங்கரா கொண்டு வந்தார். செயற்குழு அங்கீகரித்து ஏற்றுக்கொண்டது.

செயற்குழுவின் இத்தீர்மானத்தை எதிர்த்து சகல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியை விட்டு வெளியேறப் போவதாக கூட்டத்தில் அறிவித்தனர்.

இதன் படி, 20ம்திகதி மந்திரி நடேசன் உட்பட ஏழு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்தனர். அவர்கள் வருமாறு:- எம்.எம். ராஜமாணிக்கம், எம்.ஈ.எச்.முகமது அலி, வி.குமாரசுவாமி, ஏ.எம்.மெர்சா, ஏ.எல். தம்பிஐயா, ஆர்.பி. கதிர்காமர், வி. நல்லையா போன்றோர்.

மேலும், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து செனட்டர் எஸ்.ஆர். கனகநாயகமும், ஐ.தே.கட்சியிலிருந்து விலகுவதற்கான தனது இராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார், கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''ஆழ்ந்த மனவருத்தத்துடன் நான் ஐ.தே.கட்சியில் இருந்து இராஜினாமாச் செய்கின்றேன். கட்சியின் ஆரம்ப காலத்திலிருந்து அநேக வருடங்களாக நான் கூட அங்கத்துவனாயிருந்த காரியக்கமிட்டி தற்போது செய்துள்ள மோசமான தீர்மானமே இம்முடிவுக்கு காரணமாகும். நான் தலைமைப் பதவி வகித்த தேசிய தமிழர் சங்கத்தை, 1946 இல் எல்லா சமூகங்களிற்கும் நீதியும், சுதந்திரமும் வழங்குவதற்கான ஒரு கட்சியைத் தோற்றுவிக்க ஒன்று சேரும்படி காலஞ்சென்ற டி.எஸ். சேனநாயக்க அழைத்தார். எல்லா சமூகங்களிற்கும் நீதியும் சமத்துவமும் வழங்குவதற்கான அமைப்பென்று தொடங்கப்பட்ட ஐ.தே.க., அதற்காகப் போராடாமல் சிங்களப் பெருந்தேசிய வாதத்துக்கு உட்பட்டது'' எனறார்.

''சுயமரியாதையுள்ள தமிழன் வகுப்புவாதக்கட்சியாகிவிட்ட ஐ.தே.கட்சியில் தொடர்ந்து இருக்க இடமே இல்லை'' என்று நடேசன் குறிப்பிட்டார்.

மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் முகமது அலி இது பற்றிக் குறிப்பிடுகையில், ''சிறுபான்மையினருக்கு ஐ.தே.க நியாயம வழங்கும் என்றும், அதன் மூலம் உண்மையான ''இலங்கையர் சமூகம்'' உருவாகும் என்றும் எதிர்பார்த்து, நான் ஐ.தே.கட்சியில் சேர்ந்தேன். ஆனால், ஐ.தே.க; கொள்கைக்கு விரோதமாக பெரும்பான்மைச் சமூகத்தின் நலன்களிற்கு மட்டும் உகந்த முறையில் நடப்பதன் மூலம், ஒரு வகுப்புவாத ஸ்தாபனமாகிவிட்டது'' என்றார்.

எஸ்.நடேசன் இராஜினாமாச் செய்து பாராளுமன்றத்தில் பேசியபோது; ''ஜனநாயகம் என்பதன் பொருள் பெரும்பான்மையினத்தின் கொடுங்கோண்மை அல்ல, சிறுபான்மையினரிற்கு நீதியும், சமத்துவமும் வழங்குவது தான் ஜனநாயகம். ஐ.தே.கட்சியில் முன்பு நிலவிய இக்கோட்பாடு இன்று அழிந்து விட்டது. எனவே தான் இக்கட்சியிலிருந்து நாம் வெளியேறுகிறோம்'' என்று குறிப்பிட்டார்.

இவை யாவும் வரலாற்றில் நிகழ்ந்தவை. இவற்றைக்கற்று நாம் படிப்பினைகள் பெறவேண்டும். இதே தவறுகள் நிகழாவண்ணம் விழிப்பாக இருக்க வேண்டும். காலகட்ட மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் கூட கவனத்தில் கொள்ள வேண்டும். அப்போதே ஐ.தே.க. மீது நம்பிக்கை இழந்த தமிழ்ப் பிரதிநிதிகள்.

இன்று 1998லும் ஐ.தே.கவானது தமிழர்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய கட்சியல்ல. 56களுக்கு பின்னர் கட்சியின் வளர்ச்சி இன்னும் மோசமாக இறுகிய பேரினவாதக்கட்சி தான். சந்தேகம் தேவையில்லை.

தமிழர்களைப் பொறுத்தவரையில் ஐ.தே.க, ஸ்ரீ.ல.சு.க யாவும் தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளைப் பறித்து, அரசியல் எதிர்கால மற்ற வாழ்வியல் நெருக்கடிகளையும் ஏற்படுத்தி, தமிழர்களது இருப்பியலுக்கு பெரும் அச்சுறுத்தல்களையும், நெருக்கடிகளையும், துன்பங்களையும் ஏற்படுத்தி வருபவர்களாகவே உள்ளனர். இலங்கையின் நவீன அரசு உருவாக்கக் காலத்தில் இருந்து இது நடைமுறையில் வளர்ந்து வருகிறது. இதுவே இன்றைய இலங்கையின் வரலாறு...

இலங்கையின் பின்வரும் வரலாற்றை முன்கூட்டியே உணர்ந்து கொர்ண்ட கொல்வின் ஆர்.டி. சில்வா 1956களிலேயே தீர்க்கமான கருத்து ஒன்றை வெளியிட்டார். ஆம், பண்டாரநாயக்காவை சுட்டிக் காட்டியவாறு தெரிவித்தார்.

''தமிழர்களை நீ துன்புறுத்துவாயானால், அவர்களை செம்மையாக நடத்தத் தவறினால், அவர்களை அடக்கி ஒடுக்கி தொல்லை மேல் தொல்லை கொடுத்தால், தனித்துவமான சொந்த மொழிகளையும், பாரம்பரியத்தையும் கொண்ட அந்த மக்களிலிருந்து ஒரு புதிய தேசம் எழுவதற்கு நீ காரணகர்த்தாவாயிருப்பாய். இப்பொழுது அவர்கள் கோருவதைவிட மேலும் அதிக கோரிக்கைகளிற்கு விட்டுக் கொடுக்க வேண்டி வரும். மிகவும் பிந்தி, அற்பத்தனமாக நடந்து கொள்வதைவிட ஒரு விவேகமான அரசியற் தலைவர் முன்கூட்டியே தாராளத் தன்மையோடு நடந்து கொள்வான்'' எனக் குறிப்பிட்டார்.

இன்று வரலாறு எதை உணர்த்தி நிற்கிறது. திரும்பத் திரும்ப வரலாற்றிலிருந்து படிப்பினைகள் பெறாமல், தொடர்ந்தும் அதே தவறுகளை விட்டு வரலாற்றை இன்னும் மோசமாக வழிநடத்துவதையிட்டு என்ன வென்று கூறுவது...

வரலாற்றிலிருந்து கற்கத் தவறினால்.....?

## விபச்சாரம்...

''ஏன் இல்லை? வீட்டில் கட்டிய மனைவி சிலைபோல் இருக்க,தன் சுயநல மன விகாரங்களால் பிறபெண்களோடு சோரம் போபவன் தன் உடலை விபச்சாரம் செய்கிறான். அவ்வாறே வீட்டில் கணவன் இருக்க தன் சுயநல வேட்கைகளுக்காகவும், சௌகரியங்களுக்காகவும் பிற ஆண்களோடு சோரம் போபவள் தன் உடலை விபச்சாரம் செய்கிறாள்'' - நான் மேலும் விளக்கினேன்.

''நீ சொல்வதைப் பார்த்தால் நாம் அனைவரும் ஒருவித விபச்சாரச் சூழலால் பீடிக்கப்பட்டிருப்பதுபோலல்லவா தெரிகிறது?''

''ஓம். இதற்குக்காரணம் நமது அரசே விபச்சாரம் தான் செய்து கொண்டிருக்கிறது. எப்படி பலர் எழுத்தாளர்கள் என்றும், புத்திஜீவிகள் என்றும், தொழிலாளர்கள் என்றும், குடும்பஸ்தன் என்றும், குடும்பப்பெண் என்றும் கூறிக்கொண்டு அதன் போர்வையில் விபச்சாரம் செய்கிறார்களோ அவ்வாறே நமது அரசும் ஜனநாயகம் என்ற போர்வையில் விபச்சாரம் தான் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலையில் ......'' என்று நான் இழுத்தேன்.

''இந்த நிலையில் என்ன?'' அவன் தூண்டினான்.

''இந்த நிலையில் அக்குலைச் சுற்றியும், ஆண்குறியைச் சுற்றியும் ஒழுக்க வேலிகள் கட்டியெழுப்புவது பத்தாம் பசலித்தனம்''' -நான்.

''அப்போ இதற்குப் பரிகாரம்?'' -அவன்

''விடுபட்ட பார்வைதான் இதற்குப் பரிகாரம். அதாவது துறவுக்குரிய விடுபட்ட பார்வையே எல்லாப் புரட்சிக்கும் தயாரான நிலை. இனிவரும் ஒழுக்கம் என்பது இந்தப்புரட்சி நிலைதான்!'' - நான் அழுத்தி விட்டு ''இப்புரட்சி மூலம் எல்லா விபச்சாரங்களையும் ஒழிக்கலாம்!'' என்று கூறிமுடித்தேன்.

## கைக்கு வர...

தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவது என்பதை வைத்துக்கொண்டுதான் தினசரிப்பத்திரிகைகள் சந்தோசமாக எழுதியுள்ளன தேவையான நடவடிக்கைக்கு அரசின் அர்த்தம் என்னவென்பதும், படைத்தலைமையின் அர்த்தம் என்னவென்பதும் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று என்பதே பலருடைய அபிப்பிராயம்.

தமிழர்கள் விடயத்தில் ஜனநாயகம், சிவில் நிர்வாகம், சுமுகவாழ்க்கை, சமாதானம் எனபவற்றுக்கெல்லாம் அரசும் படைகளும் கொண்டுள்ள அர்த்தம் போலவே ''தேவையான நடவடிக்கை'' அர்த்தமும் அமையுமா அன்றேல், நேர்மையான அர்த்தத்தில் அமையுமா என்ற உண்மை ஜூலை 1ம்திகதி சந்தைத் திறப்பு பற்றி நகரசபைத் தலைவர் திருகோணமலை பிரிகேடியருடன் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தையின் பின்னர் தான் தெரியவரும். கட்டுண்டோம். பொறுத்திருப்போம்.

# நேருவுக்கு ஜே.ஆர் கடிதம்...!

நேருவுக்கு ஜே.ஆர். கடிதம் எழுதினாராம்.

ஏன்? எப்போது? தெரியுமா...?

1940ஜூலை 20ல் ஜவஹர்லால் நேருவுக்கு முகவரியிட்டு, இலங்கைத் தேசிய காங்கிரசின் சார்பில் இந்திய தேசிய காங்கிரசிற்கு ஜே.ஆர். கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில் இந்தியாவுடன் இலங்கை சமஷ்டி அமைப்பு முறையில் இணைவதற்கான விருப்பம் தெரிவிக்கப்பட்டிருந்தது. ''சுதந்திர இந்தியாவுடன் சுதந்திர இலங்கை ஒரு சமஷ்டி ஆட்சி முறையோ அல்லது நெருக்கமான கூட்டாட்சி முறையோ அமைப்பது பற்றி உங்களுடன் நாங்கள் கலந்துரையாட விரும்புகிறோம்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

1940 ஓகஸ்ட் 7ல் நேரு அக்கடிதத்திற்கு பதில் கடிதம் எழுதினார்.

அதில்,

''சிறிய அரசுகளின் காலம் முடிந்து விட்டது. சமஷ்டி அமைப்பு முறையிலான பெரிய அரசுகளோ அன்றி இறுக்கமான பிணைப்புக்களைக் கொண்ட பெரிய சாம்ராச்சியங்களே தான் எதிர்காலத்தில் தப்பிப் பிழைக்க முடியும்.

எதிர்கால உலகில் தனித்து நிற்க முடியாத அளவிற்கு இலங்கை, அரசியற் பொருளாதார ரீதியில் ஒரு மிகச்சிறிய அரசே ஆகும். இத்தகைய சூழலில் மிகப்பெரும் ஆபத்து எதிர்காலத்தில் இலங்கைக்கு ஏற்படும் என்ற வகையில் உங்களின் கருத்தை நான் மிகவும் ஏற்றுக்கொள்கிறேன்.

நீங்கள் முன்மொழிந்த திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது.

உங்களுடைய திட்டம் சம்பந்தமாக நான் இன்று காங்கிரஸ் தலைவர் மௌலானா அப்துல் கலாம் அஸாத் உடன் உரையாடினேன். தான் தங்களுடைய கருத்தை மிகவும் வரவேற்பதாக உங்களுக்கு அறிவிக்குமாறு என்னிடம் கூறினார்.

அத்துடன் தானும் தனது சகாக்களுடன் இது சம்பந்தமாக இலங்கைத் தேசிய காங்கிரசின் தூதுக் குழுவை மிக மகிழ்ச்சியுடன் சந்தித்து உரையாட விரும்புவதாக தெரிவிக்குமாறு கூறினார்.''

இக்கருத்துக்கள் யாவும் அக்கடிதத்தில் பொதிந்திருந்தன. இலங்கையை இந்தியாவுடன் இணைப்பதற்கான விருப்பம் டி.எஸ்.சேனநாயக்க போன்ற தலைவர்களிடமும் இருந்ததாகவும் தெரிகிறது.

இந்தியாவின் பாதுகாப்புக் கருதி இந்தியாவின் ஓர் அங்கமாக இலங்கை இருக்க வேண்டுமென்ற கருத்து, அபிப்பிராயம் நேரு, வைத்தியா, கே.எம். பணிக்கர் போன்ற தலைவர்களிடமும் இராஜதந்திரிகள் மட்டத்திலும் கூட இருந்ததாகத் தெரிகிறது.

இன்று இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டு அழுத்தங்கள் காலத்துக்குக்காலம் நிலைமைகளுக்கு உகந்தவாறு இருந்து வருவதை நோக்கலாம்.

தமிழர்கள் 'தமிழீழம்', 'தனி அரசு' அமைப்பதை இந்தியா ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது. இந்தியாவின் பாதுகாப்புக் கருதி இனப்பிரச்சினைத்தீர்வு விவகாரத்தில், இந்தியா தனது பாதுகாப்பு நலன்களையும், அகன்ற பாரதத்தையும் உத்தரவாதம் செய்யும் விதத்திலேயே அக்கறைப்படும். தன்னை மீறிப்போகாத வண்ணம் இந்தியா பார்த்துக்கொள்ளும்.

தென்னாசியப் பிராந்தியச் சூழலில் இந்தியா தன்னை ஓர் வல்லரசாக நிலைநிறுத்துவதில் பெரும் பிரயத்தனங்களில் ஈடபட்டுள்ளதைக் காணலாம்.

இன்று அணுசக்திப் பிரயோகம் மூலம் தென்னாசியச் சூழலில் தனது பலத்தை நிரூபித்துக்காட்ட முற்பட்டுள்ளது. பதிலுக்கு பாகிஸ்தானும் தனது பங்குக்கு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இந்தியாவின் அணுசக்தி விவகாரத்தில் மௌனம் சாதித்தது, மேற்கு நாடுகள் துள்ளிக் குதிப்பது போல் அல்லாமல் தனது எதிர்காலம் பற்றிய அக்கறையின் நிமித்தம் நடந்து கொண்டது எனவும் கூற முடியும்.

இநதயாவின் நோக்கு நிலை இலங்கை அரசாங்கத்தின் மீது மட்டுமல்ல, தமிழர்களின் அரசியல் எதிர்காலத்திலும் கூட ஏதோ சில பரிமாணங்களில் இந்தியாவின் அழுத்தங்கள் நிலவத்தான் செய்யும்.

இதைப் புரிந்து தான் வரலாறு கடக்கப்பட வேண்டும்.

## பாவம் சிவகுமாரன்!

'சிவகுமாரன்' சிலையை வைப்பது யார்? என்ற சர்ச்சை இப்போது ஈ.பி.டி.பி., புளொட் இயக்கங்களிடையே பிரசுரப்போர் மட்டத்திற்கு வளர்ந்து விட்டிருக்கிறது.

அண்மையில், உரும்பிராய் பிரதேச சபைப் பகுதியில் தியாகி சிவகுமாரனின் சிலை ஒன்றைத் திறக்கும் நோக்குடன் புளொட் இயக்கத்தினர் எடுத்த முயற்சியை அந்தப் பிரதேச சபை தமது அதிகாரத்திலேயே உள்ளதால் தாமே செய்யவேண்டும் என்று முரண்டு பிடிக்கிறதாம். ஈ.பி.டி.பி. தமது சிலை திறக்கும் முயற்சியை, ஈ.பி.டி.பி. தடை செய்வதாக புளொட் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. ஈ.பி.டி.பியும் பதிலுக்கு ஒரு அறிக்கை வெளியிட்டுத் தள்ளிவிட்டிருக்கிறது.

'தலைவர் உமா மகேஸ்வரனையே குழிதோண்டிப் புதைத்தவர்கள் நீங்கள், என்று குற்றஞ்சாட்டும் பாணியில் எழுதப்பட்ட அந்தப் பிரசுரம், உமாபிரகாஸ், சந்ததியார், கரவை கந்தசாமி என்ற உங்களவர்களுக்கு சிலை திறப்பதற்குப் பதில் ஏன் சிவகுமாரனுக்கு சிலை திறக்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிராமியக் கவிகளும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும்

எஸ்.சந்திரசேகரம்

கிராமியப்பாடல்களின் விளைநிலமாக விளங்கும் கிழக்கிலங்கை யில் நிலவும் பல்வேறு கிராமியப் பாடல் வகைகளில் 'கவி' என்பது ஒரு பிரதான பாடல் வகையாக உள்ளது. தாலாட்டு, விளையாட்டுப் பாடல், தொழிற்பாடல், சமயப் பாடல், குழந்தைப்பாடல் எனப் பல்வேறு பாடல்களும் கிராமிய மக்களின் கவிகளேயாயினும், அவற்றிலே குறித்த பாடல் வகையி னையே கவியெனத் தனிப்படுத்திக் கிராமிய மக்கள் கூறுவர். இதற்குக் காரணம் கவியானது வடிவம், ஓசை என்பவற்றைப் பொறுத்து ஏனைய கிராமியப் பாடல் வகைகளில் இருந்து வேறுபட்டுக்காணப்படு வதேயாகும்.

கிராமிய மக்களின் தொழில் முறைகளுடன் இணைந்ததாக அவர்களி டத்தில் சமூகப் பண்பாட்டு அடிப்படையில் வழங்கி வந்த இக் கவிதை களைப் பொருள் நிலை அடியாக வைத்து நோக்கும்போது அவை அதிகபட்சம் காதல் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாகவேயுள்ளன. இவை காதலன், காதலி, தாய் செவிலி, தோழி போன்ற பாத்திரங் கள் தம்முள் உரையாடும்பாவனை யில் அமைந்தவை. அதாவது அவை மாறும் தரமாக அமைந்தவை யாகும். இதனை வாதுகவி என்றும் அழைப்பர். ஆனால் எல்லாம் காதல் உணர்வுக் கவிகளாகவே அமைவதில்லை. இவற்றை விடுத்து தொழில் முறை, இறையுணர்வு போன்ற ஏனைய சமூகவிடயங்க ளைக் காட்டும் கவிகளும்உள்ளன.

காதல்கவிகளிலே அன்பின் வெளிப்பாடு இன்ப, துன்ப உணர்வு கள், கேலிகிண்டல் எனப்பல பொருள் கூறுகள் வெளிப் படுகின்ற அதேவேளை, அவற்றினூடாக சமூகத்திலே பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கும், கொடுமைக ளுக்கும் உட்படுத்தப்பட்டமையை

1. கவிகளில் இடம்பெறும் சொற்கள் கூற்றுக்கள், நிகழ்வுகள் ஊடாக,
2. சமூகத்தில் தனக்கெதிராக இடம் பெறும் வாட்டுதலைப் பெண் வெளிப்படுத்துவதாக வருவதனூ டாக என்ற இரண்டு அடிப்படையில் நாம் கவிகளில் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

பெரும்பாலான காதல் கவிகள் ஆண், பெண் உறவு சம்பந்தமான ஆபாச விடயங்களையும், பாலியல் கருத்துக் களையும் அப்பட்டமாக கூறுபவையாக உள்ளன. பெரும் பாலும் பெண்களின் அந்தரங்க உறுப்புக்கள் வர்ணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையையும், அதனூ டாக பாலியல் கருத்துக்கள் வெளிப் படுவதையும் காணலாம். உள்ளதை உள்ளவாறு கூறும் இத்தன்மை நாட்டார் பாடல்களின் ஒரு முக்கிய பண்பேயாகும். கிராமிய மக்களது கள்ளங்கபடமற்ற உள்ளத்து உணர்வின் வெளிப்பாட்டையே அது உணர்த்துகின்றது. இருந்தும் அப் பாலியல் கருத்துக்களினூடே சமூகத்தில் பாலியல் வன்முறைக் கும் பாலியல் சேட்டைக்கும் உட்படுத்தப்பட்ட பெண்ணின் இருப்பு நிலையைக் கண்டு கொள்ள முடிகின்றது.

*'குத்துமுலக் காறியெண்டு*
*கொடுத்துவச்சேன் நாலுபணம்/*
*சாஞ்சமுலக் காறியெண்டா*
*தந்திடுகா என்பணத்த'*

இக்கவி ஒரு களவு ஒழுக்கத்தில் (வேசியுறவு) ஈடுபடும் ஆண் அப் பெண்ணிடம் கூறுவதுபோன்று பாவனை யில் வருகிறது. இங்கு பெண்ணின் அந்தரங்க பாலியல் உறுப்பான, மார்பகம் பழிப்புக்கு உட்படுத்தப்படுகின்றது. 'சாஞ்ச முலக் காறி, என்பதனூடாக அவள் தன் கன்னித் தன்மையை இழந்த வள். மற்றவர்களிடம் பறிகொடுத்த வள், கன்னியழகு கெட்டவள், 'கற்பு' இழந்தவள் என்பதையே அவன் உணர்த்திப் பழிப்பதாக உள்ளது. இக்கவிக்கு மாற்றுக் கவியாக வரும்..

*'நீயொரு வல்லக் காரனெண்டு*
*வாங்கிவச்சேன்*
*- உன்பணத்தை/*
*கோழித் தத்துவக்காரா*
*கொண்டுபோடா உன்பணத்த'*

எனும்கவியில் ஆண் பாலியல் ரீதியாகப் பழிக்கப்படுகின்றான். ஆனாலும், முதல்கவியில் இருந்த விரசம் இக்கவியில் இல்லையென்றே கூறலாம். இங்கு 'கோழித் தத்துவக்காரன்' என்பதனூடாக ஆண், மறைமுகமாகவே புணர்வில் ஆண்மை யற்றவன் எனப் பாலியல் பழிப்புக்கு உள்ளாகின்றான். இங்கு பாலியல் உறுப்புகளும் வெளிப்படையாக எடுத்துக் காட்டிப்பழிக்கப்படவில்லை.

ஆனால் அங்கு இதற்கு மாறாகவே உள்ளது. இவ்வாறு பெண்ணின் பாலியல் உறுப்புக்களை எடுத்துக்காட்டிப்பழிப்பது அவளுக்கெதி ரான பாலியல் சேட்டை யினதும், பாலியல் வன்முறையினதும் வெளிப்பாடாகும்.

கவிகளிலே பெண்களின் அங்க வர்ண னையை நோக்குகின்ற போது கூடுதலாக மார்பகமே வர்ணிக்கப் படுகின்றது.

★ *தேமல் முலையும் தேனினிக்கும்*
*செவ்வுதடும்/*
*வாழை உடலும் என்னை*
*வாட்டுதடி நித்திரையில்.*

★ *இஞ்சி மணங்கா புள்ள*
*இலுமிச்சம் வேர் மணங்கா/*
*மஞ்சள் மணங்காபுள்ள*
*பால்மணங்கா உன் சோடிமுல.*

★ *கொச்சில் பழத்தைக்*
*குறுக்காலை வெட்டினாற் போல/*
*பச்சவடச் சேலை உண்ட பால்*
*முலைக்கு ஏற்றதுதான்.*

★ *கண்டு வம்மில் பூநிறத்தாள்*
*கவரிபுள்ள மாங்குயிலாள்/*
*அரும்பு முகைப் பூ முலையாள்*
*மச்சி ஆசனத்தில் நித்திரையோ.*

எனும் கவிகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இதனைத்தவிர தொடை, யோனி ஆகிய பாலியல் உறுப்புக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வர்ணிப்புக்கு உள்ளா கின்றன. இவ்வாறான வர்ணிப்புக் களினூடாக சமூகத்தில் ஆண்வர்க்கத்தினர் தமது காம இச்சை உணர்வுகளுக்குத் தீனிபோட முயன்றுள்ளனர் என்பதையே உணர முடிகின்றது.

★ *'ஆடு துடையிலே அன்பான*
*மேனியிலே/ கட்டு*
*வருத்தமொன்று என்ர*
*கண்மணிக்குச் சொல்லிடுங்க.'*

★ *'அரிஞ்சரிஞ்சி நிலவெறிக்க*
*அவளிருந்து பாயிழைக்க/*
*துண்டுடுத்துத் துடைதெரிய*
*துடரமனம் தூண்டுதல்லா'*

★ *'இடுப்பு சிறுத்தபொட்ட இரு*
*துடையும் நொந்த பொட்ட/*
*கொக்கிச்சான் பொட்ட உனக்கு*
*கோபமென்ன என்னோட'*

இக்கவிகளில் 'தொடை' எனும் உறுப்பு காட்டப்பட்டுள்ளது.

*'வாழைக் குலையிருக்க வாள்*
*மயிலாள் நானிருக்க/சேனையிலே*
*நெய்யிருக்க நாம் சேர்வது*
*எக்காலம்'.*

காமப் பசியைத் தீர்க்கும் உணவுகள் இருந்தும்நாம்எப்போது சேர்வது என ஒரு பெண் ஏங்குவதான தன்மையில் வரும் இக்கவியிலும் பாலியல் வெளிப்பாட்டைக் காணலாம்.

*'ஒண்டுக்கும் இல்ல கண்டே*
*உன்னை விரும்புவது/*
*தங்கம் பதிச்ச தாள்விளக்கக்*
*காணவெண்டு'*

இக்கவியிலும் பாலியல் அங்கம் குறியீடாகக் காட்டப்படுவதையே காணலாம். இந்தக் கவிதையை வேறுவிதமாகவும் மாற்றிப் பாடுவர். அநேகமான கவிகளில் இந்த மறைமுக குறியீட்டுத்தன்மையைக் காணலாம்.

சில கவிகளில் விரசமான வார்த்தை களும் வெளிப்படையாகக் கூறப்படு கின்றன. உதாரணமாக,

*ஒப்பாரக் கள்ளி உனக்களித்த*
*காசிபணம்/தோப்பாரு வெட்டயில*
*ஒரு தோப்பு வேண்டிப்*
*போட்டுடுவன்'*

எனும் கவிதை புணர்தலில் ஒருவளிடம் திருப்திகாணாத ஒருவன் அவளுக்கு விரச வார்த்தை யால் பேசும் பாவனையாக அமைந்துள்ளது. இவ்வாறு விரசவார்த்தை யால் பெண்ணுக்குப் பேசுவதான தன்மை பெண்ணுக்கெதிரான பாலியல் வன்முறை யையே காட்டு கின்றது. அவ்வாறே ஆணைக்கண்டிப்பதாக வரும்.

*''மச்சானே பிச்சக்கண்ணா*
*மதிரோட பூத்த கண்ணா/*
*சுள்ளி புறக்கி வாடா உன் சூத்தில*
*குத்துறன்''*

எனும் கவிதையில் 'சூத்து' எனும் சொல் பெரிதாக விரசத்தைக் காட்டவில்லை - குறைவு எனலாம்.

இவற்றை நோக்கும் போது கூடுதலான விரசத்தன்மை கள்ள உறவில் ஈடுபடு பவர்கள் தம்முள் உரையாடும் பாவ னையில் வருவ தாகவே உள்ளது குறிப்பிடத்தக்கது.

அங்க வெளிப்பாடுகளைத் தவிர சிலகவிதைகளில் பாலியல் செயற்பாடுகள் காட்டப்படுவதனூடாகவும், பெண் சமூகத் தில் பாலியல் வன்முறைக்கு உட்படுத் தப்பட்டமையை நாம் கண்டுகொள்ளலாம்.

*''கல்லாத்து ஓடையிலேயே கறுவல்*
*என்னும் ஒருமுதள*
*மல்லாத்திப்போட்டு உண்ட*
*மணிக்குடலத் தின்னுதுகா'*

இங்கு மறைமுக பாலியல் உறவு அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. முதலை ஆணுக்கு உவமிக்கப்படுவதனூடாக ஆண் கொடூ ரமானவனாகக் காட்டப்படுகின்றான். இங்கே பலாத்காரம் பெண் மீது அழுத்தப்படுவது உணர்த்தப்பட்டுள்ளது. ஒரு முதலை பெண்ணைப்பிடித்து கொடூரப்படுத்தி, குடலைப் பிய்த்துச் சாப்பிடுவதுபோல ஆண் ஒரு பெண்ணுடன் உடல் உறவு கொள்வதாகச் சித்திரிக்கப்படுகின்றது. ஒரு முதலை எவ்வாறு கடித்துக் குதறி பயங்கரமாக உயிரை வாங்குமோ அதுபோல, ஒரு ஆண் உடலுறவில் ஒரு பெண்ணை மிகமோசமாக கொடுமைப்படுத்துவது விபரிக்கப்படுகின்றது. அன்றிலிருந்து இந்நிலை எமது சமுதாயத்தில் புரையோடி இருந்து வந்துள்ளமையை இக்கவி காட்டுகின்றது.

ஆண் முதன்மைச் சமூகத்தின் கருத்து நிலையின் அடிப்படையில் பெண்களைக் கற்பின்பேரால் வீட்டினுள்ளேயே அடக்கி வைத்திருக்கின்ற நிலையை இன்றுவரை நாம்காணலாம். இந்த அடக்கு முறையில் அங்கம் வகிப்பவர்களில் முக்கிய நபர் அவளது கணவனாகும். இவ்விதம் வீட்டைவிட்டு வெளிச் செல்லவிடாத ஆணாதிக்க நிலையின் வெளிப்பாட்டைக் கவிகளிலும்காணலாம்.

*கடப்பைக் கடந்து காலெடுத்து*
*வச்சயெண்டால்*
*இடுப்பை ஓடிச்சு வேலி*
*இலுப்பையின் கீழ்*
*போட்டுடுவேன்*

இங்கு பெண் வெளியில் செல்வதால் அவள் பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவாள் என்ற சந்தேக நிலைப் பாட்டைக்காணலாம். இன்னொரு புறம், பெண்தப்பான நடத்தைகளில் ஈடுபட்டாள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பலாத்காரம் பிரயோகிக்கப்படுகிறது எனலாம். இவ்வாறே,

*வாசல் கடந்து வழிகண்டு*
*போனியெண்டால் வேசை மகளே*
*உன்னை வெட்டிடுவேன் இரண்டு*
*துண்டாய்*

என்ற கவிதையிலும் பெண்மீது பாலியல் குற்றச்சாட்டுச் சுமத்தப்படுகிறது. அப்பட்டமாகவே 'வேசைமகளே' என்று அவள் அவமானப்படுத்தப்படுகிறாள்.

பெண்ணானவள் பெண்ணாக மதிக்கப் படாது மிருகத்தனமாக அடிமைப் படுத்தலின் உச்சத்தை இக்கவிகளின் இரண்டாம்அடிகள்காட்டுகின்றன எனவே பயமுறுத்தல், கண்டித்தல் என்பவற் றினூடாக பெண்மீது பலாத்காரம் பிரயோகிக்கப்படுவதை இங்கே காணலாம்.

சில கவிகளில், பெண்களிடம் ஆண்கள் வைக்கின்ற சில சேட்டைகளையும் காணலாம்.

*''மார்பளவு தண்ணியிலே மன்னி*
*மன்னிப் போற பொண்ணே*
*மார்பில் இருக்கும் மாதுளங்காய்*
*என்ன விலை?''*

இங்கு பெண்ணின் பாலியல் உறுப்பு ஒன்றைச் சுட்டிப் பகிடி பண்ணுவதாக வருகின்றது. பெண்கள்மீதான இவ்வாறான பகிடிகளும் அவர்கள் மீது திணிக்கப்படும் பாலியல் வன்முறையேயாகும். இத் தன்மை பழைய சமூகங்களிலும் இருந்தேயிருக்கின்றது. அதேவேளை இக்கவிகள் சிலவற்றில் இவ்வன் முறைகளுக்கு எதிரான பெண்ணின் குரலையும் நாம் காணலாம். உதாரணமாக மேலுள்ள கவிக்கு வாதுகவியாக வரும்.

*''மாதுளங் காயுமில்ல மருக்காலம்*
*பிஞ்சுமில்ல*
*பாலன் பசியாறும் பால்*
*முலையடா சண்டாளா?'*

இக்கவியிலே பெண்ணின் எதிர்ப்புக் குரலைக்காணலாம். மார்பகத்தைச்சுட்டிப் பகிடிபண்ணியதற்குச் ''சண்டாளன்'' என்ற கொடும் வார்த்தையால் பேசுவதாக வருகிறது. இங்கு ஒரு பெண்சினந்தெழுந்து எதிர்த்துக்குரல் கொடுக்கும் தன்மையைக் காணலாம்.

இவ்வாறே மேற்கூறிய, ''நீயொரு வல்லவக்காரனெண்டு....' என்ற கவியிலும் தன்னைப் பழித்த ஆணை எதிர்த்து அவனது பாலியல் பலவீனத்தைச் சுட்டிக் காட்டுவதனைக் காணலாம். எனவே, தனக்கெதிரான வன்முறையில் இருந்து குமுறி எழுகின்ற பெண்ணின் எதிர்ப்புக் குரல்களும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளமையும்காணமுடிகின்றது.

ஒரு சில கவிகளில் சமூகத்தில் பாலியல் வன்முறை, பாலியல் சேட்டை என்பவற்றிற்கு உள்ளான பெண்ணின் உள்ளக்கிளர்ச்சி நிலையையும்காணலாம். அதாவது, ஆண் வர்க்கத்தால் வன் முறைக்கு உட்பட்ட பெண்ணின் மனவெப்புசாரத்தை - குமுறலை ஒருசில கவிகளில்காணலாம். உதாரணமாக,

*போட்டா வரம்பாலே புறாமேஞ்சி*
*போறது போல்*
*நாட்டாருக்கெல்லாம்*
*நடைவரம்போ என்சடலம்.*

என்ற கவியில் இவ்வெப்புசார வெளிப்பாடு தெரிகிறது. இங்கு சமூகத்தில் பெண்ணின் சமூகஸ்தானத்தையும், இருப்பையும்கண்டுகொள்ளலாம்.

வயலில்பெரிய வரவையின்வரம்புகளால் புறாக்கள் கொத்திக் கிளறி, மேய்ந்து திரிவதுபோல் கிராமத்தவர் எல்லோரும் தன்னை நடைவரம்பாகப் பயன்படுத் துவதை எண்ணி ஏங்குவதாக உள்ளது. நடை வரம்பு என்பது வயலினூடாகச் செல்பவர்களும் வருகின்றவர்களும் நடந்து செல்கின்ற வரம்பாகும். அவ்வாறான வரம்பைப் போல் தனது உடலையும் பாலியல் வல்லுறவுக்கு கிராமத்தவர்கள் பயன்படுத்தும் கொடுமையை, பலாத்காரத்தை எண்ணி மனம் வெதும்பல் அடைவதாக உள்ளது. அத்தோடு 'சடலம்' என்பது உயிரற்ற உடலாகும். எனவே பெண்ணை ஒரு சடமாகக்கொண்டு அவளது உணர்வுகளை மதிக்காது நடத்தும் வர்க்கத்தின் அகோரங்களை எண்ணி உள்ளே பெண் குமுறுவதாக உள்ளது. அவ்வாறே,

*வண்ணாரக் கல்லோ வடக்கத்தி*
*காளைமாடோ,*
*சாராயக் குத்தகையோ, மச்சான்*
*தவறணையோ என் ஊடு*

என்ற கவியிலே வண்ணாரக்கல்லில் எந்த வண்ணானும் உடை கழுவலாம். வடக் கத்திக் காளையை எவனும் வண்டியில் கட்டலாம். சாராயத்தவறணையில் யாரும் போய்ச் சாராயம் குடிக்கலாம். சாராயக் குத்தகை காலத்துக்குக் காலம் ஆள்மாறும். இவ்வாறான பொதுப்பொருட்களைப் போல் நானும் பாலியல் உறவில் ஒரு பொதுப் பொருளோ என்று வெப்பு சாரப்படுவதைக் காணலாம்.

கவிகளில் ஆண்களைப் பழிக்கின்ற கவிகளும் பல இடம்பெறுவதனையும் காணலாம். பெரும்பாலும் அவை மாப்பிள்ளையைப் பற்றிப் பெண்ணிடம் தோழி கூறும் பாவனைப்பாடலாகவே அமைகின்றன. ஆனால், அவற்றிலே பாலியல் உறுப்புக்களன்றி ஆணின் பல், வாய், தலை, நிறம் எனப்பல உறுப்புக்களை எடுத்துக்காட்டி அவனது உடல் அழகைப் பழிக்கும்தன்மையே காட்டப்பட்டுள்ளன.

எனவே, பண்டைக்காலத்தில் எமது சமூகம் பெண்ணுக்கு அளித்த இடம் எத்தகையது என்பதனை நாம் நாட்டார்கவிகளினூடாக உணர்ந்து கொள்ள முடிகின்றது.


> ''பாலியல் ஒழுக்க நெறியில் பிறழாது நின்ற பெண்டிரைக் குறித்து மட்டுமே செவ்வியல் இலக்கியங்கள் புகழ்ந்து பேசுகின்றன.... ஆனால், நாட்டார் வழக்காறுகளில் தான் இத்தகைய பாலியல்வன்முறை குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன''

என ஆ. சிவசுப்பிரமணியம் அவர்கள் ('நிவேதினி' சஞ்சிகை) கூறுவதை இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமானதாகும். ஆகவே, காதல்கவிகள் பலவற்றில் பால் உணர்வுகள் சுயாதீனமாக வெளிப் படுவதையும், அவற்றினூடாக பெண்க ளுக்கெதிரான பாலியல் வன்முறை வெளிக்காட்டப்படுவதையும்காணலாம். இதனூடாக எமது பண்டைய சமுதாயத்திலும் பெண்கள் இரண்டாவது பாலினராக மதிக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வீடு

**- ஓட்டமாவடி அறபாத் -**

பனிப்புகார் அடர்ந்த ஓடைக்கரை, நுரைதள்ளி கரை தடவும் உவரலைகள். நீண்ட இடைவெளிக்குப்பின் ஓடைக்கரையில் நான். அக்கரையில் சாலமனின் குடிசை. வாசலில் விளக்கின்குமுறல் தெரிந்தது. அதன் பக்கத்திலமர்ந்து சுருட்டு பற்றவைத்துக் கொண்டிருந்தான் சாலமன். சாலமனைப் பற்றிய நெஞ்சின் வலிகள் தவிர்க்க முடியாதவை. அத்துயர நிகழ்வுக்குப்பின் இப்போது தான் அவனை, அதுவும், தூரத்தில் பார்க்கிறேன். அவனின் இழப்பு - இத்துணை சீக்கிரமாகவா. கிழடுபோர்த்தி விட்டது.

ஆற்றில் தோணிகள் ஆடின. கரைவலைக் காரர்கள் 'திட்டி'களில் இடமபிடித்து வலைவீசத் தொடங்கி விட்டனர். சாலமனில் சிக்கிக்கொண்ட, பால்யநினைவுகள், மனசுக்குள் வலியைத் தூவின.

கோழி கூவி ஓய்ந்திருந்த ஒரு வைகறையிற் தான் அவனின் தரிசனம் எனக்கு வாய்த்தது. விடியலின் பூரிப்பில் சொக்கிச் சொக்கி வைகறைத் தொழுகைக்குச் செல்கிறேன். ''காக்கா, இஞ்ச லூத்துப் பரிகாரியின்ற வீடெது', இருள் முற்றிலும் விலகாத பனித் திரைவிழுந்த நிலத்தில் காலூன்றி நின்றான். கழுத்தில் தொங்கிய குரூஸ் மாலை மயிரடர்ந்த நெஞ்சின்மேல் அந்தரித்தது. வாரிவிடப்படாத கேசம், கோதி விடும் விரல்களில்தான் என்ன திமிர்வு. தெருவிளக்கின் மங்கலில் சாலமனின் முரட்டுத்தோற்றத்தை இப்படித்தான் உள் வாங்கிக் கொண்டேன்.

''அப்படியே போங்க, இடதுபக்கத்துல ஒரு கிறவல் ஒழுங்க வரும், எங்கயும் திரும்பாம நேராப் போங்க, ஒரு குடில் எதிர்படும். முன்னுக்கு தோணி கவிழ்த்திருப்பாங்க, அதுதான் வீடு'', 'ரொம்ப நன்றிங்க'.

''ஆரோக்கியம் வாம்மா, தெருவிளக்கின் ஒளிபடாத இருளுக்குள்ளிலிருந்து அவள் எழுந்து வந்தாள். குத்துமதிப்பாக இருபத் தைந்து இருக்கலாம். பொது நிறம், கடைந்தெடுத்த புராதன காலத்து சிலைத் திரட்சி. எனது மூத்தவளின் சம வயதிருக்கும். அந்த ஆரோக்கியம் அவனைத் தொடர்ந்து இடப்பக்க ஒழுங்கையில் மறைந்து போனாள்.

லூத்துப்பரிகாரி எனது வாப்பாவுக்குப் பரிச்சயமானவர். ஏகரசனையுள்ள மித்திர பந்தம் அவர்களுடையது. லூத்துப் பெரியவரிடம் சின்னவயதிலிருந்தே - எனக்கும் ஒட்டுதல் இருந்தது. பரிசுத்த வேதாகமத்திலிருந்து உபகாதைகள் சொல்லிக்களிப்பூட்டுவார் அக்காலத்தில். அவர் அடிக்கடி சொல்லும் சுவிஷேஷங்கள் எனக்குத் அத்துப்படி. லூத்துப் பெரியவரை தூரத்தில் காண நேரின். நண்பர்களுக்கு அவரைச்சுட்டி அவரின் இராகத்தில் சுவிஷேஷங்களை ஒப்புவிப்பதில் நான் கில்லாடி.

முகாந்திரமில்லாமல், எனக்காகத் தங்கள் வலையைக் குழியில் ஒளித்து வைத்தார்கள். முகாந்திரமில்லாமல் என் ஆத்மாவுக்கு படுகுழி வெட்டினார்கள்; ''நான் அவனை என் சிநேகிதனாகவும், சகோதரனாகவும் பாவித்து நடந்து கொண்டேன். தாய்க்காகத் துக்கிக்கிறவனைப் போல், துக்கவஸ்திரம் தரித்துத் தலைகவிழ்ந்து நடந்தேன். ஆனாலும், எனக்கு ஆபத்துண்டானபோது அவர்கள் சந்தோஷப்பட்டுக் கூத்தாடினார்கள். நீசரும் நான் அறியாதவர்களும் எனக்கு விரோதமாய்க் கூட்டங் கூடி ஓயாமல் என்னை நிந்தித்தார்கள்.''

லூத்துப் பெரியவர் இதை ஏன் என் வாப்பாவிடம் சொல்லிச் சொல்லி விசும்பினார் என்ற பூர்வீகத்தை தெரிந்து கொண்டபோது மனம் சிலிர்த்தது. அந்த சுவிஷேஷத்தின் உள்ளார்த்தமும், அவ்வசனங்களுக்கும் அவருக்குமிடையேயான மானசீகத் தொடர்பும் பிரமிக்கச் செய்தன. அவரின் அரசியல் கருத்துக்களையும், மாற்று யோசனைகளையும் மிதவாதச் சிந்தனைகளையும் சகித்துக்கொள்ளாத தேசம், அவரின் வாசலுக்கு மரணத்தை அனுப்பி எச்சரித்தது.

''இந்தா பரிகாரி, நம்மலப்பத்தி நீர் ஒன்டும் கருத்துச் சொல்ல வேணா. மீறினா தெரியுந் தானே'' அவரின் மனம் பேதலித்துவிட்டதாம். அந்த விரக்தியில், சமயநிறுவனமொன்றில் தன்னை பிணைத்துக்கொண்டு, ஆனந்தம் அடைநததாக வாப்பா கூறினார்.

சாலமனை ஒரு மாலைப் பொழுதில் எனக்கு அறிமுகப்படுத்தினார். அவன் பரிச்சயமான புன்முறுவலுடன் என் கரங்களைப்பற்றிக்குலுக்கினான். பிற்காலங்களில் அவனுக்கும் எனக்குமிடையே ஏற்பட்ட சிந்தாந்த நேர்மை, இருவரையும் ஆழமாக பிணைத்து விட்டிருந்தது. வந்த புதிதில், ஓடைக்கரையின் மீன்பிடி நுணுக்கங்களையும் ஆற்றின் இயல்பையும், கற்றுக்கொடுப்பதற்கென அவனுடன் சஞ்சரித்தேன். அவனின் மனக் கிடக்கைகள் ஆழமானவை. அவனுக்குள் புழுங்கும் விடுதலை வேட்கையின் வியாபகம், உள்ளுக்குள் உருகி வழியும் இன்னொரு சாலமன் - என சகல பரிமாணங்களையும் எனக்கு விரித்துக் காட்டினான். அவனிடம் ஒரு விசித்திரக் குணமிருந்தது. யாராவது வலிந்து பேசினாலொழிய தானாகச் சென்று உறவை வளர்த்துக்கொள்ளாத சங்கோஜப் பேர்வழி. நெடுநேரமாக ஆற்றில் மிதக்கும் தோணிக்குள் கிடப்பான். அதற்கு இன்னொரு காரணமும் இருந்ததை பின்பு அறிந்து அவன் மேல் பரிதாபப்பட்டேன்.

''நான் கஷ்டப்பட்டு உழைத்த இத ஏன் பிறத்தியானுக்கு இனாமாக கொடுக்க வேண்டும். விரும்பிக்கொடுப்பது வேறு. இது ஆணவம், அதட்டிப்பெறுவது அதர்மம், அதர்மத்திற்கு என் தலைசாயாது''. சாலமன் ஆவேஷம் கொண்டவனாய் ஒரு மாலைப் பொழுதில் என்னிடம் இரைந்து கொண்டிருந்தான். லூத்துப் பெரியவரைப்போல் பைபிளில் இவனுக்கும் தேர்ச்சி இருந்தது.

''அவர்கள் சமாதானமாய் பேசாமல், தேசத்திலே அமைதலாயிருக்கிறவர்களுக்கு விரோதமாய் வஞ்சகமான காரியங்களைக் கருதுகிறார்கள்''.

சாலமன். நீ அவர்களுடன் விரோதிக்க வேண்டாம். அவர்கள் வன் நெஞ்சகர்கள். தினமும் அவர்கள் கேட்கும் மீனை அவர்களின் கூடையில் போட்டு, சமாதானமாகிப்போ'' என்றேன். ''ம் கூம் முடியாது'', ''பெருமைக் காரரின் கால் என் மேல் வராமலும், துன்மார்க்கருடைய கை என்னைப் பறக்கடியாமலும், இருப்பதாக'' என்ற யேசுவின் வசனத்தை அழுத்திக் கூறி மறுதலித்தான்.

அவன் அவர்களுடன் இணங்கி நடக்காதது குறித்து, மிகுந்த விசனத்துடன் அவர்களிருந்தனர். சாலமன் அவர்களின் எதிரியாகத் தீர்மானிக்கப்பட்டான்.

ஒரு மாரிகாலம். அந்திமழை வலுக்கத் தொடங்கியிருந்தது. நான் லூத்துப்பரிகாரியின் குடிசைக்குள் ஆற்றில் நீர்மட்டம் கூடிற்று. காட்டு வெள்ளம் சங்கமிக்க ஆறு நுங்கிப்பிரவகித்துப் பெருக்கெடுத்தது. சிறு திடல்கள் மூழ்கிப்போயின. கிறவல்வீதிகளை கழுவிக்கொண்டுவரும் ஜலப்பிரளயமும், ஆற்றுடன் கலந்தோடியது. பேய் மழையில் நனைந்தபடி, சாலமன் குடிசைக்குள் நுழைந்தான். கூடவே மகளும்.

''ஏனடா இப்பிடி மழையில நனைகிறாய். இவளையும் கூட்டிக்கொண்டு'' பெரியவரின் கேள்விக்கு பதிலேதும் கூறாமல், போர்த்தி வந்த சாக்கை உதறி பரணிற் போட்டான்.

''எனக்கு அங்கிருந்த பயமா இரிக்கிறது. வெள்ளத்துக்கு அல்ல, இன்று மாலை நான் ஆற்றில், வீட்டுக்கு வந்து, தேடுவதுபோல் சகல பொருட்களையும் இழுத்தெறிந்து விட்டு, இவளையும் இழுத்திருக்கிறார்கள். கூச்சலிட ஒடிவிட்டார்கள், என்னை எது வேண்டுமானாலும் செய்யட்டும். இவளுக்கு ஏதாவது என்றால் நான் தாளமாட்டேன்.'' அவனின் விசும்பல் மழையின் இரைச்சலையும் மீறி, குடிசைக்குள் நிறைந்தது. இவள ஒருத்தன்ட கையில புடிச்சு ஒப்படைக்கனும், ஜோஸப்புர பொடியனில எனக்கு நல்ல விருப்பம், நீங்க ஒருக்கா பேசிப்பாருங்களேன்'' என்றான். அவ்வளவுதான். மழை ஓய்ந்து தூவானம் விசிறிக்கொண்டிருந்தது. பெரியவர் போட்டுவந்த ஆவி பறக்கும் கோப்பியை உதட்டில் வைத்து அழுத்திக் கொண்டே முற்ற வெளியை வெறித்திருந்தான்.

எதிர்த்திசையில் அவர்கள் மழைக் கோட்டுக்குள் உடலைத் திணித்துக்கொண்டு, உலாச் செல்கின்றனர். ''கொதிக்கும் சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதை நம்முடையது. அங்கே போனால் அவர்கள், இங்கே மாமூல் வாழ்க்கையில் இவர்களின் தொல்லை. மிகுந்த சோம்பேறித்தனமாய் நடைபோடும் அவர்களை வெறித்துக்கொண்டே பரிகாசமாய் கூவினான்.

''கட்டுவிரியன் முட்டைகளை அடைகாத்து, சிலந்தியின் நெசவுகளை நெய்கிறார்கள். அவைகளின் முட்டைகளை சாப்பிடுகின்றவன் சாவான், அவைகள் நெருக்குப்பட்டதேயானால் விரியன் புறப்படும்''.

கர்விக்குணம் எங்கிருந்து வந்தது. பிறப்பிலா பிறந்து வளர்ந்த சூழலிலா, வந்த வழி நமக்கெதற்கு, கர்வித்தனம், அதர்மம் அதிகாரத்திமிர் இவற்றுக்கெல்லாம் கூனிக் குறுகாத நெஞ்சுத்திரம் உள்ளமட்டும், யாருக்கு அஞ்ச வேண்டும். அவர்களுடன் ஒத்துழைப்பது பற்றி தர்க்கிக்க நேரும் தருணமெல்லாம், சாலமன் இப்படித்தான் வெட்டிப் பேசி மடக்கி வந்தான். ''காசு தந்து வாங்கட்டுமே, நாங்கள் சென்றி அமைத்துக் கொடுக்க வேண்டும். பதுங்கு குழி வெட்டிக் கொடுக்க வேண்டும். அதற்குள் பாதுகாப்பாக இருந்து கொண்டு நிராயுதபாணிகளாக மக்களைத் தாக்க வேண்டும். எந்த ஊரு நியாயம் என்பான்.

2

காலநதி நீண்டு பிரவாகித்து தன்பாட்டில் ஓடிக்கொண்டிருந்தது. அதன் மேல் காய்ந்துலர்ந்த சருகுகளும், குருத்தோலைகளும், இன்னும் சில பசுந்தளிர்களும் மிதந்து சென்றன.

நதியின் வேகத்துக்கு ஈடுகொடுத்து, மனிதரும் ஓடிக்கொண்டிருந்தனர். கரைகளை உடைத்துக் கொண்டு நதி தன்பாட்டில் விரைந்தது. கால நதியின் ஆங்காரச் சுழியில் லூத்துப்பரிகாரியும் அகப்பட்டு, மாண்டு போனார். சாலமனின் துயரங்கள் பெருத்தன. லூத்துப் பெரியவரின் மரணத்திற்குப்பின் சாலமனின் போக்கே விசித்திரமாயிற்று. புதிதாக குடிக்கத் தொடங்கினான். ஆரோக்கியத்தை மணம் புரிய ஜோஸப்பின் மகன் இணங்கவில்லை.

சாலமன் இல்லாத மையிருட் பொழுதில் அவன் குடிசைக்குள் அவர்கள் புகுந்து - மறுபடியும் பொருட்களை உதறி, கூச்சலிட்ட ஆரோக்கியத்தின் கன்னத்தையும் பிளந்து விட்டுப் போயிருந்தனர்.

ஒரு மாரி கழிந்து அதன் சுவடுகள் தேயுந்தருணம் அடுத்த மாரியும் வலுக்கத் தொடங்கிற்று. ஓடைக்கரையில் காலையில் ஒதுங்குவதும், கல்லின் மேல் குந்தி, தோணியாடும் பாட்டைக் கேட்டு வீட்டுக்குத் திரும்புவதுமாய் என பழுத்தோ[illegible] பருவம். சாலமனுடன் பேசுவதையும் தவிர்த்திருக்கப் பழகிவிட்டேன். அவனுடனான நெருக்கம் என்னையும் ஒரு தினுசாக பார்க்க வைத்தது. ஓடைக்கரையில் நின்று ஆற்றின் நடுவே அசைந்த படி, நிற்கும் அளவில் நானொரு பொருட்டுமில்லை தான். எனினும், ஆரோக்கியம் பெட்டையை நினைக்கையில் மனசு வலித்தது.

மார்கழி மாதத்துப்பனி, தேகத்துக்கு செமிக்கவில்லை. மார்புச்சளிகட்டி, சுவாசிப்பதற்கும் அவஸ்தைப்பட வேண்டியதாயிற்று. நெஞ்சின் உதறல். காலைப்பொழுதில் ஆற்றங்கரைக்குப் போக வேண்டாமென்ற பிள்ளைகளின் நச்சரிப்பு வாலாயப்படுத்திய பழக்கங்கள் திடீரென தடைப்பட்டதில் மனசு அந்தரப்பட்டது. அது ஒரு அற்புத உலகம். மீனவர் பாடும் பாடலில் சொக்குவதும், நாமும், உச்சஸ்தாயில் கூச்சலிடுவதும் அலாதியான அனுபவம்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமக்குரிய தோணிகள் ஒதுங்குமட்டும் காத்திருந்து, மீன் நிறுத்து, வியாபாரிகளுக்கு கொடுத்து, கணக்கை ஒப்பிப்பதில் மகன் சூரனாகிவிட்டான். குடும்பவண்டியை இழுத் துச் செல்ல மகன் தலைப்பட்டு விட்டான். ஒருபத்து வயது கூடிவிட்ட ஆயாசம்.

நல்ல வெய்யிற் காலம். ஏரிகள் வற்றிவிடுமோ என அஞ்சுகின்ற கர்ணவெய்யில், ஏதோ ஞாபகத்தில் அன்று காலையில் கரையிலிருந்து திரும்பிய மகனிடம் சாலமன் பற்றி விசாரிக்கத் தோன்றியது. அவன் குணத்தில், பிடிதளராமல் நேற்றும் அவர்களுடன் முரண்பட்டு வாதிட்டிருக்கிறான். ஆளையும் அடித்துப் போட்டு, மீன்களையும் அபகரித்துப் போய் விட்டார்கள். இதை நான் கேட்டிருக்கக் கூடாது தான். சாய்வு நாற்காலிக்கு என் துயரங்களைத் தாங்கும் திராணி மரத்துப் போயிற்று.

"நான்
கஷ்டப்பட்டு
உழைத்தது
ஏன்
பிறத்தியானுக்கு
இனாமாக
கொடுக்க வேணும்
விரும்பிக் கொடுப்பது வேறு.
இது ஆணவம்,
அதட்டிப் பெறுவது அதர்மம்
அதர்மத்திற்கு
என் தலை சாயாது"


அச்சம்பவம் நிகழ்ந்து இரு தினங்கள் காலையில் வாசற்படியில் நின்று பல்தேய்த்துக் கொண்டிருந்தேன். என்று மில்லாதவாறு வீதிகொள்ளாச் சனங்கள். பரபரப்பாக ஆற்றங்கரை நோக்கித்தான் ஓடுகிறார்கள். வியர்க்க வியர்க்க மகன் ஓடிவந்தான். அவன் கூறியது பொய்யாக இருக்க வேண்டும் அல்லாவே, உள்மனம் கடவுளிடம் ஐக்கியமாயிற்று.

நான் தோணியிலேறி அக்கரைக்கு துடுப்பு வலித்தேன். மகன் பிடுங்கிக்கொண்டு, நீரைக் கிழித்தோடினான். அக்கரையில் சாலமன் பித்துப்பிடித்தவனாய், பதறித் திரிந்தான். என்னைக் கண்டதும் விசர் பிடித்தவனைப் போல் பாய்ந்து வந்தான்.

''அந்த வெறி நாய்கள் என்னை அடித்துப் போட்டிருக்கலாம். இவளை இப்படிச் செய்து விட்டார்களே விஷர். பிடித்த மிருகங்கள்'' அழுதழுது குரல்தடித்திருந்தது. என்னை ஒரு பற்றைக்குள் இழுத்துப் போய் விட்டான். நான் ஆரோக்கியத்தைப் பார்க்கவில்லை. மனசு வெடிக்கும் போல் இருந்தது.

சாலமனின் பிதற்றலிடையே லூத்துப் பெரியவர் ஞாபகிக்கும் சுவிஷேஷம் என் நினைவின் நுனியில்.. ''உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது. அதிலிருக்கிற நியாயாதிபதிகளின் முகத்தை மூடிப்போடு கிறார். அவர் இதைச் செய்கிற தில்லை யென்றால், பின்னர் யார் இதைச் செய்கிறார்'' நான். நெஞ்சைப் பொத்திக்கொண்டு தோணியில் ஏறினேன். சகலதையும் மீறி ஆரோக்கியம் விழிகளுக்குள் நிறைந்து நின்றாள்.

சுரீரென்ற வெய்யிலின் அகோரம் - இதோ மீண்டும் சாலமனை உற்றுப்பார்க்கின்றேன். அவன் அவ்விடத்திலேயே உறைந்திருந்தான். விளக்கு மட்டும் அணைந்து போயிருந்தது.




## வனத்தைத் தேடி..

மகிழ்ச்சி பூமியை ஒரு வனமாக மூடியிருந்த காலமொன்றிருந்தது
வனம் பூமியை மகிழ்ச்சியாக மூடியிருந்த காலமும் அதுதான்
ஆறுகளின் வாளிப்பான மேனியில் வனங்கள் கிறங்கிக் கவிந்த ஒளி புகாத காலங்கள் அவை
துயரம் நிரம்பிய இதயத்தில்
சொற்கள் சிதறுண்டிருந்த நேரத்தில்
உருப் பெறாத கவிதைகளுடன் கானகம் புகுந்தனர் கவிஞர்
அற்புதமான கவிதைகளுடன் திரும்பி வந்தனர்
நீங்களோ நானோ கண்டிராத அக் காலத்தைத் தேடிப் பயணப் பட்டேன்
வேரடி மண்ணைப் பிரிய மனமில்லாத பட்ட மரங்களில்
பறவைகள் ஓலமிடுகையில்
பொட்டல் வெளிகளில்
வனமிருந்த பள்ளத்தில் துளிர் விடப் புல்லும் இல்லை
புழுதியுரிந்து சிவப்பெனப் புயல் எழுகிறது
காடுகளைத் தூர்த்த காலத்தின் காற்றில் அள்ளுப்பட சருகுகளும் இல்லை.
அடவியின் இதய நீளத்தில் அரண் செல்கிறது
துன்பம் நிறைந்த கவிதையின் சொற்களைத் தேடி
உலகத்தின் மிக அற்புதமான கவிஞன்
ஆத்மாவின் உள் எங்கும் பயணம் செய்வதைப் போலே
இலைகள் அடர்ந்த அடவியைத் தேடி பயணம் செய்தேன்
வனங்களைத் தின்ன பழக்கப்பட்ட அதிகாரம்
அரண்களின் மீது கண்தூங்கிக் காவல் புரிகிறது
என்றுமே இல்லாதவாறு எஞ்சிய மரங்களின் கீழே
முகங்கள் கோணிய மனிதர்கள்
வியர்வையை வழித்து எறிந்து புறுபுறுக்கிறார்கள்
இன்னும் ஏதோ ஒன்று எஞ்சியிருப்பதாக நீண்ட தொலைவுக்குப் பார்க்கிறார்கள்
நீங்களோ நானோ கண்டிராத அந்தக் காலத்தை நோக்கிய பயணத்தில்
தனித்து எஞ்சிய மரங்கள் எனக்கு எதையுமே சொல்லவில்லை

தேவ அபிரா
19980622

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புத்திசாலித்தனம் ± கோமாளித்தனம் = பட்டிமன்ற நடுவர்கள்

அ. ராமசாமி

*தமிழ் நாட்டிலிருந்து பட்டிமன்றங்கள் இறக்குமதி செய்யப்படுவது சமீப காலமாக அதிகரித்து வருகிறது. சன் டி.வி, ராஜ் டி.வி ஆகியவை தொடக்கம் லியோனி, சாலமன் பாப்பையா போன்றோரின் இலங்கை விஜயம் உட்பட கொழும்பில் கம்பன் கழகத்தின் பட்டிமன்ற விவாதங்கள், சுழற்சி விவாதங்கள் என அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. சரிநிகரிலும் இது குறித்த கட்டுரை ஏலவே பிரசுரமாகியுள்ளது. அதன் தொடர்ச்சியாக காலச்சுவடு சஞ்சிகையில் வெளியான இக்கட்டுரை இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.*

பண்டிகை நாட்களுக்குச் சிறப்பு ஒளிபரப்பைத் தொலைக்காட்சி நிலையம் தொடங்கிய பிறகு, பண்டிகை நாட்களின் சடங்குகளுள் ஒன்றாகப் பட்டிமன்றம் ஆகிவிட்டது. தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கும் சுலபமாகத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளுள் பட்டிமன்றமும் ஒன்று. விடுமுறையாகவும் இருந்து. விழாநாளாகவும் ஆகிவிட்டால் 'பட்டிமன்றம்' ஒன்று நம்வீட்டிற்குள் வந்து விடுகின்றது. விழாநாட்களில் தொலைக்காட்சியைத் தொடுவதில்லையென விரதம் பூண்டிருப்பவர்களுக்கு மட்டுமே பட்டிமன்றம் ஏன்றால் என்ன, பட்டிமன்ற நடுவர்களென பிரசித்தி பெற்றுள்ள பாப்பையா, திண்டுக்கல் லியோனி என்பவர்கள் யார் என்று சொல்லவேண்டும். 'பட்டிமன்றம் பாப்பையா' எனப் பெயர் வாங்கிய பேரா. சாலமன் பாப்பையாவை விடவும் லியோனியின் குரல் இன்று தமிழகக்கிராமங்கள் எங்கும் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குப் பயணிக்கும் ஒரு தமிழ் உயிரி, தேநீர் குடிக்க நிறுத்துமிடங்களில் அந்தக் குரலைக் கேட்காமல் தப்பிக்க முடியாது.... அவை வெறும் குரல்கள் மட்டும்தானா?

நல்லது x கெட்டது; இன்பம் x துன்பம்; சரி x தவறு; உண்டு x இல்லை; சிறியது x பெரியது போன்ற எதிர்வுகளை முன்மொழிதல் மூலம் கட்டியெழுப்பப்படும் அமைப்பைக் கொண்டதாகப் பட்டிமன்ற வடிவம் இன்றுள்ளது. 'நடுவர் - இரண்டு அணிகள்' என்பது அதன் பொதுவான வடிவம். இதனையொத்த இன்னாரு வடிவமும் உண்டு. பட்டிமன்றத்தின் மாற்று வடிவம் என அதனைச் சொல்லலாம். வழக்காடு மன்றம் என அழைக்கப்படும் அதில் வழக்குத் தொடுப்பவர், வழக்கை மறுப்பவர், தீர்ப்புச் சொல்லுபவர் என்று மூன்று நபர்கள் மட்டுமே பங்கேற்க முடியும். ஆனால் பட்டிமன்றத்தில் பொதுவாக ஏழு பேர் பங்கேற்கின்றனர். மூன்று மூன்று பேராக இரண்டு அணிகள்; தீர்ப்புச் சொல்ல ஒரு நடுவர். ஒரு நடுவர், மூன்று அணிகள் என்ற வடிவமும், கீழ்மன்றவாதம் - தீர்ப்பு; அதன்பிறகு மேல்முறையீட்டு மன்றவாதங்கள் இறுதித்தீர்ப்பு என்பதான வடிவமும் கூட சில இடங்களில் காணப்படுகின்றது. பொதுவான பட்டிமன்ற வடிவமாக இரண்டு அணிகள், ஒரு நடுவர் என்பதைக் கொள்ளலாம். .

மணிமேகலை சொல்லும் 'பாங்கறிந்து ஏறும் பட்டிமண்டபத்தை' இன்றைய பட்டிமன்றத்தின் முன்னோடி வடிவமாகக் கருதலாம் என்றாலும், அதன் தொடர்ச்சியை உறுதி செய்வதில் சிரமங்கள் உண்டு. இன்றைய பட்டிமன்றங்கள் பெரும்பாலும், ஐரோப்பியர்களின் ஆளுகையில் உண்டான நீதிமன்ற வடிவத்தையே நமக்கு நினைவூட்டுகின்றன. 'நடுவர் அவர்களே! கனம் நீதிபதி அவர்களே! எதிரணி வழக்கறிஞர் அவர்கள், வாதம், சான்றுகள், மடக்குதல், பாய்ண்ட் (Point) விளக்கம், போன்ற சொல்லாடல்கள் பட்டிமன்றங்களில் திரும்பத் திரும்ப வரும் நிலையில் நடப்பது நீதிமன்ற விசாரணை போன்றது என்பதைப்பார்வையாளர்கள் நம்புகிறார்கள்; நம்ப வேண்டும் என வற்புறுத்தப்படுகிறார்கள்.

ஐரோப்பியபாணி நீதிமன்ற விசாரணைகளில் உண்மை அல்லது நியாயம் அல்லது தர்மம் வெல்லும் என்ற எதிர்பார்ப்புக்கு இடமில்லை. வாதம் தான் வெல்லும். வழக்குரைஞரின் வாதத்திறமையின் சாட்சிகளிடமிருந்து பெறப்படும் ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமே நீதிபதி தனது தீர்ப்பை எழுதுவார். பட்டிமன்றங்களிலும் கூட வாதங்களின் அடிப்படையிலேயே தீர்ப்பு எழுதப்படுவதாகப் பார்வையாளர்கள் நம்புகின்றனர்.

தொடக்கத்தில் இலக்கியக் கதாபாத்திரங்களே பட்டிமன்ற விவாதப் பொருளாக இருந்தன; பட்டிமன்றங்களைத் தங்களது ஊடகமாகக் கொண்ட தமிழ்ப் புலவர்களும், பேராசிரியர்களும், அதன் வழியே இலக்கிய ரசனையைப் பாமரமக்களிடம் வளர்ப்பதாகவும், இலக்கிய விமரிசனத்தைப் பரந்த தளத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும் என்று நம்பியதும் காரணங்களாக இருந்திருக்கலாம்.

*- கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா?*

*- பத்தினித் தெய்வம் பாஞ்சாலியே! சீதையே!*

*-பதிவிரதம் காத்தவர்களில் விஞ்சி நிற்பவள் நளாயினியே! மண்டோதரியே!! சாவித்திரியே!!! போன்ற தலைப்புகளும்,*

*- ராமகாதையில் விஞ்சி நிற்பது காதல் சுவையே! வீரச் சுவையே! பக்திச் சுவையே!*

*- திருக்குறளில் வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படுவது அறத்துப் பாலே! பொருட்பாலே! கமாத்துப் பாலே!*

*- காவிய நாயகர்களில் தலை சிறந்தவன் ராமனே! கோவலனே!*

போன்ற தலைப்புகளும் விவாதிக்கப் பட்டு, ஓர் ஊரில் கண்ணகியும், இன்னொரு ஊரில் மாதவியும் கற்பிற் சிறந்தவர்களாக ஆக்கப்பட்டார்கள். ஓர் ஊரில் ராமனுக்காக வாதாடியவர் இன்னொரு ஊரில் கோவலனுக்காக வாதாடுவதும் உண்டு. பட்டிமன்றப் பேச்சாளர்களுக்குள் 'இலக்கியப் பணிபுரிபவர்' என்ற பிம்பமும், 'வழக்கிற்கு வாதாடுபவர்' என்ற பிம்பமும் ஒரே நேரத்தில் செயல் பட்டதால் இந்தக் குழப்பங்கள் நேர்வதுண்டு. நடுவர்களுக்குள்ளும் அந்தக் குழப்பங்கள் செயல்படுவதால் இலக்கிய விவாதங்களுக்குத் தலைமை தாங்குபவர்கள் என்பதாகவும், நீதிமன்ற விசாரணையின் நடுவராகவும் அவர்கள் செயல்பட்டார்கள்.

O

தமிழ்ப்பேராசிரியர்களும், புலவர்களும் மட்டுமே பெரும்பாலும் பங்கேற்று வந்த பட்டிமன்றங்களுக்கு நடுவராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டதன் மூலம் அவற்றின் விவாதப் பொருளில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியவர் குன்றக்குடி அடிகளார். அதுவரை அரசியல மேடைகளில் மட்டுமே விவாதப் பொருளாக இருந்துவந்த பகுத்தறிவு, சோசலிசம், ஆன்மீகம், வாக்குச்சீட்டு போன்றன பட்டிமன்ற வாதப்பொருளாக மாறியதில் அடிகளாரே முன்னோடி. 'நாட்டின் வளர்ச்சிக்குத் தேவை முதலாளியப் பொருளாதாரம்...! சமதர்மப் பொருளாதாரம்!' என்று அணிகள் பிரிந்து வாதம் செய்யும். தீர்ப்பு வழங்க வேண்டிய அடிகளார் இரண்டுங் கலந்த கலப்பு பொருளாதாரமே இந்தியாவை வளமடையச் செய்யும் என்று தீர்ப்பு வழங்குவார். கூட்டம் ஏற்றுக்கொண்டு கலைந்து போகும். நேருவின் வார்த்தைகளைத் திரும்பக் கேட்பதாகப் பார்வையாளர்களுக்கு எண்ணம். பட்டிமன்றத்தில் அடிகளார் ஏற்படுத்திய அந்த மாற்றம் வெறும் உள்ளடக்க மாற்றம் மட்டுமல்ல. பட்டிமன்றத்தின் தத்துவார்த்த அடித்தளத்திலும் உடைப்பேற்படுத்திய ஒரு மாற்றம்.

'வாதங்களின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படும்' என்ற அடித்தளத்தில் இயங்கிய பட்டிமன்றத்தை 'நடுவரின் புத்திசாலித்தனத்தினால் தீர்ப்பு வழங்கப்படும்' ஒன்றாக மாற்றினார் அடிகளார். 'ஆன்மீகத் தலைவர், அறிவ்யற் சிந்தனை கொண்ட சாமியார், காவி வேட்டியில் சிவப்புச் சிந்தனையாளர்' போன்ற அவருக்கிருந்த பிம்பங்கள் அதற்குப் பெரிதும் உதவின. மிக விரிவான சான்றுகளும் தர்க்கங்களும் கொண்டு ஓர் அணி விவாதித்த போதிலும், அதனை எதிர்க்கும் அணிக்குச் சார்பாக அடிகளார் தீர்ப்பு வழங்கினாலும் கூட்டம் ஏற்றுக்கொள்ளும். அதற்குக் காரணம் அடிகளாரின் 'சமூக நீதியின் ஆதரவும், மனித நேயக்கொள்கையும்' கேள்விகளுக்கப்பாற்பட்டவையாக இருந்தன. அணிகளின் வாதங்களுக்கு மேலாக தனது மனித நேயச் சிந்னைகள் மூலம் கட்டியெழுப்பும் அடிகளாரின் வாதங்கள் அவரது தீர்ப்புக்கு அரண்செய்தன.

'இது நியாயமான தீர்ப்பு, தர்மத்தைக் காப்பவர் நீதிபதி, நேர்மைக்குத் துணை நிற்பவர் நடுவர்' போன்ற சொல்லாடல்களை ஐரோப்பியபாணி நீதிமன்றங்களுக்கோ, நீதிபதிகளுக்கோ பயன்படுத்துவதில்லை. ஆனால் இந்தியாவின் பாரம்பரியப் பஞ்சாயத்துக்களைப் பற்றிப் பேசும் பொழுது, பஞ்சாயத்துக்களை தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதும் பயன்படுத்துவதுண்டு. இந்தியாவின் கிராமப் பஞ்சாயத்து முறையில் பஞ்சாயத்துத் தலைவரின் தீர்ப்பே' இறுதியானது. தர்மம் எதுவோ அதன்படி நடப்பார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவரது தீர்ப்பை அனைவரும் ஒப்புக் கொள்வர். அடிகளாரின் தீர்ப்புக்களைக் கூட கிராமப் பஞ்சாயத்துக்களில் தரப்படும் தீர்ப்புக்களோடு ஒப்பிட்டுப் பேச வாய்ப்புண்டு.

ஐரோப்பியப்பாணி நீதிமன்றங்களையொத்த பட்டிமன்ற வடிவத்திற்கு இந்தியப்பாணி 'பஞ்சாயத்துத் தன்மையை' உண்டாக்கியவர் அடிகளார். இதற்காகப் பெருமைபட்டுக் கொள்பவர்கள் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். கிராமப் பஞ்சாயத்துகள் தனிமனித பிம்பங்களை - நாயகர்களை - முன்னிறுத்தும் வடிவம். ஒரு அமைப்பில் மற்றவர்களின் வாதங்களை - குரலை- இடத்தைச் சாதுர்யமாக ஒதுக்கிவிட்டு, தனிமனிதனின் புத்திசாலித்தனத்திற்கும், தந்திரங்களுக்கும் இடந்தரக் கூடிய ஒரு வடிவம். இன்று தொலைக்காட்சிகளில் இடம்பெறும், 'பஞ்சாயத்துக்களை'யும் 'அரட்டை அரங்கங்களை'யும் அதனை நடத்துபவர்களையும் நினைவுக்குக் கொண்டு வந்தால் (விசு, 'சோ) அதன் தத்துவார்த்த அடித்தளம் புரியும்.

பட்டிமன்றம் என்பதை ஒரு ஊடக வடிவமாகக்கொள்ளும் நிலையில் அனுப்புநர்களாக மேடையில் இருக்கும் அணிப்பேச்சாளர்களும் நடுவர்களும் இருக்கின்றார்கள் கேட்பவர்களான ஒரு பெருங்கூட்டம் - பார்வையாளர்களாக இருக்கிறார்கள். இவர்களிடையே செய்திகளைப் பரிமாறும் சாதனம் சாதாரண வார்த்தை மொழி. இந்த வார்த்தை மொழி என்னும் ஊடகத்தின் இயல்பை நேரடித் தொடர்பு முறை எனலாம். பொதுவாக எந்தவொரு ஊடகத்திற்கும் மூன்று நோக்கங்கள் உண்டு. தகவல், கல்வி, மகிழ்வூட்டல் என்பன அவை. இம்மூன்று நோக்கங்களில், வார்த்தை அல்லது பேச்சுச் சாதனம் முதலிரண்டு நோக்கங்களுக்கு முக்கியத்துவம் தரக்கூடியது. வெறும் பேச்சு மொழியோடு நடிப்பு, இசை போன்ற மற்ற சாதனங்களின் கூறுகளைச் சேர்க்கும் பொழுது மகிழ்வூட்டும் நோக்கம் கூடுதலாகி விடும். அதாவது பட்டிமன்றம், நிகழ்த்துக் கலைகளின் கூறுகளைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் மகிழ்வூட்டும் அம்சங்களை அதிகப்படுத்திக் கொண்டு, தகவல் மற்றும் கல்விக் கூறுகளில் குறைவுடையதாக மாறுகிறது. அதனால் வெகுவாக மக்களைக் கவர்வதாக மாற்றம் அடைகிறது.

பட்டிமன்றங்களின் பேச்சாளர்களும், நடுவர்களும் தங்கள் உரையில் மகிழ்வூட்டும் அம்சங்களைக் கூடுதலாக்கவே முயல்கின்றனர். நடுவர்களாக இருப்பவர்களுக்கு அந்த வாய்ப்புகள் அதிகமென்று சொல்லலாம். ஏனெனில், ஒரு பட்டிமன்ற நடுவர் இயல்பாகவே மூன்று பணிகளைச் செய்கிறார். விவாதப்பொருளை அறிமுகம் செய்வதும், முதல் பணி பேச்சாளர்களை அறிமுகம் செய்வதும், அவர்களது பேச்சின் சாராம்சத்தைச் சொல்வதும் இரண்டாவது பணி. மூன்றாவது பணி விவாதங்களைச் சீர்தூக்கி முடிவை - தீர்ப்பைச் சொல்லுவது. அதற்கும் மேலாக அவர் அமர்ந்திருக்கும் இடம் நடுநாயகம். ஒரு மேடையின் மையகப்பகுதிக்கான முக்கியத்துவம், நாயகப் பிம்பத்திற்கானது என்பது அரங்கியலின் அரிச்சுவடி.

O

இந்த அளவில் பட்டிமன்றம் என்ற பொது பொருளைக் குறிக்கும் கருத்துக்கள் நிறுத்தப்பட்டு, சிறப்புப் பொருளான அதன் நடுவர்களுக்கு வரலாம். பட்டிமன்ற நடுவர்களில் நம் காலத்தில் மிகப் பிரபலமான இருவர் சாலமன் பாப்பையாவும், திண்டுக்கல் லியோனியுமாவர். இவ்விருவரும் பட்டிமன்ற நடுவர்களுள் நாயக பிம்பங்கள் என்பதை அவ்விருவரையும் மற்ற சாதனங்கள் பயன்படுத்திக்கொள்ள முயல்வதிலிருந்தும், அச் சாதனங்கள் அவர்களைப் பற்றி உருவாக்கும் பிம்ப அடுக்குகளிலிருந்தும் உணரலாம்.

இப்போதைய நுகர்வுப் பொருளாதார அடித்தளமே ஒவ்வொரு துறையிலும், பிரபலங்களை முன்னிறுத்தும் வேலையைச் செய்கிறது. இது அதன் கடமையும் கூட. ஏனெனில் தனிநபர்களுக்கு கிடைக்கும் பிரபல்யம் நுகர்வுப் பொருளாதார அடித்தளத்திற்கு அவசியம். அந்தப் பிரபல்யங்களை மற்றைய சாதனங்களுக்கும் - ஊடகங்களுக்கும் அறிமுகப்படுத்தி, அவர்களின் மூலம் பொருள்களை விளம்பரப்படுத்தவும், விற்பனை செய்யவும், நுகர்வுப் பொருளாதார மதிப்பீடுகளை - போதனைகளை வழிய விடவும் செய்யலாம்.

இப்போதைய நுகர்வுப் பொருளாதார அடித்தளமே ஒவ்வொரு துறையிலும், பிரபலங்களை முன்னிறுத்தும் வேலையைச் செய்கிறது. இது அதன் கடமையும் கூட. ஏனெனில் தனிநபர்களுக்கு கிடைக்கும் பிரபல்யம் நுகர்வுப் பொருளாதார அடித்தளத்திற்கு அவசியம். அந்தப் பிரபல்யங்களை மற்றைய சாதனங்களுக்கும் - ஊடகங்களுக்கும் அறிமுகப்படுத்தி, அவர்களின் மூலம் பொருள்களை விளம்பரப்படுத்தவும், விற்பனை செய்யவும், நுகர்வுப் பொருளாதார மதிப்பீடுகளை - போதனைகளை வழிய விடவும் செய்யலாம். திண்டுக்கல் லியோனியின் முகம் தமிழ்ச்சினிமாவின் அப்பா முகமாக மாற்றப்படுவதையும், குமுதம் பாப்பையாவின் நதிமூலத்தைத் தேடுவதையும் இந்தப் பின்னணியிலேயே புரிந்து கொள்ளத் தோன்றுகிறது. சன் டி.வி.யின் காலை ஒளிபரப்பு, பாப்பையாவின் 'தினம் ஒரு குறளை' வழியவிட்டு, அவருக்கு இன்னொரு பரிமாணத்தை உண்டாக்குகிறது.

பட்டிமன்ற நடுவர்களாகப் பாப்பையாவும், லியோனியும் தீர்ப்பு வழங்குவதில் குன்றக்குடி அடிகளாரின் வழியையே பின்பற்றுகின்றனர். வாதங்களின் அடிப்படையில் தீர்ப்புக்களை வழங்குவதற்குப் பதிலாக, தன் மனம் விரும்பிய தீர்ப்புக்களையே பெரும்பாலும் இவ்விருவரும் வழங்குகின்றனர் என்றாலும் அவர்களிடையே வேறுபாடுகளும் உண்டு. பாப்பையா பல நேரங்களில் அணியினர் செய்யும் வாதங்களை முழுமையாகக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால், அவர்களின் உரைகளில் தொடர்ந்து இடையீடு செய்து கொண்டே இருப்பார். என்றாலும் அவர் வழங்கும் தீர்ப்பு 'குறையுடையது' என்ற எண்ணத்தைத் தோற்றுவிப்பது இல்லை. ஏறத்தாழ பஞ்சாயத்துத் தலைவரின் நிலையைப் போன்றது இது.


அடுத்த இதழில் முடியும்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## செ. யோகநாதன் :



# வக்கற்றுத் தாவும் முற்போக்காளர் !

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக வசித்த ஈழத்து எழுத்தாளரான செ.யோகநாதன் ஈழத்தில் நிரந்தரமாக வசிக்கும் நோக்கோடு வந்திருப்பதாக செய்தி வெளியிட்ட வீரகேசரியும், தினக்குரலும் (கூடவே தினகரனும்) அன்னாரது பேட்டியையும் வெளியிட்டன. விமர்சன ரீதியாக பகுத்தாராய்ந்து விடயங்களைப் பார்க்காமல், தனது வக்கிரங்களையும் ஏமாற்றங்களையும் கொட்டி அவர் வழங்கிய பேட்டியின் மணிக் கருத்துக்கள் சில வருமாறு (சுருக்கமாக)

1. கடந்த பத்தாண்டு காலத்தில் தமிழகத்தில் தரமான படைப்பாளிகள் தோன்றவில்லை.
2. மானிடநேயமும் முற்போக்கு சிந்தனையும் கொண்ட படைப்பாளிகளே இலங்கையின் வெகுஜன தொடர்புசாதனங்களுக்குப் பொறுப்பாக இருக்கின்றனர்.
3. டொமினிக் ஜீவா, ரகுநாதன், நீர்வை பொன்னையன், ராஜசிறீகாந்தன், ஆப்தீன், திக்குவல்லை கமால், மாத்தளை வடிவேலன், நீர்கொழும்பூர் முத்துலிங்கம், செங்கை ஆழியான் என்று ஈழத்து எழுத்தாளர்கள் தொடர்ச்சியாய்த் தரமாய் எழுதிவருகின்றனர்.
4. தமிழகத்தில் வெளியாகும் பெரும்பாலான சிறுசஞ்சிகைகள் தனிமனித புலம்பலாகவும், இலக்கியக் குழப்பம் நிறைந்ததாகவும் உள்ளன. வக்கிர உணர்வுகளைத் தொனிக்கின்றன. 'காலச்சுவடு இதற்கு நல்ல உதாரணம்'. மரணமுற்ற பெண்ணை நாலைந்து பேர் சேர்வதை மிக ஆபாசமாக சுந்தரராமசாமி எழுத அதற்கு நூற்றெட்டு இலக்கிய போக்குகளை காலச்சுவடு கற்பித்தது. அங்குள்ள தரமான படைப்பாளிகள் சுந்தரராமசாமியின் மனநிறைப்பிறழ்வை இதன்மூலம் அம்பலப்படுத்தினர். இந்த வக்கிரமும், மானிட விரோதப் போக்கும் நான் அறிந்தவரையில் இங்கு இல்லை. 'மல்லிகை', கொழுந்து' போன்ற இதழ்கள் மானிடநேயமும் முற்போக்கு சிந்தனையும் பொதிந்த படைப்புக்களை தொடர்ந்து அழுத்தமாகவும, உள்ளடக்கமாகவும் கொண்டு வெளியாகின்றன.
5. டொமினிக் ஜீவாவும் கே.டானியலும் தமிழகப்படைப்பாளிகளை வெகுவாகப் பாதித்துள்ளனர்.. கவிஞர்கள் முருகையன், காசி ஆனந்தனின் எழுத்துக்கள் முற்போக்குக் கவிஞர்களில் தாக்கம் கொடுத்துள்ளன.
6. மெஜிக்கல் றியலிசம், நவீனத்துவம், பின் நவீனத்துவம் அமைப்பியல் வாதம், இருப்பியல்வாதம் என்பன கடந்தகாலத்தில் யதார்த்தவாதக் கருத்துக்களை எதிர்த்து நிற்க முடியாமல் அற்றுப்போனவையே. அடிப்படையில் இவை மக்களை அவர்களின் பிரகாசமான வாழ்வை நிராகரிக்கின்றன.
7. நவீன இலக்கியத்தின் கருப்பொருள் தன்னினச் சேர்க்கை, தகாத உறவுகள், பிறழ்நிலை உளவியல் போன்ற வக்கிரங்களே.

(தினக்குரல்)

இலங்கை அரசியலில் ஐ.தே.கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பன காலத்துக்குக் காலம் ஆட்சிமாறுகிறபோது அரச சார்பான வெகுஜன சாதனங்களின் தலைமைப் பதவிகளும், ஆட்சியிலுள்ள கட்சிக்கு சாதகமானவர்களுக்கே செல்லும் இவர்களின் தகுதியைவிட குறித்த கட்சியோடு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார்கள் என்பனவே இப்பதவிக்கான நபரைத் தெரிவுசெய்யும். இது இலங்கை அரசியலிலுள்ள ஒரு சாபக்கேடு. இ.மு.எ. சங்கம், சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வருகிறபோதெல்லாம் பாரம்பரியக் கம்யூனிச கட்சிக்களுக்கூடாக ஆதரவளிப்பதெல்லாம் இவ்வாறான பதவிகளுக்காகவே. இவைகளுக்கு கொள்கை எதுவும் கிடையாது. (காண்க சரிநிகர் 142ல் வந்த ஆணிமுத்தர் கட்டுரை.)

செ.யோகநாதன் முற்போக்கு எழுத்தாளர். சங்கப்பண்ணையிலிருந்தே வளர்ந்தவர். அவர் 1983ல் இலங்கையை விட்டு இந்தியா சென்றமைக்கான காரணங்களில், அப்போது ஐ.தே.கட்சி ஆட்சியிலிருந்ததனால் இ.மு.எ.சங்கத்தை பாவித்து 'முன்னேற' முடியாது என்பதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். இன்று செ.யோகநாதன் இலங்கையில் நிரந்தரமாக தங்கவருகின்றமை மு.எ.சங்கத்திலுள்ள பலர்வெகுஜன சாதனங்களில் செல்வாக்கு மிக்க பதவிகள் பெறுகின்ற சூழலில் பதவி ஆசையினாலேயே என்பதை ஊகிக்க சரிநிகர் வாசகர்களுக்கு சிரமமாக இருக்காது. பழைய படியும் ஐ.தே.க ஆட்சிக்கு வருகிறபோது வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் (தமிழகம்) ஏறிக்கொள்ளும்.

இ.மு.எ.சங்க பண்ணையிலிருந்து வளர்ந்தவர்களில் செ.யோகநாதன் தான் மிகவும் திறமையானவர் என்பதில் சந்தேகமில்லை. அவரது ஆரம்பகாலப் படைப்புக்கள் இன்றைக்கும் சிறப்பானவையாக இருக்கின்றன. எனினும், இ.மு.எ.சங்கத்தின் கொள்கைகள் அற்ற அல்லது காலத்துக்குக் காலம் மாறும் போலிக் கொள்கைகளை சாட்டுக்களாகக் கொண்டு பதவிகளையும், வசதிகளையும் பெறுவதற்காகவே சங்கத்தை பயன்படுத்துகின்ற அரசியலின் அரசியல்வாதியானார். தமிழ் நாட்டுக்கு புலம்பெயர்ந்து சென்றபினனர் தமிழ்நாட்டு முற்போக்கு எழுத்தாளர் சங்க தொடர்புகளை 'முற்போக்கு' என்ற சாட்டுக்காக உபயோகித்துக் கொண்டு அதேவேளை ஓரளவு ஜனரஞ்சகமாக எழுதி 'பிரபல்யமான' எழுத்தாளர் என்பதையும் தக்க வைத்துக் கொண்டார். இதன் மூலம் எழுத்தை வயிற்றுப்பிழைப்புக்காக பயன்படுத்திக்கொண்ட முதல் வெற்றிகரமான தமிழ்நாட்டுக்குப் புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளரானார்.

தமிழ்நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி முற்போக்கு என்ற பெயரைப் பயன்படுத்தி இயங்குகின்ற இலக்கிய இயக்கங்கள் மிகக்கூர்மையாகவும், திறமையாகவும், விமர்சனரீதியாக விடயங்களை பகுத்தாராய்ந்து பார்க்கின்ற தன்மையை என்றோ கைவிட்டுவிட்டன. எனினும், அவ்வாறு பகுத்தாராய்ந்து பார்க்கிற போக்குத்தான் ஒரு கலைஞனினதும் சிந்தனையாளனினதும் அடிப்படைத் தகுதி. மறுதலையாக சமத்துவம் மானிடநேயம் என்பன போன்றன வெளிப்படையாக பிரச்சாரமாக படைப்புக்களில் வரவேண்டுமென எதிர்பார்த்தனர். அவ்வாறாக வருகின்ற படைப்புக்களையே உயர்ந்த படைப்புக்களாக அடையாளங் காணக்கூடிய அளவிலேயே இவர்களின் புலமை மட்டம் இருந்தது. இ.மு.எ.சங்க எழுத்தாளர்களும் அரசியல்வாதிகளாக வெற்றிகரமாக அரச இயந்திரம் சமூக நிறுவனங்கள் வெகுஜனதொடர்பு சாதனங்கள் முதலியவற்றுடன் கொடுக்கல், வாங்கல்களை (Dealings)) செய்பவர்களே வெற்றிகரமாக எழுத்தாளர்கள் என்ற மாயைக்குள்ளானார்கள். புலமை. விமர்சன மரபு என்பனவற்றுக்கு கிஞ்சித்தும் இடமில்லாமல் போயிற்று.

மறுபக்கத்தில் விடயங்களை விமர்சன ரீதியாகப் பார்க்கிற ஒரு புலமை மரபு பாரதி, புதுமைப்பித்தனிலிருந்து இன்றைய நிறப்பிரிகை, காலச்சுவடு முதலிய சிறுசஞ்சிகைகள் வரை தமிழ் சூழலில் வளர்ந்து வந்திருக்கிறது. தங்களின் அரசியலின் அடிப்படையையே ஆட்டங்காணவைக்கிற இந்த மரபைக்கண்டு 'முற்போக்கு எழுத்தாளர்கள்' அஞ்சினர். இரண்டு விதத்தில் இந்தமரபை முற்போக்கு எழுத்தாளர்கள்' அணுகினர்.

1. அவர்களைப் பற்றி பேசுவதை எழுதுவதைவிட்டு முற்றாகப் புறக்கணித்தமை.
2. அவர்கள் மீது ஒரு அரசியல் வாதிபாணியில் மலினமான விமர்சனரீதியில் வந்தடையாத ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை வைத்தனர்.

மேற்குறித்தவற்றின் பின்னணியிலேயே தினக்குரலுக்கும், வீரகேசரிக்கும் அவர் வழங்கிய புலம்பல்கள் நிறைந்த பேட்டியை அணுகமுடியும்.

சிறுகதை நாவல்களைப் பொறுத்தவரையில் கடந்த பத்தாண்டு காலத்தில் எப்போதும் போலவே தமிழகத்தினரே முன்னணியில் நிற்கின்றனர். ஜெயமோகன் தமிழகத்தின் கடந்த பத்தாண்டுகளில் வந்த முக்கியமான தீவிரமான படைப்பாளி. இதைமறுத்து ஈழத்தவர்கள் தமிழகத்தை விட தரமாக எழுதிவருகிறார்கள் என்பதற்கு செ.யோ. தருகின்ற உதாரணங்கள் மிகவேடிக்கையானவை. இ.மு.எ.சங்க குணாதிசயங்களுக்கேற்ப அதேபாணியில் எழுதிவருகின்றவர்களை பாராளுமன்றத்தில் தனது அமைச்சரவைக்காக வக்காலத்து வாங்குகின்ற தலைமை அமைச்சரைப் போலவே ஒப்புவிக்கின்றார். விமர்சன நோக்கோடு பகுத்தாராய்ந்து கலையம்சங்களோடு எந்தக்கட்சியோடும் ஒட்டி வயிறு வளர்க்காமல் எழுதுகிற ரஞ்சகுமார், க.சட்டநாதன், உமாவரதராஜன், எஸ்.எல்.எம். ஹனீபா, அ.ரவி முதலியவர்களை குறிப்பிடுவதை தவிர்த்ததை புரிந்து கொள்ளமுடிகிறது.

கவிதைத்துறையில் தான் வேண்டுமானால் தமிழகத்தில் தரமான படைப்பாளிகள் தோன்றவில்லை எனக் கூறமுடியும். ஆனால், தரமான கவிஞர்களாக செ.யோ.கூறுவது காசி ஆனந்தனையும், புதுவை இரத்தினதுரையையும் தான். சுபமங்களா பேட்டியில் கேள்வியில் சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், புதுவை இரத்தினதுரை எனக்கேட்கப்பட தந்திரமாக முதலிருவரையும் தவிர்த்து இரத்தினதுரையை உயர்த்திப் பிடிக்கிறார்.

நவீனத்துவம் முதலிய இசங்கள் குறித்தும் செ.யோவினுடைய புரிதல் அவ்வளவுதான். க.கைலாசபதி இன்று உயிரோடு இருந்தால் இதனை வாசித்து விழுந்து விழுந்து சிரித்திருப்பார். செ.யோகநாதன் இவ்வாறான மோட்டுத்தனமான பேட்டி வழங்கும் சூழ்நிலையே இன்றிருந்திருக்காது. இறந்துபோன கைலாசபதியை வைத்து டொமினிக் ஜீவா (பார்க்க 'மூன்றாவது மனிதன்' பேட்டி) செ.யோ. முதலிய 'முற்போக்கு எழுத்தாளர்கள் ஒரு கீழ்த்தரமான அரசியலை வெற்றிகரமாக நடாத்திவருகின்றனர். கைலாசபதி உயிரோடு இருந்திருந்தால் கா.சிவத்தம்பியைப் போலவே கடந்த காலத் தவறுகள் பற்றிய ஒரு சுயவிமர்சனத்தை கட்டாயம் செய்திருப்பார்.

ஒரு பாலுறவு பற்றி ஒரு பிற்போக்கு 'தமிழ் எழுத்தாளர்' கீழ்த்தரமாகவே இயற்கைக்கு ஒவ்வாததாக கூறுவது ஆச்சரியப்படக்கூடியதல்ல. இலங்கையில் இனவாத ஆங்கிலப்பத்திரிகைகளே ஒரு பாலுறவு பற்றி திறந்த மனத்துடன் விவாதிக்க வருகின்ற போது வீரகேசரி அதற்கு தயாரில்லை. அதனுடைய ஆங்கில சகோதரப் பத்திரிகையான Weekend Express கூட மேற்குறித்த விடயம் பற்றி கீழ்த்தரமாக வக்கிரமாகவே எழுதிவருகிறது. மனிதர்கள் உருவாகின காலத்திலிருந்தே ஒரு பாலுறவும் இருந்து வருகிறது. இது இயற்கையானது. பிறப்பினால் வருவது. ஒருவர் ஒரு ஒருபாலுறவுக்காரராக பிறப்பதற்குரிய நிகழ்தளவு 0.03=100 நபர்களில் மூவர் (03%) என்று பாலியல் கல்வி கூறுகிறது. ஆக இந்த நிகழ்தகவுக்கு ஒரு பாலுறவு பற்றி வக்கிரமாகக்கூறி வருகின்ற செ.யோகநாதன், யோகா பாலச்சந்திரன் முதலியவர்களது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் கூட தப்பமுடியாது.

காலச்சுவடு இதுவரை சிறுசஞ்சிகைகளில் அதிகமாக விற்பனையாகிற (1000 பிரதிகளுக்குமேல்) சிறபபாக ஒழுங்கமைக்கப்பட்டு தீவிரமாக வருகின்றது. அதனையிட்டு செ.யோ. ஆடிப் போய்விட்டார். சில காலத்துக்கு முதல் 'தினமணி கதிருடனா'ன பேட்டியில் கா.சிவத்தம்பியும், 'காலச்சுவடு வட்டம்' என சிலாகித்துச் சொல்லியிருந்தார். செ. யோகராசாவையே பேராசிரியர் என்கிற செ.யோ. பேட்டியில் கா. சிவத்தம்பியை குறிப்பிடாமல் விடுவதைப் புரிகிறதா?

காலச்சுவடு இதழ் 11ல் (ஏப்ரல் ஜூன் 1995) சுந்தரராமசாமியின் 'பட்டுவாடா' என்ற யதார்த்த பாணியில் எழுதப்படாத சிறுகதையைப் பற்றியே செ.யோவின் மூர்க்கமான புலம்பல். விமர்சனரீதியாக சிந்திக்கின்ற எவரும் அந்தக் கதை எதைப்பற்றியது யாருக்கு உண்மையில் மனநிலைப்பிறழ்வு என்பதை அறிந்து கொள்வார்கள்.

இலங்கையின் வெகுஜன தொடர்பு சாதனங்களுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் கொழும்பில் ஒரு வீட்டுக்காகவும் வசதி அந்தஸ்துக்காகவும் சமரசம் செய்து விபச்சாரம் செய்பவர்கள் என்பது சரிநிகர் வாசகருக்குத் தெரிந்ததே.

குறித்த பேட்டியை வாசித்தவர்கள் பேட்டிக்கான கேள்விகளும் செ.யோ.வின் விருப்பத்துக்கேற்பவே தயாரிக்கப்பட்டுள்ளன என்பதைப் புரிய முடியும். இறுதிக்கேள்வி செ.யோவின் அசுரவித்து நாவல் பற்றிக்கேட்கப்பட அதற்கு 'இந்த நாவல் பற்றி இலங்கையில் விநோதமான உளறல்கள் எழுதப்பட்டதை அறிந்ததாகவும் இலங்கையில் இரண்டு நிறுவனப் பரிசில்கள் இதற்குக்கிடைக்காமலிருக்க சிலர் அரும்பாடுபட்டு வெற்றி கண்டதாகவும்' கூறுகிறார்.

அசுரவித்து 1994 ம் ஆண்டுக்கான சுதந்திர இலக்கிய விழாவில் போட்டிக்குரியதாக எடுக்கப்பட்டது. எனினும், பரிசுக்குரியதாக அந்த ஆண்டு தாமரைச் செல்வியின் நாவலான தாகத்தையே நடுவர்கள் தெரிவு செய்தனர். இலங்கையின் சாகித்திய மண்டலப்பரிசுகள் போல சுதந்திர இலக்கிய விழாப் பரிசு அரசியல்வாதிகளால் தெரிவு செய்யப்படுவதில்லை. அது தகுதிவாய்ந்த நடுவர்களாலேயே தெரிவுசெய்யப்படுகிறது. குறித்த ஆண்டில் நடுவர் குழுவில் ஒருவராக இருந்த எம்.ஏ. நுஃமான் அசுரவித்து தெரிவுசெய்யப்படவில்லை என்பதையும் ஏன் தாமரைச் செல்வியின் நாவல் தெரிவு செய்யப்பட்டது என்பதையும் விமர்சன ரீதியாக நடுவர் அறிக்கையை வாசித்தார். டொமினிக் ஜீவா மற்றும் முற்போக்கு எழுத்தாளர் சங்க எழுத்தாளர்கள் போல நுஃமான் ஒரு அரசியல்வாதியல்ல. நுஃமானைப் பற்றி செ.யோ. மறைமுகமாகத் தாக்கி இவ்வாறான பேட்டி கொடுப்பதை விட்டு அவரது பெயரைக் குறிப்பிட்டு தாக்கலாம். அல்லது ஏன் அசுரவித்துக்கு பரிசு வழங்கப்படவில்லை என்பது குறித்து நுஃமானுடன் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது பத்திரிகையிலோ விமர்சன ரீதியாக விவாதிக்க முன் வரவேண்டும்.

அதற்கு செ.யோவுக்கு வக்கிருக்கிறதா?

**நட்சத்திரன் செவ்விந்தியன், அவுஸ்திரேலியா**

www.tamilarangam.net



## நூல் விமர்சனம்



இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்,
க. அருணாசலம்,
குமரன் புத்தக இல்லம்,
சென்னை/ கொழும்பு,
1997 புரட்டாதி,
ப.475+ ix,
இந்திய ரூபா 150.00

### " ஈழத்துத் தமிழியலை ஒரு கமண்டலத்துள் அடக்க வேண்டாமே !"

தமிழியல் என்பது தமிழ் மொழி சார்ந்த செயற்பாடுகள் பற்றிய ஆய்வுத்துறை என்ற கருத்திலும், அதனின் சற்று விரிவாகவும் பொருள் கொள்ளப்படுகிறது. இலங்கையின் தமிழ் மொழியினதும், இலக்கியத்தினதும் விருத்திக்காக மிகவுஞ்செய்யப் பட்டுள்ளது. இவற்றை விடத், தமிழ் மூலம் பல்வேறு சமூகச் செயற்பாடுகளது பயனாகச் சமுதாய உயர்வும் ஏற்பட்டுள்ளது. இவை பற்றி சீரான ஒரு பதிவு வரலாற்று நோக்கில் மட்டுமன்றிச் சமுதாய நோக்கிலும், மொழி விருத்தியின் நோக்கிலும் பயனுள்ளதும் அவசியமானதுமாகும்.

அருணாசலம் மேற்கொண்ட முயற்சி பெரிது. அது வேண்டுகின்ற உழைப்பு, ஒரு கடுந்தவத்தினது பண்பினையுடையது. கடுமையையும், கவனத்தையும் மட்டுமன்றிக் கூரிய விமர்சனப் பார்வையையும் அது வேண்டுகிறது. பல்வேறு தளங்களில் நிகழ்வனவற்றுக்கிடையிலான உறவையும் விருத்திக்கும் மாற்றத்துக்கும் ஏதுவாயிருக்கும் முரண்களையும் அவற்றின் செயற்பாட்டையும் தெளிவாக உணரும் பக்குவத்தை அது வேண்டுகிறது. தகவல்களை முழுமைக்குச் சார்பாக நிறுத்தி அவற்றுக்கு முக்கியத்துவம் வழங்குமாறு அது வற்புறுத்துகிறது. அத்தகைய தவமியற்றும் ஆற்றலுடையோர் சிலர் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வாய்த்திருந்தனர். ஆயினும், இன்று அத்தகையோரைக் காண்பது அரிதாகி வருகிறது. அருணாசலம் நான் குறிப்பிட்டவாறான ஒரு தவத்தில் இறங்கினாரென நான் எண்ணவில்லை. எனினும், அவருக்கு வாய்த்த ஒரு சூழலைப் பயன்படுத்திச் சில பெருங்காரியங்களை அவர் செய்திருப்பாரென எதிர்பார்க்க நியாயமுண்டு.

தகவல்களின் செம்மை, முழுமை, தெளிவு, மிகைப்படக்கூறாமை, பங்களிப்புக்களின் முக்கியத்துவம் பற்றிய நிதானமான கணிப்பு என்பனவற்றை உள்ளடக்கிய திட்டமிடல் அடிப்படையானது. விரிவான ஒரு செயற்பாட்டுத்தளத்தில் சொற்சிக்கனம், அவசியம். ஆதாரங்களையும், உசாத்துணை ஆவணங்களையும் குறிப்பிடுவதில் கட்டுக்கோப்பானதும் பயன் சார்ந்ததுமான ஒரு நடைமுறை தேவைப்படுகிறது. இன்று தமிழ் சார்ந்த ஆய்வுகளில், குறிப்பாகத் தமிழில் வெளிவருவனவற்றில் மேற்கூறியன பற்றிய கவனம் போதியளவில் இல்லை. அருணாசலத்தின் நூலும் இவ்வகையிற் குறைபாடானது. விவரங்களை இங்கு தருவதாயின் இக்கட்டுரை அலுப்பூட்டும் அளவுக்கு நீண்டு விடும்.

நூலின் அத்தியாயங்களைக் கவனிப்பின், அங்கும் சீரின்மையை நாம் காணலாம். நாட்டார் வழக்கியலும், அவைக் காற்றுக் கலைகளும் ஒரு அத்தியாயத்திற்குள் வரும் நியாயம் என்ன? இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனவும், மலையகத் தமிழரியல் எனவும் அத்தியாயத் தலைப்புக்களின் பண்பு வேறுபடுவது ஏன்? நவீன தமிழ்க்கவிதையும், புதுக்கவிதையும் என்ற தலைப்பு, புதுக்கவிதை, நவீன தமிழ்க்கவிதையின் பகுதியல்ல என்று கூறுகிறதா? இவை ஒரு புறமிருக்கச், சமகாலத் தமிழின் பிரச்சினைகட்கு முகங்கொடுக்கும் விதமாக எடுக்கப்பட்ட முயற்சிகள் எதுவுமே நூலாசிரியராற் கருதப்படவுமில்லை. வணிகம், விஞ்ஞானம், மருத்துவம், தொழிநுட்பம் போன்ற துறைகளில் ஈழத்தவரது முயற்சிகள், பல இடங்களில், தமிழகத்திற்கு முன்னோடிகளாக அமைந்துள்ளன. அகராதியியலில் ஈழத்தின் பங்களிப்புக் குறைவான ஒன்றேயாயினும் கலைச்சொல்லாக்கத்தில் முழுமையான நோக்குடைய முயற்சிகள், மெய்யியல், கணிதம் ஆகியன தொட்டு எந்திரவியல் வரையிலும் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பத்திரிகை, சஞ்சிகைத் துறைகள் பற்றிய ஆய்வு நூலில் இல்லாமை ஒரு புறமிருக்க, ஒலிபரப்புத் துறை உட்படத் தகவல் ஊடகங்கள் இன்று தமிழிற் செயற்பட இயலாது தடுமாறும் விதமான அயற்பேர்ப் பிரச்சினை பற்றிய குறைந்தபட்சக் கணிப்பும் அங்கு இல்லை. திறனாய்வு பற்றி இறுதி அத்தியாயத்தில் நூலாசிரியருக்கு நினைவு வருகிறது. அது பற்றி எழுதும் முயற்சி, ஏனோதானோ என்ற போக்கில் அமைந்துள்ளது. எனினும், சில விமர்சனங்கள் பற்றிய நீண்ட குறிப்புகள் வெவ்வேறு இடங்களிற் காணப்படுகின்றன.

நூலின் மிகவும் பலவீனமான அம்சம், சில ஆய்வறிவாளர்கட்குச் சூட்டப்படும் கிரீடங்கள். தலைசிறந்த, விதந்து கூறத்தக்க, புகழ்பூத்த, முதுபெரும் போன்ற அடைமொழிகள் நூல் நெடுகிலும் சிந்திக்கிடக்கின்றன. பெருவாரியான பங்களிப்புக்களது முக்கியத்துவம், அவற்றின் தரமும் தகுதியும் மட்டுமன்றிப், பிறவற்றுடனான உறவும் முரணும் சார்பாகக் கருதப்படவில்லை. ஏறத்தாழ எந்த விதமான விமர்சனக் கண்ணோட்டமுமின்றி, அடிக்குறிப்புக்களிற் குறிப்பிடப்படும் நூல்களும், நூலாசிரியர்களும் பற்றிய விவரங்களாகவே அத்தியாயங்களிற் கணிசமான பகுதி விரயமாகிறது.

உசாத்துணைகளதும், நூல்களதும் பட்டியல்கள் ஆசிரியருக்குப் பரிச்சயமானவர்களது ஆக்கங்களின் பட்டியல்களின் தொகுப்பாகப் போதிய மதிப்பீடின்றிப் புத்தகத்தின் பல பக்கங்களை அடைத்துக் கொள்கின்றன. தமிழியல் பற்றிய ஒரு ஆய்வு நூலுக்கும், ஒரு நூலகவியலாளர் வழங்கும் தமிழியல் நூற்பட்டியலுக்கும் வேறுபாடு இருக்கிறது. இந்த நூல் இரண்டுங்கெட்டானாக அமைந்துள்ளது. பல்கலைக்கழகங்கட்கு வெளியே நூலாசிரியர் தகவல்களைத் தேட எடுத்த முயற்சியின் போதாமை அப்பட்டமாகவே தெரிகிறது.

சான்றாதாரங்களை வழங்குவ்தற்கு நூலாசிரியர் கையாண்டுள்ள முறை பரிந்துரைக்கத்தக்கதாக எனக்குத் தெரியவில்லை. அத்தியாயங்களில் அச்சுப்பிழைகள் குறைவாயினும் சான்றாதாரங்களிலும் உசாத்துணை நூற்பட்டியலிலும் கணிசமான தவறுகள் உள்ளன.

இந்த நூலில் உள்ள பயனுள்ள தகவல்கள் நூலின் நீளத்திற் பாதியினுங் குறைவான ஒரு பிரசுரத்தில் விமர்சன நோக்குடன் கூறப்பட முடியும். நூலாசிரியரால் எதிர்காலத்தில் அதற்கான முயற்சி எடுக்க இயலுமென எண்ணுகிறேன்.

கலாநிதி, பேராசிரியர், பெருமான் போன்ற முண்டாசுகளை எல்லாங் கழற்றி ஓரமாக வைத்துவிட்டுப் படைப்புக்களையும், பணிகளையும் அவற்றின் தரமும், தகுதியுங் கொண்டு மதிப்பிடும் வல்லமை நமக்கு வேண்டும். அது வராதவரை, தமிழியலுக்கு 'இரண்டாயிரம் வருடப் பழைய சுமை' போதாமல் இன்னுஞ் சுமைகளுந் தொடரும்.


நூலாசிரியரது கடும் உழைப்பு, நிதானமான திட்டமிடல் இல்லாமையால், அதற்குகந்த பயனை அளிக்க இயலவில்லை என்பது வருத்தத்திற்குரியது. இவ்வளவு விரிவான ஒரு துறையை ஒரு நூல் அடக்குவதன் சிரமம் நாம் அறியமுடியாததல்ல. எனவே, நமக்கு எட்டக்கூடிய தகவல்கள் போதாதிருப்பின் பல்கலைக்கழகத் தமிழியல் ஆய்வுகள் என்றவாறாக நூலாசிரியரது செயற்பாட்டுத் தளத்தைச் சுருக்கி அதன் பின்பு, விரிவான ஆய்வுகளைப் பகுதி பகுதியாக வேனுஞ் செய்யலாம். ஈழத்துத் தமிழியல் ஒரு கமண்டலத்துக்குள் அடக்கக் கூடிய பொருளாக இருக்க வேண்டாமே.

**சி. சிவசேகரம்**

## நூல் விமர்சனம்

### "கொஞ்சம் அதிகமாக எதிர்பார்க்கிறோம் !"

இலங்கையில்
தமிழ் இலக்கிய வளர்ச்சி
கலாநிதி துரை மனோகரன்
கலைவாணி புத்தக நிலையம்
யாழ்ப்பாணம்-கண்டி
விலை100.00 ரூபா




ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிக் கையடக்கமான ஒரு நூலுக்கான தேவை மறுத்ததற்கரியது. அதற்கான கனதியான முயற்சிகள் வரவேற்கத்தக்கனவும் ஊக்ககுவிக்கப்பட வேண்டியனவும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை இவ்வாறான ஒரு முயற்சி, இலங்கையின் தமிழ் இலக்கியத் துறைக்கும் திறனாய்வுத் துறைக்கும் பெரும் பங்களித்த பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையினின்று வரும் போது, நமது எதிர்பார்ப்புகள் வழமையினும் சிறிது அதிகமாக இருப்பதும் நியாயமானதே.

துரை மனோகரன் தனது நூலை ஐந்து இயல்களாக வகுத்திருக்கிறார். ஈழத் தமிழ் இலக்கியத்தின் தோற்றுவாய் சார்ந்த பகுதி, எண்ணி நான்கே பக்கங்களில் முடிகிறது. இதற்கான முக்கிய காரணங்கள், யாழ்ப்பாண அரசு தோன்றிய காலம் வரையிலான நூல்களின் நமது கைக்கெட்டக் கூடியன சிலவே என்பதும், வாய்மொழி இலக்கியம் நமது இலக்கிய வரலாற்றுத் திறனாய்வுத் துறைகளில் இன்னமும் சிறிது தாழ்வான ஒன்றாகவே காணப்படுவதும் தான் எனலாம். இரண்டாம் இயல் 23பக்கங்கள் வரை விரிகிறது. ஆயினும் இக்காலப்பகுதியில் வந்த நூல்களில் சில; புராணங்களும் அரச பரம்பரையின் புகழ்பாடும் நூல்களும் போக, இலக்கியமாகத் தேறுவன, பொது மக்கள் சார்பான நூல்கள் தாம். இவற்றின் வலிமைக்கு இவற்றுக்கு முன்னிருந்த வாய்மொழி இலக்கிய மரபின் பங்களிப்பு என்ன என்ற கேள்வி எழுகிறது. இது பற்றி நூலாசிரியர் சிறிது விரிவாகவே எழுதியிருக்க முடியும். மறுபுறம் யாழ்ப்பாண அரசின் தோற்றம் தமிழருக்கென ஒரு அரசின் தோற்றம் தொடர்பான முக்கியத்துவத்தை நூலாசிரியருக்குக் காட்டுகிறதை நோக்கும் போது நூலாசிரியரும் ஆண்டபரம்பரையின் பேரில் தமிழ் மக்களது தேசிய இன அடையாளத்தை வலியுறுத்துகின்ற ஒரு போக்குக்குப் பலியாவதைக் காணலாம். (பக்6,7,14), யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் இன்றைய தமிழ்த் தேசிய அடையாளத் தேடலுக்கும் உறவு காட்டுகிற முயற்சியின் வரலாற்று வறுமை பற்றி இங்கு நான் விவரிக்க விரும்பவில்லை. ஆயினும் ஈழத்தின் தமிழிலக்கிய வளர்ச்சி பற்றிய கனதியான ஆய்வுக்கு இது ஊறு செல்கிறது.

போர்த்துகேய- ஒல்லாந்தர் காலத்து இலக்கிய வளர்ச்சி மூன்றாம் இயலாகிறது, ஆயினும் ஒல்லாந்தரின் சமயப் பொறையைக் காணுகிற நூலாசிரியர் (ப.29) கத்தோலிக்க மதத்தவர் மீது டச்சு ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்து விட்ட அடக்கு முறையைப் பற்றியும் அறியக் கூடும். டச்சுக்காரர் ஆட்சியின் போது, யாழ்ப்பாணத்தில் வேளாள நிலவுடமையாளரது சாதிய மேலாதிக்கம் மேலும் இறுக்கமடைந்து தீண்டாமையும் வலிவு பெற்றது பற்றிய சில குறிப்புகளைச் சில ஆண்டுகளுக்கு முன் வாசித்த நினைவும் உண்டு, போர்த்துகேயரை நோக்கும் முறையை விடக் கனிவுடன் ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் நோக்குபவை யாழ்ப்பாணத்தில் நெடுங்காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்த சைவ வேளாள நிலவுடமை ஆதிக்கச் சக்திகளது பார்வையின் பிரதிபலிப்பு என்றே எனக்குத் தோன்றுகின்றது. இக் காலக்கட்டத்தின் புலவர்களது வித்துவத் திறமை எவ்வகையான படைப்பிலக்கியங்கட்கு வழிவகுத்தது என்பது பற்றிய விமர்சனப் பாங்கான எந்தக் கருத்தையும் துரை மனோகரன் கூறத் தயங்குவதும் ஏமாற்றம் அளிக்கின்றது.

நான்காவது இயல் பத்தொன்பதாம நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சி பற்றியது. இதில் மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அம்சம், இந்த நூற்றாண்டின் முஸ்லிம் இலக்கியவாதிகள் பற்றிய விரிவான குறிப்புக்கள் என்பேன். அதே அளவுக்கு அக் காலகட்டத்தின் கிறிஸ்துவ இலக்கியப் பங்களிப்புகளுக்கும் இடம் ஈந்திருப்பின் சிறப்பாயிருந்நதிருக்கும்.

நூலின் பெரும் பகுதி எதிர்ப்பார்க்கக் கூடியவாறு, இந்த நூற்றாண்டு தொடர்பானது.

இலங்கையின் அரசியலின் இனவாத முரண்பாடுகளை 1956 இல் இருந்தே நூலாசிரியர் அடையாளங்காண முனையும்போது, (ப.116), இந் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்த சிங்கள- முஸ்லிம் மோதல், 1948 குடியுரிமைச் சட்டம் போன்றவற்றின் பின்னணியையும் சிங்களம் மட்டுமே என்ற யோசனை சுதந்திரத்திற்கும் முன்னரே ஜயவர்தனவால் பிரேரிக்கப்பட்டதையும் நூலாசிரியர் கணிப்பிலெடுக்கத் தவறுகிறார்.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் 60களில் தான் சுதேசிய விழிப்புணர்வு கொள்ளத் தொடங்கின என்ற கூற்று (ப.120) எந்த அடிப்படையலானது என விளங்கவில்லை. தாய்மொழி மூலம் அடிப்படைக் கல்வி கற்றோர் பல்கலைக்கழகங்களுட் புகுந்தது 60களில் என்பது உண்மை. ஆயினும் சுதேசிய உணர்வு அதற்கு முன்னமே வலுப்பெற்று விட்டது.குறுகிய தமிழ்த் தேசியவாதப் பார்வை பின்பு விரிவடைந்ததில் சிங்களப் பேரினவாதத்தின் பங்கு முக்கியமானது.


கவிதை பற்றிக் கூறும் போது, நூலாசிரியர் நவீன கவிதை எனவும் புதுக்கவிதை எனவும் வேறுபடுத்துகின்றார். மரபுக் கவிதை, நவீன கவிதை, புதுக் கவிதை என்பனவற்றிடையிலான வேறுபாடு என்ன என அவர் தெளிவுபடுத்தியிருக்கலாம். சண்முகம் சிவலிங்கம் நவீன கவியினை எழுதியவராகவே முக்கியம்

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# "அவர் ஒரு யதார்த்தவாதி"

"சரிநிகர்" பத்திரிகையில் இதழ் 129ல் வெளியான "வாசகர் செ(ா)ல்லடி" என்ற பகுதியில் பெ. முத்துலிங்கம் எழுதிய விவாத அரங்கில் வீ.கே.வெள்ளையன் அவர்கள் பற்றிய குறிப்பில் தவறான அபிப்பிராயம் எழுந்துள்ளதால் அதற்கான ஒரு சிறு விளக்கத்தை இந்தப் பகுதிக்கு எழுதுகிறேன்.

4ம்பந்தியில் "இதேவேளை 60-70களில் வீ.கே.வெள்ளையன் தலைமையில் சிறிது முற்போக்கான மாற்று இருந்தது என்கிறார். முற்போக்கு என எதனை சிவசேகரம் நினைக்கிறார் என்பதே கேள்விக்குறியாக இருக்கிறது. ஏனெனில், அறுபத்தைந்தில் ஆட்சிப்பீடம் ஏறிய டட்லி சேனநாயக்காவின் அரசு அதன் செனட் சபையில் ஒரு அங்கத்துவத்தை இ.தொ.காவுக்கு வழங்கியது. இந்தச் சந்தர்ப்பத்தில் இ.தொ.கா. பொதுச் செயலாளராக கடமையாற்றிய, கண்டி திருத்துவக்கல்லூரியில் கல்விகற்ற வெள்ளையன் அப்பதவியை தொண்டமான் தனக்கு வழங்குவார் எனக் கருதினார். ஆனால் அதனை தொண்டமான் அண்ணாமலைக்கு வழங்கினார். இதனால் மனமுடைந்த வெள்ளையன் தான் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்றகாரணத்தினாலேயே தமக்கு அப்பதவி வழங்கப்படவில்லை என்றும், அண்ணாமலை பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதனாலேயே அவருக்கு வழங்கப்பட்டது என்ற பிரச்சாரத்தை முன்வைத்து தொழிலாளர் தேசிய சங்கத்தை உருவாக்கினார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வீ கே.வெள்ளையன் பற்றிய இக்கூற்றானது தவறானதாகும். செனட்டர் பதவி வழங்கப்பட்ட காலத்தில் அதாவது, 1965ல் வீ.கே.வெள்ளையன் அவர்கள் இ.தொ.காவில் பொதுச்செயலாளராக இருக்கவில்லை. அத்தோடு அந்த ஸ்தாபனத்திலும் அவர் இல்லையென்பதை முதலில் சுட்டிக்காட்ட வேண்டும்.

வீ.கே.வெள்ளையன் அவர்கள் உருவமைப்பிலேயே ஒரு பொதுநலத் தொண்டன். ஒரு எதார்த்தவாதி மக்கள் தொண்டு செய்வதில் பெருமைக் கொள்கையையும், சமத்துவ நோக்கையும் கொண்டு செயல்பட்ட ஒரு சமதர்மவாதி மட்டுமல்ல, முற்போக்கு எண்ணம் கொண்ட உண்மையான, நேர்மையான கடமை வீரனுமாவார். அவரைப்பற்றிய பொதுக் கருத்தானது, அவர் தனது இறுதிக் காலம் வரை ஓர் துறவியாக தொழிற்சங்கப் பணியில் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டதேயாகும். அவரைப்பற்றிய ஓர் தெளிவான விளக்கத்தை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது என்றாலும், வீ.கே.வெள்ளையன் அவர்கள் இ.தொ.காவைவிட்டு வெளியேறியதற்கான உண்மை நிலையை இங்கு எடுத்துக்கூற வேண்டியது அவசியமாகிறது.

செனட்டர் பதவி கிடைக்கவில்லையென்றோ அல்லது தான் தாழ்த்தப்பட்ட சாதியார் என்றகாரணத்தினாலோ அவர் இ.தொ.காவைவிட்டு வெளியேறவில்லை. இ.தொ.கா. முதலாளிகளின் ஸ்தாபனமாக செயற்பட்டதையும், தொழிற்சங்கத்திற்கும், தொழிலாளிக்கும் அங்கு எவ்வித மதிப்போ, மரியாதையோ இல்லையென்பதையும் உணர்ந்து கொண்ட வெள்ளையனுக்கு அந்நிலை அவரின் கொள்கைகளையும், நோக்கங்களையும், தொழிலாளர்கள் பால் அவர் கொண்டுள்ள இலட்சியங்களையும் குழிதோண்டி புதைப்பதாக இருந்தது.

என்றாலும் அவர் மனம் தளராமல் காங்கிரசில் இருந்துகொண்டே "தொழிற்சங்கத்திற்கு முதலாளிகள் தலைமை தாங்க முடியாது" என்று வாதம் செய்தார். காங்கிரசிற்குள்ளேயே இருந்து தனது கோரிக்கையை வெற்றி பெற்று இந்த ஸ்தாபனத்தை ஓர் சுதந்திர தொழிற்சங்க இயக்கமாக ஆக்குவதற்கு பாடுபட்டார். வெள்ளையனின் இந்த நியாயமான வாதம் இ.தொ.காவை ஆட்சி செய்யும் முதலாளி வர்க்கத்தினருக்கு பெரும் தலையிடியாக இருந்தது. அதோடு, முதலாளிகளின் பலமும், முதலாளித்துவ கொள்கையும் இ.தொ.காவில் பலமாக வேரூன்ற ஆரம்பித்ததால் வெள்ளையன் பெரும் நெருக்கடிகளுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆம், இ.தொ.கா. தன் அதிகாரப் பலத்தைப்பயன்படுத்தி வெள்ளையன் வகித்த பொதுச் செயலாளர், நிதிச் செயலாளர் பதவியை பறித்து உப தலைவர் பதவியை வழங்கியது. ஆனால் இதற்கெல்லாம் வீ.கே.வெள்ளையன் அவர்கள் பயந்தோ - சோர்ந்தோ போய்விடவில்லை. அவர் தனது கோரிக்கையில் உறுதியாக இருந்தார். இதனால் ஒன்றும் செய்ய முடியாத இ.தொ.கா. இறுதியாக வெள்ளையனை கூட்டங்களுக்கு அழைக்கக் கூடாது என்று முட்டுக்கட்டைப் போட்டது, அதிலும் வெற்றிபெற முடியாமல் அட்டன் காரியாலயத்தில் அவருக்கென்று போடப்பட்ட மேசையையும், நாற்காலியையும் அகற்றியது. இ.தொ.காவின் இந்த அவமரியாதையான செயற்பாட்டிற்குப் பின்பே வெள்ளையன் அவர்கள் அவராகவே காங்கிரசைவிட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இதுவே வெள்ளையன் காங்கிரசை விட்டு வெளியேறிய உண்மை நிலையாகும். இது அவரோடு பணியாற்றிய அல்லது அவரோரு நெருங்கிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும்.

அடுத்ததாக வீ.கே. வெள்ளையன் அவர்கள் தொழிலாளர் தேசிய சங்கத்தை பதவிக்காகவோ, பட்டத்திற்காகவோ அல்லது சாதிப் பிரச்சினையை ஓர் பிரச்சாரமாகக் கொண்டோ ஸ்தாபிக்கவில்லை. அவர் எந்த சூழ்நிலையில், எத்தகைய நோக்கத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தை உருவாக்கினார் என்பதை இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமாகிறது.

1942ல் இலங்கை - இந்தியன் காங்கிரசில் இணைந்த வெள்ளையன் அட்டன் மாவட்டத்தலைவராக பொதுச் செயலாளராக, நிதிச்செயலாளராக, உபதலைவராக செயற்பட்டார். இக்காலகட்டத்தில் தோட்டப்பகுதி மக்களுக்கு பல உரிமைகளை பெற்றுக்கொடுக்க போராட்டங்களை முடுக்கிவிட்டு வெற்றியும் தேடிக் கொடுத்தார். அவர் தொட்டபோராட்டம் எதுவுமே தோல்விக்கண்டதில்லை. அதுவே அவரின் திறமைக்கும், பொறுப்புக்கும் அணிகலன்களாகும். இந்த நிலையில், இலங்கை - இந்தியன் காங்கிரஸ் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று மாற்றம் செய்யப்பட்டபோது கருத்து மோதல்கள் ஏற்பட்டதும், இ.தொ.கா. முதலாளிகளின் ஸ்தாபனமாக செயற்பட்டதை உணர்ந்த அவர் "தொழிற்சங்கத்திற்கு முதலாளிகள் தலைமைதாங்க முடியாது" என்ற கொள்கை ரீதியான போராட்டத்தை முன்வைத்தார். ஆனால் முதலாளித்துவ சக்திகள் பெருகி வலிந்த காங்கிரசில் அவரின் கொள்கைப் போராட்டத்திற்கு எந்த வகையில் பரிகாரம் காணப்பட்டதென்பதையும் அதற்கான, வெள்ளையனின் முடிவையும் முன்னைய பந்தியில் சுட்டிக்காட்டியுள்ளேன்.

இ.தொ.காவை விட்டு வெளியேறி சிறிது காலம் அமைதியாக இருந்த வெள்ளையனை தொழிலாளர்கள் வற்புறுத்த ஆரம்பித்தனர். அவரின் சேவை தொழிலாளர்களுக்கு அதிமுக்கிய தேவையாக இருந்தது. காங்கிரசிற்கு எதிராகப்போராட வேண்டும். அதற்கென்று ஓர் தொழிற்சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று தொழிலாளர்கள் வெள்ளையனை வற்புறுத்தினார்கள். இன்னொரு தொழிற்சங்கமாக? இது வெள்ளையனுக்கு ஓர் கேள்விக்குறியாக இருந்தது. தொழிலாளர்களை கூறுபோடுவதை அவர் விரும்பவில்லை. இருந்தபோதும் நாளுக்கு நாள் தொழிலாளர்களின் வற்புறுத்தல் அதிகரிக்கவே தொழிற்சங்கம் அமைப்பதென்று முடிவு செய்தார். அதன்படி ஸ்தாபிக்கப்பட்டதே தொழிலாளர் தேசிய சங்கமாகும். ஆனால் இந்த ஸ்தாபனத்தை ஓர் கொள்கையை முன்வைத்தே ஸ்தாபித்தார் என்பதை இங்கே இந்தச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட வேண்டியது சாலப்பொருத்தமானதாகும். அக்கொள்கை யாதெனில், "இந்த தொழிலாளர் தேசிய சங்கம் தொழிலாளர் தலைமையிலேதான் இயங்கும். நான் ஓர் சேவையாளனாகவே செயல்படுவேன்" என்பதேயாகும். ஆனால் பதவிக்கோ, பட்டத்திற்கோ அவர் ஆசைப்பட்டிருந்தால் அன்றே அவர் இச்சங்கத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்றிருப்பார். அவரின் கொள்கைக் கேற்பவே இன்றும் இந்தச்சங்கம் தொழிலாளர் தலைமையில் இயங்கும் ஓர் தொழிற்சங்கமாக செயற்பட்டு வருகிறது.

வெள்ளையன் அவர்களின் குணநலன்கள் பற்றிய பல உயர் அதிகாரிகள் எந்தவகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை கீழே காணலாம்.

முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் டி.டபிள்யூ. ராஜரட்ணம் குறிப்பிடுகையில்:- "லயத்திலிருந்து கண்டி திருத்துவக்கல்லூரிக்கு வந்த வெள்ளையன் ஒரு முற்போக்கான மாணவனாக ஒரு தலைவனுக்குரிய நல்லியல்புகளின் கவர்ச்சியால் மாணவர்கள், ஆசிரியர்கள் சகலரினதும் மனதைக் கவர்ந்து எங்களுக்கெல்லாம் சமத்துவத்தை போதிக்கும் ஒரு தோழனாக ஒரு பிடிமேலாக நின்ற அவரை திருத்துவக்கல்லூரி சட்டாம்பிள்ளையாக நியமித்தார்கள்" என்று குறிப்பிடுகிறார்.

முன்னாள் வழக்கறிஞர் ஜீ.எல். மோத்தா குறிப்பிடுகையில்:- "தொழிலாளர்களின் உண்மையான தோழன். தோட்டத்துரைமார்களுக்கு கர்ச்சனை செய்யும் சிங்கமாக திகழ்ந்தவர். மற்றவர்களிடத்தில் இல்லாத குணநலன், சிறப்புகள், முற்போக்கு சிந்தனையுள்ளவர். கம்யூனிஸ்ட் என்று தன்னை பறை சாற்றிக்கொள்ளாவிட்டாலும், உண்மையான கம்யூனிஸ்டாக, சமத்துவம், சமதர்மம் என்ற கொள்கையை உறுதியாகக்கடைபிடித்தவர். இதனாலேயே இ.தொ.காவுக்கும், இவருக்கும் ஒத்துப்போகவில்லை. அடிக்கடி கருத்து மோதல்கள், கொள்கை விளக்கங்கள் ஏற்பட்டன. அந்த சமயங்களிலெல்லாம் மலையக காந்தி கே. இராலிங்கம், மலையக மக்கள் தலைவர் எஸ். சோமசுந்தரம் போன்றவர்கள் தினவெடுத்த தோளுக்கு மருந்தாக அவரை தட்டிக்கொடுத்து அமைதிபடுத்தி மக்கள் தொண்டுக்கு முன்னுரிமை வழங்குமாறு வெள்ளையனை உற்சாகப்படுத்துவார்கள்" என்று குறிப்பிட்டார்.

முன்னாள் உதவித்தொழில் ஆணையாளர் பொன் நவரத்தினம் குறிப்பிடுகையில்:- "சிறுவயது முதலே மனிதாபிமானமும், தலைமையேற்கும் தகுதியும், எளிய மக்களுக்கு தொண்டு செய்யும் பண்பும் வெள்ளையனிடம் பரந்து காணப்பட்டது.

அவரது திறமை வகுப்பறையில் மாத்திரமல்ல,. விளையாட்டுத் துறையிலும், சிறந்தோங்கி "ரகர் சிங்கம்" எனப்பெயர் பெற்றவர்: தன்னலம் கருதாத எதார்த்தவாதி. காங்கிரசிற்குள் அவர் கால் வைக்காவிட்டால் திறந்த கம்யூனிஸ்வாதியாக திகழ்ந்திருப்பார். காங்கிரஸ் பலமான இயக்கமாக வளர இவரின் பங்களிப்பு பிரமாதமானது. ஆனால் அங்கு முதலாளித்துவவாதிகளின் பலம் ஓங்கியிருந்தால் இவருக்கு அடிக்கடி நெருக்கடி ஏற்பட்டது. என்றாலும் அதை பொறுமையோடு ஏற்று தொண்டு செய்த தியாகியாவார்" என்று குறிப்பிட்டார்.

முன்னாள் உதவித்தொழில் ஆணையாளர் ஜீ.ஞானமுத்து கருத்து தெரிவிக்கையில்:- "வெள்ளையன் அவர்களின் தியாக உணர்வு என்னை மாத்திரமல்ல, அனைவரையும் கவர்ந்த ஒன்றாகும். அவரிடம் ஒளிவு - மறைவு என்று எதுவுமே இல்லை. உள்ளமும் வெள்ளை, பெயரும் வெள்ளையன். அதேபோல் அவரின் செயலும் தூய்மையும், தியாகமும் நிறைந்தது. அவர் மானுட வர்க்கத்தின் விடுதலைக்கு வித்திடப்பிறந்தவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் கருத்துக்கள் மூலம் வெள்ளையன் பதவிக்காகவோ, பட்டத்திற்காகவோ ஏங்கும் ஓர் சுயநலவாதியல்ல என்பதையும், தொழிலாளர் வர்க்கத்தின் உண்மை சேவையாளன், அவர்களின் உரிமைகளுக்காக தன் சுயநலங்களை அர்ப்பணித்த ஓர் தியாகி என்பதை நன்கு புரிந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

***டி.அய்யாத்துரை ஜே.பி.***

# 'கொஞ்சம்...

பெறுவதும் (ப140) சிக்கலை அதிகமாக்குகிறது. புதுக்கவிதை தவிர்ந்த சமகாலக் கவிதை நவீன கவிதையெனின், "பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு நவீன கவிதை இலங்கையிலேயே உயிரோட்டத்துடன் விளங்குகிறது", என்ற கூற்றை இன்றைய நிலையிலும் நம்மாற் கூற முடியுமா? நூலாசிரியரின் நவீன கவிஞர் பட்டியலிலிருந்து நுஃமான் புதுக்கவிதையை நோக்கிப் பெயரத் தொடங்கி விட்டாரேன ஊகிக்கிறேன். மஹாகவியும் நீலாவணனும் சில்லையூர் செல்வராசானும் இன்று இல்லை. முருகையனே மரபு வடிவில் நவீன சிந்தனைகளைக் கூறும் ஒரு சீரிய படைப்பாளியாக எஞ்சியுள்ளார். உயிரோட்டத்துக்கு இது போதுமானதா?

சிறுகதை, நாவல்கள் பற்றிய பகுதிகளில் நூலாசிரியர் எந்த விதமான திறனாய்வு ஆற்றல்களையும் பயன்படுத்த முயன்றதாகவே தெரியவில்லை. புலம்பெயர்ந்த ஈழத்துப் படைப்பாளிகளது ஆக்கங்கள் பற்றிய அக்கறையே தென்படவில்லை என்பது வருந்தத்தக்கது.

நாடகத்துறை பற்றிய கூற்றுக்கள், சிவத்தம்பி போன்றோர் (நெஞ்சார அறிந்தும்) குறிப்பிட மறுக்கும் அவைக்காற்றுக்கலைக் கழகப் பங்களிப்புக்கள் பற்றிய ஒரு தவறான பார்வையை முன்வைப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. அவைக்காற்றுக் கலகம் இலங்கையில் மேடையேறியவை பெரும்பாலும் மொழி பெயர்ப்புக்களே என்ற மயக்கத்தை வளர்த்து அவர்களது நாடகங்கள் பெற்றுவந்த பரவலான வரவேற்பை இன்னமும் மூடிக்கட்ட வேண்டிய நிர்ப்பந்தந்தான் என்ன? நாடகங்களை மீளவும் மீளவும் நிகழ்த்தி நாடகங்கட்கான ஒரு நிலையான ரசிகர் குழாமை வளர்த்தெடுக்கும் நாடக இயக்கமாக அவர்கள் ஆற்றிய பணி பெரியது. இதுவே அவர்கட்குப் புலம்பெயர்ந்த சூழலிலும் வழிகாட்டும் நாடகக் கொகையாகும்.

சமூக - அரசியல் முனைப்புடைய இலக்கியம் தொடர்பாக நூலாசிரியர் கூறியவை சிலவும் கடுமையாக மறுக்க வேண்டியன. உதாரணமாக, "இப்பரம்பரையில் மறுசாரர், எத்தகைய கோட்பாடுகளையும் வரிந்து கொள்ளாமல் இலக்கியவாதிக்குரிய மனிதாபிமான உணர்வின் அடிப்படையில், சமூகத்தின் பல்வேறு கோலங்ளையும், பிரச்சினைகளையும் இலக்கிய உணர்வுடன் புலப்படுத்த முனைந்தனர். (ப.163)

உண்மையிலேயே கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட படைப்பும், படைப்பாளியும் இருக்க முடியுமா என்பது ஒரு பயனுள்ள கேள்வி. கடந்து சென்ற நூற்றாண்டுகளின் உன்னதமான படைப்புக்கள் பலவற்றினூடும், மதம், அரசியல் போன்றவை தெளிவாக இழையூடவில்லையா? ஆறுமுக நாவலரது சைவமும் தமிழும் சாதியத்தையும் வரித்துக்கொண்டு போனதுபற்றி நூலாசிரியர் காணத் தவறுவதை நோக்கும் போது இலக்கியத்தில் அரசியல் என்னவோ இந்த அரை நூற்றாண்டுக்குரிய விடயங்களெனவே அவர் கூறுகிறாரோ என ஐயுற நேரிடுகிறது.

சில படைப்பாளிகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம்; சில பேர் சில இடங்களில் அமையும் முறையும் (சிறப்பாக, கே.எஸ். சிவகுமாரனின் பேர் புதுக்கவிதையாளர் என்ற வகையில் ராமலிங்கத்தினதிற்கும், மு. பொன்னம்பலத்தினதிற்கும் நடுவே அமைவது (ப. 132) நூலாசிரியரது அளவு கோல்கள் பற்றி வியக்க வைக்கின்றன.

இந்த நூல் குறிப்பான இலக்கியப் போக்குகளைச் சமூகவியல் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் தொடர்புப் படுத்தி விவரிக்கும் என்ற எதிர்பார்ப்பு நூலை வாசித்துக் கொண்டு போகும் போதே தகர்ந்து விடுகிறது. நூலாசிரியரது விமர்சனத்துறை அனுபவம் நூலுக்கு எந்த வகையில் வலிமை சேர்க்கிறது என்பது நூலாசிரியர் தன்னையே கேட்க வேண்டிய கேள்வி.

பல பயனுள்ள தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ் நூல்கட்கே உரிய சிறப்பான அச்சுத் தவறுகள் இந்த நூலுக்குள் சொற்பம் இருந்தாலும், அவற்றைத் தவிர்ப்பதில் காட்டப்பட்ட பெருங்கவனம் பாராட்டத்தக்கது. சான்றாதாரங்கள் சிறிது பொறுப்பான முறையில் வழங்கப்பட்டமையும் பெயர்கள், நூல்கள் சஞ்சிகைகளும், பொருள் ஆகியவற்றுக்கான அகர வரிசைப்பட்டி கவனத்துடன் தரப்பட்டமையும் மிகவும் மகிழ்ச்சிக்குரியன.

மொத்தத்தில் அனுபவமிக்கு பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளரிடமிருந்து இதை விட அதிகமாக நாம் எதிர்பார்க்க வேண்டும். தவறினால் தமிழ்த் திறனாய்வு உயர முடியாது.

***சி.சிவசேகரம்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை
"'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380.
தொலை மடல் : 594229.

## இன்னொரு முனையிலும் யுத்தமா?

செய்தி வெளியீட்டுக்கு தடை விதிக்கும் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு ஒரு மாதகாலமாகப்போகிறது.

வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தம் தொடர்பான செய்திகளை வெளியிடுவதன் மூலமாக, அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கைகள், பலவீனமடைகின்றன. "எதிரிக்குத் தேவையான தகவல்கள் போகின்றன" என்பது இதற்கு தெரிவிக்கப்பட்ட அரசதரப்புக் காரணம்.

பாராளுமன்றத்திலும் பத்திரிகையாளர் மாநாட்டிலும் பேசப்படுகின்ற தகவல்களைத் தவிர மற்ற எல்லா தகவல்களும் மொத்தமாக இருட்டடிப்பு செய்யப்பட்டு வருகின்றன.

உள்நாட்டுச் செய்தியாளர்களுக்கு மட்டுமல்லாமல், வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கும் விதிக்கப்பட்ட இந்தத் தணிக்கை மூலமாக அரசாங்கம் சாதித்ததெல்லாம், இலங்கை மக்களுக்கு உண்மைகளை மூடி மறைத்தது மட்டுமே.

வெளிநாடுகளுக்கு எப்படியோ தகவல்கள் போய்க்கொண்டு தான் இருக்கின்றன. இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் லண்டன் பி.பி.சி. ஒலிபரப்பினூடாக வெளிவரும், தகவல்களை தடை செய்யும் அதிகாரம், அரசுக்குக் கிடையாது என்று அறிவித்துள்ளார் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிப்பாளர்.

உண்மையில், இந்தத் தடையின் மூலமாக அரசாங்கம், உள்நாட்டில் ஏற்படக்கூடிய அரசியல் நெருக்கடிகளை சமாளிக்க முயல்கிறதே ஒழிய வேறு எந்த விதத்திலும் அது தனது நோக்கத்தில் முன்னேற்றத்தைக் கண்டதாகத் தெரியவில்லை.

வெளிநாட்டுத் தொடர்பு சாதனங்களுக்கூடாக கிடைக்கும் தகவல்களின்படி அரசு கூறியது போல யுத்தத்திலும் ஒன்றும் பெரிய சாதனையை அது சாதித்ததாகக் கொள்ள முடியவில்லை. "தணிக்கை" யுத்தத்தில் அதற்கு முன்னேறிச் செல்ல வாய்ப்பளித்திருப்பதாக இலங்கை ரூபவாஹினி மற்றும் அரச சார்புத் தொடர்பு சாதனங்களை நம்பிக்கொண்டிருப்பவர்கள் மட்டுமே கூறுவர். நிலைமை தலைகீழாகவே உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபரங்களைத் தெளிவாகத் தெரிவிக்க முடியாத நிலை தொடர்பு சாதனங்களுக்கு.

யுத்தம் நடாத்தப்படுகின்ற வேகத்தில் நாளாந்தம் பலமில்லியன் ரூபாய்கள் வீணாகிப் போய்க் கொண்டுடிருக்கின்றன.

வடக்கிலுள்ள இடம் பெயர்ந்து அகதி வாழ்க்கை வாழும் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்களை வெட்டிக் குறைத்திருக்கும் அரசாங்கம் எதிர் கொள்ளும் பாரிய நிதி நெருக்கடியே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

பதவிக்கு வந்தபோது யுத்தத்தினை நிறுத்துவதன் மூலம் பெருமளவு செலவை மீதம் பிடிக்கலாம் என்று கூறிய அரசாங்கம் இப்போது மீதம்பிடிக்க அந்த வழியை விட்டுவிட்டு அகதிகளின் நிவாரணத்தின் மீது கை வைத்திருக்கிறது!

யுத்திற்கு செலவாகும் பணத்துடன் ஒப்பிடுகையில் இந்த அகதிகட்கு தேவையான தொகை ஒரு துளி கூடப்பெறாது. ஆயினும் அரசாங்கம் அந்த ஒருதுளியை மீதப்படுத்துபதை யுத்தத்தினை நிறுத்துவதை விட மேலானது என்று கருதுகிறது.

"யுத்தத்தை நிறுத்தும்படி யாரும் அரசாங்கத்தை கோரவில்லை" என்று இதற்கு காரணம் சொல்கிறார் நிதித்துறைப் பிரதியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.

"யுத்தத்தை நடத்துங்கள்" என அவருக்கு மக்கள் எப்போது ஆணையிட்ட கள் என்பதை அவரைத்தான் கேட்டு தெரிந்து கொள்ள வே டும்.

தணிக்கையையும் நிறுத்தும்படி யாரும் கோரவில்லை என்றும் அமைச்சர், இன்னும் சிலநாள் போக, சொன்னாலும் ஆச்சரியமில்லை. மக்களின் அடிப்படை உரிமையை - உண்மையை அறிந்து கொள்ளும் உரிமையை மறுத்து நாட்டின் இன்னொரு பகுதி மக்கள் மீது யுத்தத்தை நடாத்திக் கொண்டிருக்கும் அரசாங்கம், தனது நிதி நெருக்கடியை தீர்க்க செய்துள்ள தெரிவும் அதே மக்கள் வயிற்றில் அடிப்பதுதான்!

இது, இன்னொரு முனையில் அந்த மக்களுக்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ள யுத்தம்.

அவர்களை குண்டுபோட்டு மட்டுமல்ல, பட்டினி போட்டும் கொல்லுவோம் என்று அறிவிக்கிற யுத்தம்.

இந்த யுத்தத்தையும் நிறுத்துமாறு கோரயாரும் கிடையாதா?

## சேட்டைவிடும் இராணுவத்தார்!

தென்மராட்சி வரணிப்பகுதியில் இப்போதெல்லாம் இராணுவத்தினர் பெண்களுடன் பாலியல் ரீதியான சேட்டைகள் விடுவது அதிகரித்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வரணியிலுள்ள கிராம சேவகர் ஒருவரின் வீட்டில் புகுந்த இராணுவத்தினர் அவ்வீட்டிலிருந்த கிராமசேவையாளரின் மகளுடன் சேட்டை விட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்னொரு சம்பவத்தின் போது ஒரு இராணுவத்தினன், வீடொன்றில் புகுந்து அங்கிருந்த இளம்பெண் ஒருவரை வீட்டின் அறைக்குள் தள்ளிப் பூட்டிக்கொண்டு சேட்டைவிட முயன்றுள்ளார். அப்போது கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த தாயார் சத்தம் போடவே அயல் வீட்டிலிருந்தவர்கள் ஓடிவந்து அறையை உடைத்து இராணுவத்தினனை அடித்து விரட்டியுள்ளனர்.

இன்னொரு சம்பவத்தின்போது, வரணி ஆஸ்பத்திரியில் கடமை புரியும் தாதி உதவியாளர் ஒருவருடனும், இவர்கள் தமது பாலியல் சேட்டையைக் காட்டியுள்ளதாக தெரியவருகிறது.

## புளொட்டுக்கும் முடியவில்லை!

புளொட் இயக்கத்தைச் சேர்ந்த சுமன் என்ற இளைஞர் ஒருவர் யாழ் வைத்தியசாலையில் வைத்து கடந்த 30ம்திகதி இராணுவத்தினரால் புலி என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

புளொட் இயக்கத்தினர் எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் இராணுவத் தளபதி சுசந்த மெண்டிஸ் உடன் பேசியும் அவரை விடுவிக்க முடியவில்லை. இப்போது அவர் காங்கேசன்துறையில் உள்ள இராணுவ தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டு வருகிறது.

அங்கிருந்து அவர் தமது புளொட் தோழர்களுக்கு ஐ.சி.ஆர்.சி. மூலமாக கடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் 'நான் எந்தத் தவறும் செய்யாததால் எப்படியும் விடுவிக்கப்படுவேன் என்று நம்புகிறேன்' என்று அவர் தெரிவித்துள்ளதாக' தெரியவருகிறது.

## விளம்பரத்திற்கு தடை!

பலாலி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரால் ஒலிபரப்பப்படும் யாழ்ப்பாண ஒலிபரப்பு சேவையில் இப்போதெல்லாம் எந்த விளம்பரங்களும் வெளிவருவதில்லை.

யாழ் நகரிலுள்ள வியாபார ஸ்தலங்களின் பெருந்தொகையான விளம்பரங்கள் வெளிவந்து கொண்டிருந்த இந்த சேவையில் இப்போது அவை வெளிவருவது நின்று விட்டதற்கு காரணம் ஒலிபரப்பு சேவை விளம்பரங்களை நிறுத்திவிட்டதல்ல.

சங்கிலியன் படையினரால் விளம்பர முகவர்களுக்கும் விளம்பர தரகர்களுக்கும் வழங்கப்பட்ட 'விளம்பரம் கொடுக்கக் கூடாது' என்ற எச்சரிக்கையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. டைப் செய்யுப்பட்டு போட்டோப் பிரதி எடுக்கப்பட்ட பிரசுரம் ஒன்றின் மூலம் இந்த எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மொழி ...

கூட்டமொன்றினால் ஏதாவது ஒரு மொழிக்காக தெரிவுசெய்யப்படும் அர்த்த வேறுபாடுகளை ஏற்படுத்தும் ஒலி முழுமை அம் மொழியின் ஒலித் தொகுதியாகும். அவ் ஒலி ஒன்று சேர்ப்பினால் சொற்களும், சொல் ஒன்று சேர்ப்பால் பெயர், வினை அடங்கிய சொற்றொடர்களும், சொற்றொடர் ஒன்று சேர்ப்பால் முழுமையான வசனங்களும் அமையப்பெறும். இலங்கைத் தமிழ் என எமக்குத் தெரிந்த தமிழானது இதன்படி ஒலி, சொல் வசனங்கள் என்று ஏனைய அனைத்துத் தமிழ் உப மொழிகளிலிருந்து வேறுபடும். இது இலங்கைத் தமிழின் உண்மை அடையாளமாகும். இவ் அடையளாத்தைக் கருத்திலெடுக்காது தமிழ் என்பது ''தமில'' என மாற்றிப் பாவிப்பதனூடாக மட்டும் இலங்கைத் தமிழ் மக்களின் இன அடையாளத்தை இனங்காண்பது நடைபெறாது.

எல்லா மொழியுமே அம் மொழியியல் சமூக மற்றும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும்.மொழி என்பது ஏதாவது மொழியியல் சமூகமொன்றின் எண்ணம், பிரார்த்தனை, மனோபாவம், நம்பிக்கை, விசுவாசம், உலகநோக்கு, வரலாறு, இலக்கியம் ஆகியன மட்டுமன்றி அம் மொழியியல் சமூகத்துக்கே உரிய பாரம்பரியமான உணவு, ஊன், உடை, அலங்காரம் ஆகிய அநேக விடயங்களை உள்ளடக்கியுள்ள புதுமையான ஒரு பிரதிபிம்பம் ஆகும். உதாரணமாகச் சிங்கள மொழியில் இவ்வாறான கூற்றுக்கள் பற்றி விசாரித்துப் பாருங்கள். ''பால் மரத்துக்குக் குத்தியது போல்'', ''பறங்கியன் கோட்டைக்குச் சென்றது போல்'' போன்ற கூற்றுக்கள் எவ்வளவுக்கு சொல்லப்பட்ட மொழி மற்றும் மொழிமய சமூகத்துடன் இணைந்து காணப்படுகிறது எனறால், இவ்வாறான கலாசாரக் கூற்றுக்களை அச்சொல்லுக்குரிய நேரடி அர்த்தத்தில் வேற்று மொழியொன்றுக்கு மொழி பெயர்ப்புச் செய்யக் கூட முடியாத அளவுக்கு இணைந்து காணப்படுகிறது.

இதன்படி கலாசாரத்திலிருந்து வேறுபடுத்திய மொழியும், மொழியாளரும் தண்ணீரிலிருந்து பிரித்த மீனைப் போன்றதாகும். மீனுக்கும், தண்ணீருக்கும் இடையேயுள்ள உறவுக்கும் மொழியியாளருக்கும் மொழி மற்றும் கலாசாரத்துக்கும் இடையேயும் நிலவும் உறவு தமிழ் மொழி தொடர்பாகவும் இந்நிலைமையில் வேறுபாடு இல்லை. 'குங்குமப் பொட்டை அழிச்சார்', 'தாலி அறுத்தார்' போன்ற கூற்றுக்கள் சொல் அர்த்தத்தில் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டால் அதன் கருத்து முறையே நெற்றியிலுள்ள சிவப்புப் பொட்டை அழித்தார், தாலியை அறுத்து எறிந்தார் என்பதாகும். ஆனாலும், தமிழ் சுய மொழியாளர் ஒருவருக்கு இக்கூற்றுக்களின் அர்த்தம், வெறும் சொல் அர்த்தத்துக்கு மேலான கலாசாரச் சுற்றாடலுடன் இணைந்த ஒன்றாகும். இக்கூற்று இரண்டிற்குமே உரிய கலாசாரக் கருத்தானது திருமணமான பெண் ஒருவர் தமது கணவரை இழந்தார் (கணவரைக் கொன்றார்) என்ற கருத்தாகும்.

யாராவது மொழியியலாளரொருவர் தமது மொழி, கலாசாரம் மற்றும் அதற்குத் தேவையான சூழலை விரும்புவது; அதற்காகப் போராடுவது; அதற்காக உயிரை விடுவது ஏனைய கலாசாரங்கள் தொடர்பாகக் கவனிக்காததால் அல்லது ஏனைய கலாசாரங்கள் தொடர்பான பொறாமையினால் என்ற முடிவுக்கு வருவது முரண்பாட்டின் ஒரு பக்கத்தை மட்டுமே நோக்குவதாகும். இவை ஏதாவது இன சமூகமொன்றின் அடையாளம் மற்றும் இருப்பு பற்றிய அடிப்படைக் காரணி என்பது விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். தமது மொழி, மற்றும் கலாசாரத்தினூடாக இதனை மிகவும் எளிதாக விளங்கிக் கொள்ள முடியும்.

ஏதாவது இனமொன்றின் அடையாளத்தை தீர்மானிக்கும் இன்னொரு முக்கிய காரணி சமயம் ஆகும். சிங்களம் எனப்படுவது ஒரு மொழி. ஆனால், சிங்கள நாட்டின் இன அடையாளத்தின் முக்கிய அம்சம் பௌத்தம் ஆகும்.

இவ்வாறே, இலங்கைத் தமிழர்கள் தொடர்பான இன அடையாளத்தின் முக்கிய காரணி சைவம் ஆகும். இந்தியத் தமிழர்களின் இன உறுதிக்காக சைவமா அவசியமான காரணி அல்ல. ஆனாலும், இலங்கைத் தமிழர் இன உறுதிக்கு சைவம் அவசியமான காரணியாகும். இது பற்றி உறுதிப் படுத்திக் கொள்ளக் கூடிய மிக முக்கியமான மொழிமயக் காரணியொன்று உள்ளது. அதாவது, இலங்கையின் தமிழர்கள் தொடர்பான தகவல்களை விசாரிக்கும் போது கேட்கப்படும் கேள்வி ''நீங்கள் தமிழா? வேதமா?' - 'நான் தமிழ்' என்று பதிலளிக்கக் கூடியதாக இருப்பது சைவத் தமிழர் ஒருவருக்கு மட்டுமேயாகும். கிறிஸ்தவத் தமிழர் ஒருவர் பதிலளிக்க வேணடியது 'நான் வேதம்' என்றாகும். 'இது தமிழ்க் கோயில்' என்பதன் கருத்து இது சைவ தமிழ்க் கோவில் என்பதாகும்.

கிறிஸ்தவ தமிழர்களின் கோயில் 'இது வேதக் கோவில்' (இது கிறிஸ்தவ) என்றே அறிமுகப் படுத்தப்படுகிறது. சைவமாவது தமிழ் எனப்படுவதன் இன உறுதி தொடர்பாக அவசியமான அங்கமாகியுள்ளது இதன் மூலம் தெளிவாகிறது.

மொழி, கலாசாரம், சமயம் போன்றன இனமொன்றின் அடையாளம், மற்றும் அவ் இனத்தின் இருப்பு என்பன தொடர்பாக எவ்வளவு தூரம் முக்கியமான உறுப்புக்களாகும் என பரஸ்பர ரீதியில் விளங்கிக்கொள்ள தவறுவதோ அல்லது அவற்றைத் தவறாக மதிப்பீடு செய்வதோ தான் இன்றைய சிக்கலின் அடிப்படைக் காரணமாகுமென மொழியுடன் தொடர்புபடுத்தி நாம் விபரித்தோம். அதாவது, இவ் அவநம்பிக்கையை நம்பிக்கையை நோக்கியும், அன்பின்மையை அன்பு நோக்கியும் சுருங்கக் கூறின் யுத்தத்தைச் சமாதானம் நோக்கியும் மாற்றும் ஆற்றல் எம்முள்ளேயே உள்ளது. ஒரு இனம் இன்னொரு இனத்தின் அடையாளத்தை விளங்கிக் கொள்வதனூடாக பரஸ்பர கௌரவத்தினூடான நட்பு மனோபாவ வளர்ச்சி தேசிய ஒற்றுமைக்கு அடிப்படையானதாகும்.

சுதந்திரம் கிடைத்து ஐம்பது வருடங்கள் கடந்து இருந்தாலும், இன்னும் நாம் அடிமை மனப்பாங்கிலிருந்து முழுமையாக விடுபடவில்லை. எம்முடையது, எம்முடையவர்கள் எனும் மதிப்பீட்டு மனநிலை இன்னும் எம்மிடையே ஆதிக்கத்தில் உள்ளது. எமது நாட்டினது சிறுபான்மை இனப்பிரிவுகளை அற்ப சொற்பமாகக் கவனிக்கும் மனோநிலை இவ் அடிமை மனநிலையின் தீமை பயக்கும் அழிவுச் சின்னமாகும். ''வெள்ளைக்காரனின் நேரமும், சிங்களவனின் நேரமும்'' போன்ற கூற்றுக்களுக்கும், ''வெள்ளைக்காரனதும், தமிழனதும் போன்ற'' போன்ற கூற்றுக்களுக்குள்ளும் எஞ்சியிருப்பது மேற்கூறிய அடிமை மனப்பாங்கே அல்லவா?

*நன்றி: றாவய 19980524*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

... இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப் பதிப்பு : பிறின்ற் இன், இல. 07, கெசுடிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 23.06.1998.